வளை ஓசை



ரமணிசந்திரன்

மனக் கோயில்

மணிசுந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை : சென்னை – 600 014.

1

''அங்கே உன்னைத் தேடிக் கொண்டு இருப்பார்கள். இங்கே கஞ்சியை ஆற்றிக் கொண்டு இருந்தால் எப்படி, சுமிக் கண்ணு? போம்மா தாயி'' என்று கெஞ்சினாள் ஆயா.

''ஊகூம்'', என்று வைர ஜிமிக்கிகள் ஒளிக்கற்றையை வாரி இறைக்கத் தலையசைத்தாள் சுமித்ரா. ''வீணே பேசிப் பேசிக் களைத்துப் போய் விடாதே ஆயா. ஓர் ஐந்தே நிமிடங் களுக்குள் என்னை யாரும் தேடித் தவித்து விடமாட்டார்கள்'' என்று கஞ்சியைக் குவளையில் ஊற்றி ஆயாவிடம் நீட்டினாள்.

சற்றுப் பொறுத்துக் கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் சுருளை விலக்கியபடி திரும்பிய சுமித்ரா கலீரென்று நகைத் தாள். ''கஞ்சியைக்குடி என்றால் அதை மறந்து என்னைப் பார்த் துக் கொண்டிருக்கிறாயே அசட்டு ஆயா'' என்று ஓடி வந்து ஆயாவின் கட்டிலில் அமர்ந்து கொண்டு 'சீக்கிரமாகக் குடி ஆயா. நான் போக வேண்டும்'' என்று அவளை அவசரப் படுத்தினாள்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு ஆயா கஞ்சியை அருந்தினாள். குவளையை வாங்கி கழுவும் இடத்தில் போட்டு விட்டு மீண்டும் கட்டிலருகில் வந்தாள் சுமித்ரா. ''நீ பாட்டில் கழுவக் கிளம்பி விடாதே ஆயா. காலையில் சின்னி வந்து கழுவுவாள். சரி இப்போது பார். எப்படி இருக்கிறது என் அலங்

காரம்?'' என்று இடுப்பில் கை வைத்து ஒரு முறை சுழன்று காட்டினாள்.

ஆயாவின் வாயில் மீதமிருந்த பற்கள் அத்தனையும் தெரிந்தன. கையை நீட்டி நெட்டி முறித்தாள். ''என் ராஜாத்தியம்மா, என் கண்ணு'' என்று விழிகளில் மீண்டும் அரும்பிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''அசட்டு ஆயா'' என்று நகைத்து ஆயாவின் வற்றிச் சுருங்கிய கையைப் பற்றி தன் மெல்லிதழ்களைப் பதித்தாள் சுமித்ரா. கைக்குட்டையை எடுத்து ஆயாவின் விழி நீரை மிருதுவாக ஒற்றியெடுத்தாள். ''இனிப் பேசாமல் படுத்துத் தூங்கு.'' என்று தலையணையை அணைவாகக் கொடுத்து ஆயாவை வசதியாகப் படுக்க வைத்தாள்.

ஆயாவின் ஒளி மங்கிய விழிகள் பெண்ணை ஆர்வத்துடன் விழுங்கிப் பசி தீர்த்தன. ''இனி இவளுக்கு ஒரு பெண் பிறந்து அதைத் தன் கையால் தொட்டுத் தூக்கிவிட்டால் பிறகு என் நெஞ்சு நல்லபடியாக வேகும்'' என்றாள் தனக்குத்தானே.

''அதெப்படி ஆயா?'' என்றாள் சுமி சாதுவாக.

''எது கண்ணு''

''என் பெண்ணுடைய பெண்ணைத் தூக்காமல் உன் நெஞ்சு நல்லபடியாக எப்படி வேகும்?'' என்று கண்களை விரித்து வியப்பைக் காட்டிப் பேசியவள் உடனே பாவனை மாறி கண்களில் குறும்புடன் கலீலென்று நகைத்தாள்.

''போக்கிரிப் பெண்'' என்று செல்லமாக வைதுவிட்டு ஆயாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள். ''சரி சரி சீக்கிரம் போ. இன்றே காக்க வைத்துவிட்டாய் என்று மாப்பிள்ளை கோபித்துக்கொள்ளப் போகிறார்?'' என்று எச்சரித்தாள்.

"என்னைப் பார்த்தால் அதன் பிறகும் கோபம் நிலைக்குமா ஆயா? அதுவும் இன்றைக்கு?" என்று கண் சிமிட்டினாள் சுமித்ரா.

ஆயாவின் முகத்தில் சற்றுக் கவலை தோன்றியது. "அப்படி மெத்தனமாக இராதே சுமி. மாப்பிள்ளை முகத்தைப் பார்த்தால் கொஞ்சம் கோபக்காரர் – அல்லது கண்டிப்பானவர் போலத் தெரிகிறது."

"அட நீ பார்த்தாயா ஆயா? எப்படி இருக்கிறார் சொல்லு ஆயா" என்று குழந்தை போலக் கெஞ்சினாள். உடனேயே யோசனையுடன் "ஆமாம் நீ எப்படிப் பார்த்தாய் ஆயா? என்று வினவினாள்.

"முருகு என்னைத் தூக்கி வந்து காட்டினாள் கண்ணு,"

"ம்ம்ம்...! டாக்டரிடம் சொல்கிறேன் பார்" என்று ஆள் காட்டி விரலைக் காட்டி மிரட்டினாள் சுமி.

அசடு வழியச் சிரித்தாள் முதியவள்.

"அல்லது அப்பாவிடம் புகார் பண்ணலாமா? எது நல்லது ஆயா?" என்று தலையைச் சரித்து யோசிப்பது போல் நடித்தாள் சுமித்ரா.

"சொல்லுவாய்; சொல்லுவாய். பின்னே நானும் நீ இந்த நேரத்தில் இங்கு வந்தது பற்றி அப்பாவிடம் சொல்ல மாட்டேனா?" என்று பதிலுக்கு மிரட்டினாள் ஆயா. "ஓடு ஓடு. சீக்கிரம் போம்மா. வரவேற்புக்குப் பெண்ணைக் காணோம் என்று பதறிக்கொண்டு இருப்பார்கள்..." எனும்போது அவர் அயர்வ தைக் கண்டாள் சுமித்ரா.

"அடடா. பேசிப் பேசி உன்னைக் களைப்படையச் செய்து விட்டேனே. நன்றாகப் படுத்துக்கொள் ஆயா, தூங்கு நான்

நாளை வருகிறேன்'' என்று அவளுக்கு கவனத்துடன் போர்த்தி விட்டு அகன்றாள் சுமித்ரா.

''நாளை ஆயாவை மருத்துவ மனைக்கு அனுப்ப வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டே அந்தப் பெரிய காம்பவுண்டின் மூலையில் இருந்த 'அவுட் ஹவு'சைத் தாண்டி னாள் சுமித்ரா. ஒரு கேள்விக்கு ஆயாவின் பதிலைப் பெறா தது ஏனோ நினைவில் உறுத்தியது. ''அவர் எப்படி இருக்கி றார். என்ற கேள்விக்கு ஆயா பதில் சொல்லவில்லையே. ஆனால் அவள் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லைதான்.

தோழிகள் அத்தனைப் பேரும்தான் ஒரு முகமாகச் சொன் னார்களே. ''ராஜா மாதிரி இருப்பதாக'' அந்த நடிகர் மாதிரி ஜாடை இந்த நடிகர் மாதிரி ஸ்டைல் என்று அவர்கள் ஒரு வருக்கொருவர் சச்சரவிட்டதை நினைக்கும்போது சுமிக்குச் சிரிப்பு வந்தது. அதிலும் ரேகாவுக்குத் தாங்கவில்லை.

''பணம் இருந்தால் இப்படி ஆறடி உயரம் அழகிய தோற்றம் என்று செதுக்கிய சிலை மாதிரி மாப்பிள்ளையைப் பொறுக்கி எடுக்கலாம். அவர் ராஜா மாதிரி இருப்பதில் என்னடி ஆச்சரியம்?' என்று பொறாமையுடன் காய்ந்தாளே என்று புன்னகையுடன் நினைத்தாள்.

கூடவே உமா, ''அவர் ராஜா என்றால் நம் சுமி ராணி அல்லவாடி? இந்த ராணிக்குப் பொருத்தமாக அவரும் அமைந் ததுதான் இதில் அதிசயம். பார்க்கப் போனால் இதில் கொடுத்து வைத்தவர் அவர்தான்'' என்று தாங்கிக் கொண்டு வந்ததும் நினைவு வந்தது. உமா எப்போதும் அப்படித்தான். சுமியை யாரும் ஒரு வார்த்தை சொல்லி விடக்கூடாது. வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவாள். இப்போது மட்டும் விடுவாளா?

ஆனால் மற்றவர்கள் சொல்ல வேண்டுமா? சுமித்ராவுக்கே தெரியாதா? முதன் முதலில் அவன் வீட்டுக்கு வந்ததை நினைத்தாள். தன்னிச்சையாக இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. கனவில் விழிகள் மயங்கின.

சாதாரண ஹனவா பான்ட்தான். பின்னி ஷர்ட்தான் அவையும் ஓர் அரசகுமாரனின் எடுப்பான தோற்றத்தை அவனுக்கு அளித்தன. பொதுவாக அன்னியர்கள் வீடு வரை வருவதை சுமிமின் தந்தை ராமநாதன் அனுமதிப்பது இல்லை. எனவே யாரும் இருக்கக்கூடும் என்ற எண்ணமே இல்லாமல் பூச்சாடியில் மாற்றுவதற்காகக் கையில் கொத்து மலர்களுடன் அப்பாவின் வரவேற்பு அறையினுள் சென்ற மகள் சற்றுத் திடுக்கிட்டு நின்றாள்.

வாரப் பத்திரிக்கை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த அவன் ஒருமுறை நிதானமாக அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

என்னவோ அவன் வீட்டிற்குள் அனுமதியின்றி நுழைந்து விட்டாற்போல் சுமித்ரா திணறிப் போனாள்.

''அப்பாவுக்கு இரண்டு முறை பூ மாற்ற வேண்டும் அதனால்தான்'' என்று தடுமாறியவள் உதட்டைக் கடித்துத் தன் உளறலை நிறுத்தினாள். சற்று அமைதியை வரவழைத்துக் கொண்டு, ''நீங்கள் யார்?'',' என்று வினவினாள்.

பார்வை அவள் முகத்திலேயே நிலைத்திருக்க ''என் பெயர் சந்திரன்'' என்று அறிவித்தான் அவன். ''மிஸ்டர் ராமநாதன் என்னை வரச் சொல்லியிருந்தார்.!!

''அப்பா வருகிற நேரம்தான்'' என்று சொல்லி விட்டுப் பூவை சாடியில் செருகிவிட்டுப் பழைய மலர்களை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் அவள்.

''தேசத்தின் ஜனாதிபதி போலப் பெயரை அறிவிக்கிறாரே'' என்று உள்ளூர நினைத்தபடி வெளியேறிச் செல்லுகையில் ராம நாதனே வந்துவிட்டார்.

''சுமி, ஆப்பிள் சாறும் பிஸ்கட்டும் எடுத்துக் கொண்டு நீ வா'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றார் அவர். ஆச்சரியத்துடன் சுமி செல்லுகையில் சந்திரனின் கம்பீரக்குரல் ராம நாதனுக்கு ''வணக்கம்'' சொல்வது கேட்டது.

சற்றுப்பொறுத்து எல்லாப் புதிரும் விளங்கியது. அவனை காரில் அனுப்பிவிட்டு மகளிடம் திரும்பி ''மாப்பிள்ளை எப்படி இருக்கிறார் அம்மா?'' என்று பெருமையுடன் தந்தை வினவியபோது... ஆ உச்... எதையாவது எண்ணிக்கொண்டு நடந்தால் இந்த கதிதான், ரோஜாச் செடியின் கிளையில் முன் கொசுவம் சிக்கியதை சுமித்ரா கவனிக்கவே இல்லை, நடையின் வேகத்தில் ரோஜா முள்ளில் சிக்கியிருந்த சேலை அவளது காலைத் தட்டியபோது சுய உணர்வு வந்ததும் பயனில்லை. ஒரு கையைத் தரையில் ஊன்றி அமர்ந்துதான் சமாளிக்க முடிந்தது. மெல்ல எழுந்து கொண்டாள். கணவரைப் பற்றிய நினைவில் எனக்குக் கல்லும் முள்ளும் தெரியவில்லையாக்கும் என்று தன்னையே பரிகசித்தபடி முள்ளில் சிக்கிய சேலையை விடுவிக்கலானாள். உடனே முகம் வாடிப்போயிற்று. ஒரு முள் அந்த விலை உயர்ந்த சேலையின் மென்மையான சரிகை வேலைப் பாட்டில் பதிந்து இழுத்து ''ட'' வடிவில் ஓர் அங்குல நீளம் கிழிந்திருந்தது.

அப்பா பார்த்துத் தேர்ந்தெடுத்த சேலை? சித்தியுடன் சண்டை போட்டு அவளை அடக்கிவிட்டு ''ரோஜா நிறத்து வண்ணப் பட்டு'' என்று இதை வாங்கினார். உதட்டைக் கடித்துக்கொண்டு சேலையைப் பார்த்தபடி சற்றுநேரம் நின்றாள்.

நின்று என்ன பயன்? ஒரு பெருமூச்சுடன் பாதையில் கவனத்துடன் மேலே சென்றாள்.

பசேல் என்றிருந்த கொடி வீட்டின் உள்ளே புகுந்து சென்றாள். மறுபுறம் வெளியேறும்போது ஒரு பெண்ணின் விம்மல் சத்தம் கேட்டுத் திகைத்த நின்றாள்.

''தயவு பண்ணி அழாதே வசந்தி. உனக்குத்தான் என் வீட்டின் நிலவரம் நன்கு தெரியுமே. எதையேனும் விற்றாக வேண்டிய நிலைமை. விற்கக்கூடிய, நல்ல விலைக்கு போகக்கூடிய பொருளாக நான் மட்டுந்தான் மீதமிருந்தேன் என்னை நானே விற்றுக் கொண்டேன்'' என்று விரக்தியுடன் பேசிற்று ஓர் ஆண்குரல் – கம்பீரமான குரல்தான்.

இது... அந்தக் குரல்... அவர்... கடவுளே, கடவுளே சுமித்திரையின் நெஞ்சு உயர்ந்தது.

2

ஒருவேளை அந்தக் குரல் வேறு யாருடையதாக வேனும் இருக்குமோ என்ற ஓர் ஏக்கம் மிகுந்த சந்தேகம் அற்பாயுசாக மடிந்தது. விம்மிக் கொண்டிருந்த பெண் அழுகையோடு ஆத்திரமும் சேரக் குறுக்கிட்டு பேசினாள். ''அதெப்படி சந்திரன்? நீங்கள் உங்கள் வீட்டை மட்டும் எப்படி நினைக்கலாம்? ஒரு வருடகாலமாக உங்களுக்காகக் காத்திருக்கிறேனே என் கதி என்ன? ''எத்தனை காலம் சென்றாலும் சரிதான் உன் வாழ்வு என்னுடன்தான்'' என்று எனக்கு உறுதி சொன்னீர்களே'' இன்று என்னைத் தனி வாழ்வு வாழச் சொல்ல உங்களுக்கு எப்படி மனம் வந்தது? கடவுளே நான் எண்ணிப் பதினைந்து நாட்கள்

தானே ஊருக்குப் போய் வந்தேன். அதற்குள் என் உலகத் தையே அழித்து விட்டாயே'' என்று புலம்பினாள்.

''உஷ்... வசந்தி நீ அசடு அல்லவே. யாரேனும் கேட்க நேர்ந்தால் என்ன ஆகும் பார். கஷ்டம் என்றால் அது உனக்கு மட்டும்தானே? அழிந்து போனது உன் உலகம் மட்டும்தானா? என் நெஞ்சு சுக்கு நூறாக நொறுங்கிக் கிடப்பது உனக்குத் தெரியவில்லையா? அவ்வளவு வேதனையும் சகித்துக் கொண்டு நான் மாப்பிள்ளையாக வேடம் போட வேண்டிய கட்டாயம் வேறு. நாலுபேர் நடுவே என் துன்பத்தை மறைக்க நான் தவிக் கும் தவிப்பு உனக்குக் கூட புரியவில்லையா?''

உடனே அந்த வசந்தி உருகிவிட்டாள். ''அய்யோ சாரி சந்திரன். நான் என்னை மட்டுமே எண்ணிப் பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். நான்... இனி நான் போகி றேன்...?' என்றவள். ஒரு விம்மலுடன் உங்கள் வாழ்வை விட்டு அடியோடு விலகிப் போகிறேன்'' என்று வாயைப் பொத்திக் கொண்டாள்.

''வசந்தி'' என்றான் சந்திரன் குரல் கரகரத்தது. தொண் டையை செருமிக் கொண்டு ''வரவேற்புக்கு இருந்து விட்டே போ. இல்லாவிட்டால் நம் அலுவலக நண்பர்கள் சந்தேகப் படுவார்கள்.''

''என்னால் முடியாது. இன்னொருத்தி உங்கள் அருகே உரிமையுடன் நிற்பதை நான் எப்படி சகிப்பேன்? மாட்டவே மாட்டேன்'' என்று மறுத்தாள் வசந்தி.

''சொல்வதைக் கேள் வசந்தி'' என்ற சந்திரனின் குரலில் அழுத்தம் இருந்தது. ''இந்தா முகத்தைத் துடைத்துக்கொள். வலது கண்ணில் மை கலைந்துவிட்டது. இரண்டு கண்களி

லுமே துடைத்துவிடு. கொடு நானே – இல்லைமில்லை. நீயே துடைத்துக்கொள். இன்னும், கொஞ்சம். சரி வா போகலாம்.

இரு ஜோடி காலடி ஓசைகளும் மறையும்வரை தரையில் வேர் ஊன்றியது போல சுமித்ரா அசையாமல் நின்றாள். பிறகு அசைந்தாள். துணியால் செய்யப்பட்டது போலக் கால்கள் மடிந்தன. சமாளித்துக் கொண்டு அருகே இருந்த கல் பெஞ்சியில் அமர்ந்தாள். ஈசுவரா, முருகா, அம்மா...

நெற்றிப் பொட்டை விரலால் அழுத்தி விட்டாள். சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை. கண்களை இறுக மூடித் திறந்தாள்' பொய்யில்லை. எல்லாமே மெய்தான். இந்த வேதனை பொய்யில்லை. சற்று முன் கேட்ட வார்த்தைகள் கனவில்லை. காசு கொடுத்துப் பார்க்கும் திரைப்படக் காட்சியும் இல்லை, அய்யோ அப்பா உங்கள் மகளுக்கு ஒரு மாப்பிள்ளையை நீங்கள் விலைக்கா வாங்கவேண்டி வந்தது.

தலையைக் கைகளில் தாங்கிய வண்ணம் சுமித்ரா எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ அவள் அறியாள். சில காலடி ஓசைகளும் சிரிப்புச் சத்தமும் நெருங்கி வரவே திடுக்கிட்டு எழுந்தாள்.

''அலங்காரத்தை அவளுடைய ஆயாவிடம் காட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்...'' என்று உமாவின் குரல் கேட்டது,

சுமித்திராவைத்தான் தேடி வருகிறார்கள்.

சுமித்ரா அவசரமாகக் கண்களைத் தொட்டுப் பார்த்தாள். நல்ல வேளையாக அங்கே ஈரமில்லை. அதிர்ச்சி கண்ணீருக்கு இடம் தரவில்லை. ஒருவேளை அது பின்னால் வருமோ என்னவோ? எப்படியாவது இப்போது இல்லை. அது ஒரு நன்மை.

வலுக்கட்டாயமாக உதடுகளில் புன்னகையைப் பூசிக்கொண்டு வீட்டிலிருந்து வெளியே வந்தாள்.

''உமா எங்கேடி எல்லோருமாகப் போகிறீர்கள்?''

ஹை நீ இங்கேயா இருக்கிறாய்? அங்கேயானால் வர வேற்புக்குப் பெண்ணைக் கொண்டுவா என்கிறார் உன் அப்பா'' என்றாள் ஒருத்தி.

''அதற்குள் மாப்பிள்ளையைக் காக்க வைத்து விட்டாயேடி. பாவம் உன்னைக் காணாமல் அவர் முகம் வாடிவிட்டது'' என்றாள் உமா.

''வாடிவிட்டதா? என்னைக் கண்டால் இன்னமும் அதிகமாக வாடி விடுமேடி உமா'' என்று நினைத்தாள் சுமித்ரா. கண்ணில் கரிப்பு தோன்றியது. சே சே அழுகையே பொறு. உனக்கு இப்போது அவசரம் இல்லை என்று அடக்கினாள். வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

''மெள்ளடி மெள்ள. போகிற வேகத்தைப் பார்த்தால் அந்தச் சந்திரனின் காலடியில் ஓடிப்போய் விழுந்து விடுவாய் போல் இருக்கிறதே'' என்றாள் ரேகா குத்தலாக.

''இவள் ஏனடி விழுகிறாள்?'' அவர்தான் சுமியின் அழகைப் பார்த்து மயங்கி இவள் காலடியில் விழுவார்.

செவி கேளாதவள் போல் சுமித்ரா நடந்து பங்களாவின் பக்க வாயில் வழியே அவசரமாக உள்ளே சென்றாள். ''என்னம்மா நேரமாகி விட்டதே'' என்று எதிரே வந்தார் ராம நாதன்.

''இதோ ஐந்து நிமிடங்களில் வந்து விடுகிறேன் அப்பா'' என்று புன்னகை மாறாமல் கூறிவிட்டுப் படியேறினாள் மகள்.

மாடிப்படி வளைவில் இடப்பக்கமாகத் திரும்பினாள். அலங்கரித்துக் கொண்ட அறை அதுதான். உள்ளே சென்று ஆள் உயரக் கண்ணாடியில் கவனமாகப் பார்த்தாள். முகத்தில் மாற்றம் தெரியவில்லை. ஆனால் முன் கொசுவத்தில் கிழிசல் தெளிவாகவே தெரிந்தது.

''அச்சச்சோ எப்படியடி கிழிந்தது?'' என்று அனுதாபத்துடன் உள்ளே வந்தாள் உமா.

''வேகமாக வந்தபோது ரோஜா முள்ளில் சிக்கிக் கிழிந்து போயிற்று'' என்று யந்திரம் போலப் பதில் கூறினாள் சுமித்ரா.

''வீணாகிப் போயிற்றே வேறு மாற்றி விடுகிறாயா?''

கண்கள் அகல வேதனையுடன் திரும்பித் தோழியைப் பார்த்தாள் சுமித்ரா. ''வீணாகிப் போனால் உடனே மாற்றி விட முடியுமா?'' என்று வினவினாள்.

''என்னடீ?''

சுமி சுதாரித்தாள். 'ஓ ஒன்றுமில்லையடி உமா. இதை மாற்றிவிட முடியாது. அப்பா தேர்ந்தெடுத்தது. இப்படியே போகவும் முடியாது. அதனால்...'' என்று சேலையைக் களைந்தாள். கொசுவத்தை மாற்றி அமைத்துச் செருகினாள். ''இப்போது மறைந்து போயிற்று பார். அப்பாவுக்கு மனது கஷ்டப்படாது. கிழிசல் யார் கண்ணிலும் படாது'' என்றாள் ஒருவிதமான திருப்தியுடன்.

''ஆமாம் சுமி, ஒன்றும் தெரியவில்லை. இதற்குப் போய் வினாடிக்குள் என்னமாக முகம் கலங்கிப் போனாய்?'' என்று அருகில் வந்து சுமித்ரையின் முகத்தை ஏந்திக் கன்னத்தில் முத்தமிட்டாள் உமா.

சுமித்ராவின் நெஞ்சில் பட்ட காயத்துக்கு தோழியின் அன்பு இதமாக இருந்தது. மெல்ல விரிந்த புன்னகையுடன் ''வாடி உமா போகலாம்'' என்று கிளம்பினாள்.

''கொஞ்சம் ரூஜ் தடவிக் கொள்கிறாயா சுமி? முகம் சற்று வெளுப்பாகத் தெரிகிறது'' என்றாள் உமா.

''ச்சு, வேண்டாமடி'' என்று நடந்தாள் சுமித்ரா.

வரவேற்புக்கு யார் யாரோ வந்தார்கள்; சிரித்தார்கள். பரிசுகளைத் தந்தார்கள்; சென்றார்கள். தன் வகை விருந்தினரைச் சந்திரனின் டையைப் பார்த்துக் கொண்டு அவனுக்கு அறிமுகம் செய்வித்தாள். அவன் வகை விருந்தினருக்கும் உரிய பதிலை, வரவேற்பைத் தந்தாள். ஆனால் இதையெல்லாம் எப்படிச் செய்தாள் என்று கேட்டால் அது அவளுக்கே புரியாத விந்தை தான். எந்த நேரமும் இதழ்களில் புன்னகையை மறையவிடாது காப்பதிலேயே அவளது முழு கவனமும் இருந்தது. மற்றது எல்லாம் எப்படியோ தானாகவே சரியாக நடந்தன போலும்.

சந்திரன் தனது அலுவலக நண்பர்களை அறிமுகம் செய்வித்தபோது கட்டாயமான புன்னகைக்கான உதடுகளை இழுத்துப் பிரித்ததில் கண்ணமெல்லாம் வலிப்பதை உணர்ந்தாள் சுமித்ரா. ஆனால் மனத்தின் வலியுடன் ஒப்பிடுகையில் இது எம்மாத்திரம்?

கடைசியாக வசந்தி வந்தாள்.

''மிஸ் வ... வசந்தி'' என்றான் சந்திரன் சிறு தடுமாற்றத்துடன்.

இரு பெண்களின் பார்வையும் ஒன்றை ஒன்று கன நேரம் கவ்வி நின்றன.

"என் கணவனை வசீகரிக்க இவளிடம் என்ன இருக்கிறது?"

"என் சந்திரனை இவள் பணத்தாள் பறித்துக் கொண்டாளே, அவர் மனதையும் பறிப்பாளோ?"

இருவரின் பார்வைகளும் சற்றுத் தடுமாறி பிரிந்தன.

"நன்றி" என்றபடி அவள் தந்த பரிசை வாங்குகையில் சுமித்ரையின் தேகம் பதறியது. நல்ல காலமாக நடனம் பார்க்க என்று மணமக்களை அழைத்தார்கள். சோபாவில் அமர்ந்து ஒருவாறு சமாளித்தாள்.

சற்றுப் பொறுத்து சுமித்ரையுடைய சித்தி வந்து மணமக்களை உள்ளே அழைத்துச் சென்றாள்.

வளையம் வளையமாக அலங்கரித்திருந்த கொண்டையை அவிழ்த்துத் தளரப் பின்னினாள் சித்தி இரவுக்கான சற்று எளிமையான அலங்காரம் முடிவு பெறவும், தோழிகளின் கேலி எல்லை மீறலாயிற்று.

"ப்ளீஸ் ஷீலா" என்றாள் சுமி தாங்க முடியாமல்.

"நீ அவரிடம் அல்லவா "ப்ளீஸ்" போட வேண்டும் அல்லது உன்னைப் பந்தாடிவிடப் போகிறார்; டென்னீஸ் ஆட்டக் காரராமே" என்றாள் ரேகா.

சுமியின் முகம் மாறுவதைக் கண்டதும் "சும்மா இருங் கடியம்மா பெண்களா" என்று அடக்கினாள் சித்தி "வா சுமி உன்னை அப்பா அவரது அறைக்கு அழைத்து வரச் சொன்னார்" என்று அழைத்துச் சென்றாள். செல்லுகையிலேயே "பெண்களா இனி நீங்கள் மிச்சக் கச்சேரியைப் போய்ப் பாருங்கள்" என்று சுமித்ராவுடைய தோழிகளையும் அனுப்பி வைத்தாள்.

தன் அறைவாயிலிலேயே ராமநாதன் காத்திருந்தார். ''வா கண்ணம்மா'' என்று மகளை உள்ளே அழைத்துச் சென்றார்.

அறையினுள் ஊதுபத்தி மணத்தது, பெரிய அளவில் மாட்டியிருந்த படத்தில் ரோஜா மாலைக்கு இடையிலிருந்து சுமித்ராவின் தாய் சாருமதி சிரித்தாள். ''அம்மா;...'' சுமித்ரா உதட்டைக் கடித்துக்கொண்டு குனிந்தாள்.

''அம்மாவைக் கும்பிடு பாப்பா'' என்றார் ராமநாதன் கண்ணில் நீருடன்.

படத்தின் முன்னே தரையில் விழுந்து வணங்கியபோது சுமித்ரா அடக்கமாட்டாமல் விம்மினாள்.

''அழாதே சுமிம்மா. அம்மா இல்லைதான் என்ன செய்வது'' என்று மகளை எழுப்பிய தந்தையும் கலங்கிப் போனார்.

''நன்றாக இருக்கிறது இருவருமாக அழுவது. அழுது வீங்கிய கண்ணுடன் இவள் மாப்பிள்ளையின் முன்னே சென்று நின்றால் நன்றாக இருக்குமா பெரியத்தான்?

''அவள் தான் சிறுபெண், இரண்டு நல்ல வார்த்தை சொல்லி அனுப்புவதை விட்டு நீங்களும் சிறுபிள்ளை போலக் கண் கலங்குகிறீர்களே'' என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சற்று அதட்டலான பேச்சுடன், உள்ளே வந்தாள் சுமித்ராவின் சித்தி சாரதா.

தன் கண்ணை ராமநாதன் துடைத்துக் கொண்டார். ''கண்ணம்மா உன் பெயர் சுமித்திரை. இந்தப் பெயரை உனக்குச் சூட்டியவள் உன் அம்மாதான். இராமாயணத்தில் அறிவில் சிறந்த பெண்கள் சுமித்ரையும், ஊர்மிளையும். அவர்களிலும் சுமித்ரை கர்ம ஞானி என்பாள், அவளைப் போல என் மகள்

அறிவுடன் வாழவேண்டும் என்பாள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மறையும்போதும் இந்த வேளையில் உனக்கு இதை நினைவுபடுத்தும்படி சொல்லிவிட்டுத்தான் உன் அம்மா மறைந்தாள். போ அம்மா. அம்மாவின் வார்த்தை பொய்யாகாமல் நடந்துக்கொள்'' என்று ஆசி கூறினார் தந்தை.

கன்னங்களை துடைத்துக் கொண்டு சிறிட தாயைப் பின் தொடர்ந்தாள் சுமித்ரா.

''அப்பா சொன்னதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. கெட்டிக்காரியாக நடந்து கொள் சுமிக்குட்டி'' என்று கதவை வெளியே மூடிக்கொண்டு சென்றாள், சாந்தா.

சுமித்ரா நிமிர்ந்து பார்த்தாள், இருபுறமும் கைகளை ஊன்றி லேசாகச் சுளித்த புருவங்களுடன் சந்திரன் தலை குனிந்து அமர்ந்திருக்கக் கண்டாள்.

கணவன் ஆர்வத்துடன் எதிர்கொள்ள வருவான் அவன் காலடியில் விழுந்து வணங்க வேண்டும் என்றெல்லாம் செய்து வைத்திருந்த கற்பனைகள் இப்பொழுது கெக்கலி கொட்டி சிரித்தன. சுமியின் நெஞ்சமெல்லாம் பதறத் தொடங்கியது. தந்தையின் அறிவுரை சித்தியின் புத்திமதி எல்லாம் காற்றில் பறந்தன.

மூவரின் வாழ்வு பாழாகிவிட்டதே என்ற பரிதவிப்பு மூண்டது. அவனது வாழ்வை வீணாக்க அவனுக்கு உரிமை இருக்கலாம்! கன்னத்தை துடைத்து விடும் அளவுக்கு பழகிய அந்த வசந்தி, இன்று தாலி கட்டிய இந்த சுமித்ரை இவர்கள் வாழ்வைப் பொசுக்க அவனுக்கு என்ன உரிமை? யார் கொடுத்தது? இருமனம் ஒப்புதல்லவா திருமணம்? இனி இங்கே மனம் ஒப்பது எங்கே? மகிழ்வது எப்படி? அம்மா. சுமித்ரை மின் அறிவு இங்கே எந்த விதத்தில் உதவிடப் போகிறது?

அவள் வாழ்வு மலருமுன் பட்டுப் போயிற்றே. ஒரு பூவைப் பறித்து நெருப்பில் வீசி விட்டானே. எல்லாம் எதற்காக? வெறும் – வெறும் பணத்துக்காக. இந்தப் பணத்தை – தன் நிலையைச் சொல்லி அவன் கேட்டிருந்தால் சுமித்ராவே அவனுக்குக் கொடுத்திருப்பாளே. அவள் வாழ்க்கை தப்பியிருக் குமே இப்போது... இப்போது...

ஓசையற்ற பெருமூச்சுடன் சந்திரன் நிமிர்வது சுமித்ராவின் வெறித்த பார்வையில் பட்டது. தோளைக் குலுக்கிக் கொண்டு விதிக்குப் பணிபவன் போல அவன் எழுந்தான். மெல்ல மெல்ல சுமித்ராவை நோக்கி நடந்தான்.

கால்கள் நடக்க மறுக்கின்றனவாக்கும்? இருக்கும் இருக் கும். எவ்வளவு கடினமான பணியை எதிர்நோக்கிச் செல்கிறார்! கால்கள் தயங்காமல் என்ன பண்ணும்? பெருமூச்சு வேறு! அவளை அணைப்பது அவ்வளவு வேதனையா? சுமித்ராவின் நெஞ்சு கொதித்தது.

அந்தப் பெண் அந்த வசந்தியின் வெற்றிலை வடிவ முகம் நினைவு வந்தது. பந்தயக் குதிரைபோல மத மதத்த உடல் நினைவு வந்தது. அவளை எத்தனை முறை அணைத்தாரோ... என்று எண்ணுகையிலேயே மனம் அதிர்ந்து குலுங்கியது. அவளையே மணந்திருக்கலாமே! வெறும் பணத்துக்காக,

"சுமித்ரா..." அதற்குள் சுமித்ராவின் அருகில் வந்து விட்டி ருந்த சந்திரன் மனைவியின் வெறித்த பார்வையைக் கண்டு சற்றுத் திகைத்துப் பின் அழைத்தான்.

"என்ன?" என்றாள் சுமித்ரா வெடுக்கென்று.

சற்றுத் தயங்கிவிட்டு "வா சுமித்ரா" என்று அவளது கையைத் தொட்டான் அவன்.

சுமித்ராவுக்கு அதற்குமேல் சகிக்க இயலாது போயிற்று. பல ஆண்டுகளாகப் பயின்று வைத்திருந்த புலனடக்கம் பறந்தது. சட்டென்று அவன் கையைத் தட்டி அகற்றி விட்டு அவனை மிகுந்த வெறுப்புடன் பார்த்தாள். 'என் அப்பாவின் பணத்துக்கு ஒரு மாப்பிள்ளையை விலைக்கு வாங்குவது எளிதாகப் போயிற்று. ஆனால் ஒரு கணவரை விலைக்குத்தான் வாங்கியாக வேண்டும் என்றால் அது எனக்குக் கேவலம்; என் பெண்மைக் அவமானம்...'' என்றவள் மேலே பேச முடியாமல் நிறுத்தினாள். சற்று மூச்சு வாங்கிக் கொண்டு ஒரு விரலால் அந்த அறையின் இடப்பக்கச் சுவரில் இருந்த கதவைச் சுட்டிக் காட்டினாள். ''அது என் அறை? என்று மடமடவென்று அந்த அறைக்குள் சென்று கதவை உட்புறமாகத் தாளிட்டாள்.

ஒரு பெண் அவனை அவமதிப்பதா? அதிலும் மனைவி? விலையாமே, பணத்திமிரா? அவமானத்தால் முகம் கன்ற மூடிய கதவை ஆத்திரத்துடன் பார்த்துக்கொண்டு அசைவற்று நின்றான் அவன்.

கதவை மூடியவளும்கூடச் சற்று நேரம் அசைவற்றுத்தான் போனாள். மூடிய கதவையே வெறுத்தாள். அவள் முகம் அவமானத்தால் கன்றிச் சிவந்திருந்தது.

ஒருவேளை அவன் கதவைத் தட்டி அழைத்தால் என்ன செய்வது? மானமுள்ளவன் அழைக்கமாட்டான் என்று நினைத்தாள். கதவின் மறுபுறம் அரவம் இல்லை என்று கண்டதும் ஒருகணம் அமைதி கொண்டாள். மறுகணமே ''தொல்லை

விட்டது'' என்று இருப்பார் என்ற எண்ணம் தோன்றியது. கண்களில் மளமளவென்று கண்ணீர் பெருகியது தொல்லையா? நஷ்டமா? சுமியா?

மடமடவென்று டிரஸ்ஸிங் டேபிளின் எதிரே சென்றாள். ஆளுயரக் கண்ணாடிமின் முன்னே நின்று மேலே கீழே இரு மின் விளக்குகளையும் எரிய விட்டாள். சித்திமின் கை வண்ணத் தில் வானுலகத்து தேவதையே வழி தவறி வந்து விட்டாளோ என்று மயங்கும் வண்ணம் சுமித்ரா ஜொலித்தாள்.

ஏதோ தோன்றவும் வேகமாக அலங்காரங்களைக் கலைத் தாள். நகைகளை கலைத்து விட்டு வெகு சாதாரணமாக ஒரு சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டு முகம் கழுவினாள். நெற்றியில் திலகத்தை மட்டும் வைத்துக் கொண்டு கண்ணாடி மில் பார்த்தாள். இப்போது அவள் அழகுக்கு என்ன குறை? கொடி போன்ற உடல் அமைப்பும் மலர் போன்ற வட்ட முகமும் அந்த முகத்தில் தாமரை இதழ் போல நீண்டு அகன்ற கண்களும் சிவந்த இதழ்களும் அவளது அழகை மிகைப் படுத்துவது பொய்மில்லையே. கண்ணாடி பொய் உரைப்பது இல்லையே.

''என்னிடம் என்ன குறை கண்டார்? அவளைவிட நான் எதிலே தாழ்வு?'' என்று ஆத்திரத்துடன் நினைத்தாள் சுமித்ரா. உடனேயே வேறு ஒன்று தோன்றியது.

அவளது சிந்தனைமின் அடிப்படையே தவறு. சுமியை மணந்து அதன்பின் அவன் — சந்திரன் — அந்த வசந்தியை நாடவில்லையே. ஏற்கனவே அவர்கள் இருவரும் கருத்து ஒரு மித்த... ஆம் கருத்து ஒன்றுபட்ட காதலர்கள்தான். அவளுக்கு ஒப்புக்கொள்ள வேதனையாக இருந்தாலும் அது உண்மை. பணத்தாசை அல்லது பணத்தேவை அந்தக் காதலை முறித்

திருக்கிறது. வேண்டா வெறுப்பாக விஷயத்தை விழுங்குவது போல அவன் சுமித்ராவை மணந்திருக்கிறான். இதில் யார் உயர்வு யார் தாழ்வு என்று மதிப்பிடுவது மதிமீனம். ''உலகத் திலே சிறந்த அழகி என் மனைவி'' என்றாராம் ஒருவர். கருத் தைக் கவர்ந்தவள் அழகில் சிறந்தவள். அந்த வகையில் வசந்தி உயர்ந்தவளே. சுமி மிகமிகத் தாழ்ந்து போனவளே.

கண்ணைத் துடைத்துக் கொண்டே சுமித்ரா சிந்தித்தாள். அதெல்லாம் முடிந்து போன விஷயங்கள். இனி என்ன செய்வது? கணவனது காதல் சுமித்ரைக்கு இல்லை என்று முடிந்து போயிற்று. அதைப் பெறுவதை பற்றியோ, வளர்ப்பது பற்றியோ நினைத்துப் பார்ப்பது செத்த குழந்தைக்கு ஜாதகம் பார்ப்பது போலத்தான். அதைப்பற்றி நினைப்பதே வீண். விட்டு விடலாம்.

விட்டு விட்டுப் பின்னே எப்படி வாழ்வது. இனி வாழ்க் கையைச் செலுத்தும் வகைதான் என்ன! சற்று முன் வேண்டா வெறுப்பாக அவளை ஏற்க எழுந்தானே – அதுபோலக் கடனே என்று அவன் வாழவும் அதற்கு விதியே என்று அவள் பணிந்து ஏற்பதுமா? சுமித்ராவுக்கு அவமானத்தால் உடல் முழுவதும் குன்றியது. முகம் கன்றியது. அந்த அணைப்பை எப்படி பிரிய மில்லாதபடி ஓர் ஆடவன் அவளைத் தொடுவதை அனுமதிப் பதா? அதைவிட உடம்பெல்லாம் நெருப்பைக் கொளுத்திக் கொண்டு விடலாம் என்று கூட அந்தப் பத்தொன்பது வயதுப் பாவைக்குத் தோன்றியது.

சாவைப்பற்றி நினைத்ததும் சுமித்ராவின் முகம் மலர்ந்தது. செத்துவிட்டால் இந்த வேதனை இராதல்லவா? ஆனால்... சே சே இது என்ன முட்டாள்தனம்? தற்கொலையினால் அவளது பிரச்சினை தீர்ந்து விடலாம். ஆனால் அப்பா அவளை விட்டால் அவருக்கு வேறு யாரும் இல்லையே.

பின்னே என்னதான் செய்வது? அந்த வாழ்வு வாழ சுமியால் முடியாது. முடியாது. முடியாது. ஆயிரம் தரம் ஆனாலும் அது முடியாதுதான். அப்படியானால் சுமிக்கு வாழ்வே இல்லையே? கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் சுருளை ஆத்திரத்துடன் விலக்கினாள் சுமித்ரா. வாழ்வு என்றால் ஓர் ஆணுடன் இணைவது ஒன்றுதானா? இத்தனை காலம் சுமித்ரா வாழவில் லையா? சிரிக்கவில்லையா? மகிழவில்லையா? இதுபோல இன்னமும் மிச்சமுள்ள வாழ்நாளைக் கழிக்க முடியாதா? முடியும். முடியும். முடியும்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டதுபோல் சுமித்ராவின் மனம் சற்று அமைதி பெற்றது. ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந் தாள். இன்னமும் கண்ணாடியின் முன்னேயே நிற்பதை உணர்ந்து அகன்றாள். அறையின் ஒரு புறத்திலிருந்த தாயின் படத்தருகே சென்றாள். மகளின் தவிப்பை உணராததுபோல புன்னகையுடன் பொலிந்தாள் தாயார். மனம் ஒன்றிய வாழ்வு என்பார் அப்பா. அந்த வாழ்வின் நிறைவு பொலிந்த திருமுகம் அந்தத் தாயின் திருமுகம். தாயின் முகத்தைப் பார்த்ததும் தன் இழப்பு பெரிய அளவில் தெரிந்தது மகளுக்கு. நின்றிருந்த கண்ணீர்த் துளிகளில் ஏதோ ஓர் இதம் தெரிந்தது சுமித்ரா வுக்கு. ஒரு சோபாவை இழுத்துப் போட்டு அதில் ஒரு பக்க மாகச் சாய்ந்து தாயின் படத்தைப் பார்த்தபடி அமர்ந்தாள். அன்னையின் மென்கரம் மெல்லக் கூந்தலை வருடுவதுபோல் இருந்தது. கன்னங்களில் கண்ணீர்க் கறையுடன் அப்படியே உறங்கிப் போனாள்.

★ ★ ★

காலையில் வழக்கம் போல் ஆறுமணிக்கு சுமித்ரா விழித் தாள். முருகன் பெயரை முணுமுணுத்து விட்டுக் கண்ணைத்

திறந்தபோது சூழ்நிலை புரிந்தது. மனதை அழுத்திய பாரத்தை ஒதுக்க முயன்றவளாக எழுந்தாள்.

இரவில் எந்நேரம் படுக்கச் சென்றாலும் சரி; காலை ஆறு மணிக்கு மேல் தூங்கக்கூடாது என்பது சுமித்ராவுடைய தாயார் சாருமதியின் கண்டிப்பான கட்டளை. அதே பழக்கத்தில் சுமித்ரா எழுந்து உடற்பயிற்சிகளை முடித்தாள்! குளித்துவிட்டு வந்ததும் சற்று நின்றாள். அவளது அறையை விட்டு வெளியே வருவதானால் அந்தப் பொதுவான படுக்கை அறையின் வழியாகத்தான் செல்ல வேண்டும். தந்தையின் ஏற்பாடு அட அப்பாவே!

திருமணம் ஆனபிறகு சுமித்ராவும் அவளுடைய கணவனும் இணைந்து வாழ்வதற்காக இந்தப் பகுதியை ராமநாதன் புதிதாகக் கட்டினார். அடிப்படை அமைப்புகள் அவளுடைய யோசனைகள் தான், கணவன் – மனைவி இருவருக்கும் பொதுவாக ஒரு விசாலமான மிக பெரிய அறை. அந்த அறையின் நுழைவாயிலை ஒட்டி ஒரு சோபா செட், டெலிபோனுடன் ஒரு மேசை முதலியன. பின் பகுதியில் பாதி மறைவான மெல்லிய திரைக்கு அப்பால் பெரிய கட்டில்; அந்த அறையின் இடப்புறமாக சுமித்ராவின் தனியறை. அது குளியலறையுடன் கூடியது. வலப்புறமாகச் சந்திரனின் அறை. அதுவும் சகல வசதிகளுடனும் கூடியது. இரு அறைகளில் எந்த அறைக்குச் செல்வதானாலும் பொது அறை வழியாகச் செல்ல வேண்டும். இப்போதும் சந்திரன் பொது அறையில் இருந்ததால் அவனை அவள் சந்தித்துத்தான் ஆக வேண்டும்.

ஒரு பெருமூச்சுடன் கதவைத் திறந்து கொண்டு மெல்ல வெளியே வந்தாள் சுமித்ரா. அங்கே கட்டிலில் அமர்ந்திருந்த சந்திரனின் உணர்ச்சியற்ற பார்வையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பார்வையை விலக்கிக் கொண்டு திரும்பியவள்

தயங்கி நின்று மீண்டும் அவனைப் பார்த்தாள். இரவு கண்ட அதே உடையுடன் அவன் அசையாமல் இருந்தான். இரவில் அவனும் சரியாகத் தூங்கவில்லை என்பதை விழிகளின் சிவப்பு விளக்கியது.

மனதில் பொங்கிய எண்ணங்களை அடக்கியவாறு ''அந்தப் பக்கம் உள்ளது உங்கள் அறை'' என்றாள்.

''என் அறை'' என்று எழுந்தான் அவன்.

''ஆமாம். இந்தப் பக்கம் என் அறை அதேபோல் அந்தப் பக்கம் உங்களுக்கு உள்ளே வாருங்கள்'' என்று அந்தக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள் அவள். ''அந்தப் பக்கம் குளியலறை. அந்த ஓரத்தில் ஆபீஸ் அறை. இந்த அலமாரிகள் எல்லாம் உங்கள் ஆடைகள்.''

ஒரு அலமாரிக் கதவைச் சந்திரன் திறந்தான். வரிசையாகக் கோட்டுக்களும் கால்சராய்களும், சலனமற்ற முகத்துடன் மற்ற கதவுகளையும் ஒவ்வொன்றாகத் திறந்தான். ஒன்றில் முழுக்கை ஷர்ட்டுகள்; ஒன்றில் ஸிலாக்குகள், பாண்ட்கள், டைகள், டைபின் கஃப்லிங்க்ஸ். சந்திரன் நிதானமாகத் திரும்பி மனைவியைப் பார்த்தான். ''விலையா?'' என்றான் சாவதானமாக.

ஒருகணம் சுமித்ரா விக்கித்து நின்றாள். ,விலை என்கிறானே. இவன் சம்மதம் இல்லாமலா விற்று விட்டார்கள்? அல்லது வாங்கி விட்டார்கள்? தலையைத் திருப்பிக் கொண்டு ''எனக்குத் தெரியாது. எல்லாம் அப்பாவின் ஏற்பாடு'' என்றாள். கூடவே தானும் ''அவர் நிறத்துக்கு'' இந்த நிறம் பொருத்தமாக இருக்கும், ''அவரது உயரத்திற்கு இந்த டிசைன் நன்றாக இருக்கும்'' என்று வாங்கியதும் அடுக்கியதும் நினைவில் வந்ததும் நெஞ்சில் வலி உண்டாயிற்று. ''உங்களுக்கு இப்போது காபி வேண்டும் அல்லவா...''

"குளித்த பிறகுதான் அதுவும் காலைச் சிற்றுண்டியோடு தான்" என்றான் அவன் சுருக்கமாக. "முதலில் பத்திரிக்கை வேண்டும்."

கதவின் அருகே வெளியே ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த தமிழ், ஆங்கில தினசரிகளைக் கொண்டு வந்து கொடுத்தாள் சுமித்ரா.

"பலகாரம் இங்கே கொண்டு வரவா?"

"உன் அப்பா எப்போது சாப்பிடுவார்?"

"எட்டரைக்கு கீழே சாப்பாட்டு அறையில் சாப்பிடுவார்."

"நானும் அவரோடு சாப்பிடுகிறேன்?"

"சாப்பிடும் நேரத்துக்கு நான் வந்து அழைத்துச் செல்லுகிறேன்" என்று வெளியேறினாள் சுமித்ரா. ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் கண்ணாடியை, அலமாரியை, சன்னலை, அதற்கு வெளியே தோட்டத்தை என்று எதை எதையோ பார்த்தபடி பேசி முடித்தாயிற்று. சற்று நிதானமாக மூச்சு விட்டு விட்டுத் தோட்டத்திற்குச் சென்றாள். வழக்கம்போல மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து தாயின் படத்திற்குச் சூட்டினாள். ஒற்றை ரோஜாவைக் காதோரமாகச் செருகிக் கொண்டு திரும்பினாள்; இனி...

கண்ணீர் இதோ இதோ என்று ரெடியாகிக் கொண்டு இருந்தது. இதோடு அப்பாவை எப்படிப் பார்ப்பது? ஆனால் அவரையும் பார்த்துத்தான் ஆகவேண்டும். மீண்டும் ஒரு பெரு மூச்சுடன் தந்தையை நாடிச் சென்றாள்.

தந்தையின் பகுதியில் வரவேற்பு அறையில் காபிக் கோப்பைகளும், ஜக்கில் வென்னீர், டிகாஷன், பால் எல்லாம்

இருந்தன. அவைகளின் முன்னே ராமநாதன் யோசனையோடு உட்கார்ந்திருந்தார். சுமித்ரா வரக் கண்டதும் சட்டென முகம் மலர்ந்தார். ''வந்துவிட்டாயா கண்ணம்மா? இனி நானே தான் கலந்து கொள்ள வேண்டுமோ என்று இப்போதுதான் நினைத்தேன். பாப்பா மாப்பிள்ளை காபி குடித்தாயிற்றா?'' என்று ஒரு மரியாதை கலந்த அன்புடன் மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்தார்.

''பெரிய மரியாதை'' என்று சுமித்ராவுக்கு எரிச்சல் மூண்டது, காட்ட முடியாமல் ''காலை உணவோடுதான் காபியும் குடிப்பாராம் அப்பா'' என்று தந்தைமின் எதிரே அமர்ந்தாள். காபியை இரு கோப்பைகளில் கலந்தாள். ஒன்றை தந்தைமிடம் கொடுத்து விட்டு மற்றதை அவள் எடுத்துக்கொண்டாள்.

சிறுவயதில் இருந்து இது ஒரு பழக்கம். காலை ஏழரை மணிக்கு சுமித்ராவும் அவளுடைய தாயாரும் குளித்து முடித்து விட்டு இங்கே வருவார்கள். பல் துலக்கி விட்டுப் பத்திரிகையும் கையுமாக ராமநாதன் காத்திருப்பார். மூவருமாக அரட்டை அடித்தபடி காபி அருந்துவார்கள். அரைமணி நேர மாநாடு முடிந்தபின் ராமநாதன் குளிக்கப் போவார். சாருமதி இறந்த பிறகும் சுமியும் அவளுடைய தகப்பனாரும் இந்தப் பழக்கத்தை விடாது அனுசரித்தனர்.

காபி முடிந்தபின் சுமித்ரா தன் சித்தியை நாடிச் சென்றாள். அந்த அம்மாள் முதல் நாள் செய்த வேலைமின் அலுப்பில் அவ்வளவு நேரம் தூங்கிவிட்டு அப்போதுதான் கண் மலர்ந்தாள்.

''என்ன சித்தி படுக்கை விட மாட்டேன் என்கிறதா என்று கேலியாக விசாரித்தபடி அவள் அருகே வந்து அமர்ந்தாள் சுமித்ரா.

''குளித்து விட்டாயாடி கண்ணு? நான் சொல்ல மறந்து விட்டேனே என்று நினைத்தேன். ஆனால் அக்காவின் பெண் அறிவு குறைவாகவா இருப்பாய். ஆமாம் மாப்பிள்ளை...''

''நீங்கள் காபி குடித்தாயிற்றா சித்தி'' என்று அவசரமாகக் கேட்டாள் சுமித்ரா.

''எங்கே? ஊகூம். கொஞ்சம் முந்தி முருகு வந்து கேட்டான். ''பொறு பொறு. பல் விளக்கி விட்டுக் கூப்பிடுகிறேன்'' என்றேனா? அப்படியே திரும்பிப் படுத்துத் திரும்பவும் தூங்கிப் போனேன். இப்போது கொண்டு வரச் சொல்லு சுமி. நான் சீக்கிரமாய்ப் பல் துலக்குகிறேன்'' என்று எழுந்தாள் சாந்தா. பற்பசையை எடுத்துக்கொண்டே ''நீ சும்மா இருந்தால் என் பெட்டியை அடுக்கி வையேன் சுமிம்மா'' என்றாள்.

''சரி சித்தி, சித்தி. நீங்கள் இன்றே போக வேண்டும் என்றால் எனக்குப் பிடிக்கவே இல்லை'' என்று சித்தி அவிழ்த்து வீசிமிருந்த சரிகைச் சேலைகளை எடுத்துப் படுக்கையில் ஒருங்கு சேர்த்தாள் சுமித்ரா.

''என்ன செய்வது! இந்தச் சமயம் பார்த்து உன் சித்தப்பாவுக்குத் தொழிற்சாலை விரிவுபடுத்தும் வேலை வந்து சேர்ந்தது. லாவண்யாவுக்கும் பையன்களுக்கும் பரீட்சை. லாவண்யா தான் உன் கல்யாணம் பார்க்கவில்லை என்று குதித்துக்கொண்டு இருந்தாள். பையன்கள் பரவாயில்லை. விடுமுறையில் அவர்கள் பள்ளியிலிருந்து காஷ்மீர் சுற்றுலா போகிறார்களே. அதில் கவனமாக இருக்கிறார்கள். அடுத்த லீவில் அத்தானைப் பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்...''

''இதோ வருகிறேன் சித்தி'' என்று – எழுந்து வெளியே சென்றாள் சுமித்ரா, ஒரு வேளையாளை அழைத்துக் காபி

கொண்டு வரச் சொல்லி விட்டு மீண்டும் உள்ளே வந்து பெட்டியை இழுத்தாள் சித்தி. ''குளியலறையில் சேலை ஏதாவது கிடக்கிறதா?''

'கிடந்தால் அப்புறமாக அனுப்பு. அடேடே சுமிக்குட்டி நான் முன்புபோல எண்ணிக் கொண்டு உன்னை ஏவுகிறேன் பார். அங்கே மாப்பிள்ளை உன்னை காணோமே என்று தேடிக் கொண்டு இருப்பார் போ, போம்மா, என் பெட்டி கிடக்கட்டும்'' என்று விரட்டினாள் சாந்தா.

''டிபன் சாப்பிட எப்போது வருகிறீர்கள் சித்தி? காலைக்கு என்று ஸ்பெஷலாக பாதாம் அல்வாவும் தமிர் வடையும் நாயர் போட்டிருக்கிறான்'' என்றாள் சுமித்ரா தன் போக்கில் சேலைகளை அடுக்கியபடி.

''அய்யோ அய்யோ சொல்லாதேடி நான்தான் ''டயட்''டில் இருக்கிறேனே. நீ வேறு பாதாம் அல்வா தமிர் வடை என்று தூண்டிவிடாதே. இருக்கிற குண்டு போதும் என்று சற்றுத் தடித்த தன் தேகத்தை குறையுடன் பார்த்தாள் சித்தி.

''கொஞ்சம் சித்தி'' என்று புன்னகையுடன் கொஞ்சினாள் சுமித்ரா.

''உதைப்பேன் உன்னை. முதலில் நீ ஓடு. போய் மாப்பிள்ளையை கூப்பிடு. அவர் மொக்குவர். பாதாம் அல்வா என்ன? ஓடு ஓடு'' என்று காபியை எடுத்தாள் சாந்தா.

''லேசாகச் சிரித்துவிட்டு எழுந்து சென்றாள் சுமித்ரா. மற்ற விருந்தினர் எல்லோருக்கும் உணவு சென்றதா என்று விசாரித்தாள். சாப்பாட்டு மேசையை கவனித்துவிட்டு மீண்டும் மாடிக்குச் சென்றாள்.

சந்திரன் பொது அறையில் இல்லை. எனவே அவனது அறைக் கதவை தட்டினாள்.

''உள்ளே வரலாம்'' என்று சந்திரனின் குரல் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு சுமித்ரா உள்ளே சென்றாள்.

அவன் தன் கையிலிருந்த பத்திரிக்கையைத் தாழ்த்திக் கொண்டு அவளைப் பார்த்தான்.

''சாப்பிட வாருங்கள்'' என்றாள் சுமித்ரா.

''அவ்வளவுதானா'' என்றான் நிதானமாக!

''வே... வேறு என்ன?'' என்றாள் அவள் திகைப்புடன்.

அவன் நேர் பார்வையாக அவளைப் பார்த்தான். அவளுக்குப் புரிந்து விட்டது. இரவில் அவளது துடுக்கான பேச்சுக்கு விளக்கம் கேட்கிறான். என்ன பதில் சொல்லுவது? குற்றம் புரிந்தவன் அவன்தான். எனினும் இரவை மட்டிலும் எடுத்துப் பார்க்கையில் அவன்தான் பணத் திமிரில் பேசியதாகத் தோன்றும். ஆனால் தன் தப்பு தன் உள்ளத்துக்குத் தெரியாதா? அனாயாசமாக அவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறானே. சுமித்ராவுக்கு ஆத்திரம் வந்தது. அடக்கினாள். ஒரு பெண்ணுக்கு ஐம்புலனிலும் அடக்கம் வேண்டும் என்பாள் அன்னை சாருமதி. ''அதிலும் பணக்காரன் பெண் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். ஓர் ஏழை சற்று விட்டேற்றியாகப் பேசினால் ''பாவம் என்ன துயரமோ'' என்பார்கள். அதேமாதிரி பணக்காரி நடந்தால் பணத்திமிர் என்பார்கள். பணத்தால் பல வசதிகள் உண்டுதான். ஆனால் இந்த மாதிரித் துண்பங்களுடன் இருப்பதால் பேச்சில் நடப்பில் வெகு கவனத்துடன் இருக்க வேண்டும்'' என்பார் நேற்று ஒருதரம் நாவடக்கம் இன்றிப் பேசியதன் விளைவு இன்று குற்றவாளியாக நிற்க நேர்ந்திருக்கிறது. இனியேனும்

கவனத்துடன் இருக்க வேண்டும் என்று நினைத்தாள். கூடவே அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவும் இல்லை. எனவே பேசாமல் நின்றாள்.

கணநேரம் அவள் கண்களில் கடும் சீற்றம் தோன்றியது... மறுகணம் சாவதானமாகச் ''சாப்பிடப் போகலாம்'' என்று எழுந்து விட்டான். கையில் இருந்த பத்திரிகையை மடித்துப் போட்டு விட்டு முன்னே நடந்தான். சுமித்ரா பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

வெகு பிரியத்துடன் சந்திரனை எதிர் கொண்டார் ராம நாதன். ''உட்காருங்கள் மாப்பிள்ளை. நாயர், மாப்பிள்ளைக்கு இன்னும் நிறைய அல்வா வைப்பா. சாப்பிடுங்கள் மாப்பிள்ளை. மிளகாய்ப் பொடிக்கு நெய்... அடேடே சுமிம்மா நீ சாப்பிட வில்லையா? ஓ... மாப்பிள்ளை'' என்று தடுமாறி நிறுத்தினார்.

''நீயும் உட்காரேன் சுமித்ரா'' என்றான் சந்திரன்.

''நான் பிறகு சாப்பிடுகிறேன்'' என்று தலை நிமிராமல் பதில் சொல்லிவிட்டு தமிர் வடையைக் கிண்ணத்தில் எடுத்து வைத்தாள் சுமித்ரா.

''ஏனோ? வழக்கமாக நீ மாமாவோடுதானே சாப்பிடுவாய்? இன்று மாறுவானேன்? உட்கார். நாயர், சுமித்ராவுக்கும் பரிமா றப்பா'' என்றான் அவன் நிதானமாக.

உத்திரவா என்று உள்ளூரப் புகைந்த போதும் நாயரைப் போலவே சுமித்ராவும் அந்தக் குரலுக்குப் பணிந்தாள். ஆனால்

இரண்டொன்றைக் கொறித்து விட்டு எழுந்தும் விட்டாள். "அலுவலகம் போகிறீர்களா அப்பா?" என்று தந்தைமிடம் கேட்டாள்.

"ஆமாம் கண்ணம்மா."

"உங்களுக்கு டிரஸ் எடுத்து வைக்கிறேன்" என்று கை கழுவி விட்டுப் போனாள் சுமித்ரா.

"இன்று அவளுக்கு வெட்கம் வந்து விட்டது மாப்பிள்ளை. அதுதான் ஓடுகிறாள்" என்று சிரித்தார் ராமநாதன். பிறகு குரலைச் சற்றுத் தணித்துக் கொண்டு, "உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும் மாப்பிள்ளை, என் சாரு, அவள்தான் நம் சுமியின் அம்மா, அவள் இறந்த பிறகு எனக்கு இந்த உலகத் தில் எல்லாமே சுமி மட்டும்தான். ஏன் என் உலகமே சுமிதான் என்று சொல்லலாம். நான் உண்ணுவது, உறங்குவது, தொழிலைப் பார்ப்பது, பேசுவது, சிரிப்பது என்று எல்லாமே என் மகளுக்காகத்தான். அவளைப் பாராமல் என்னால் வாழ முடியாது மாப்பிள்ளை. அதனால்தான் நீங்கள் இங்கேயே தங்கி வசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். உங்களுக்கு ஒரு சின்ன சங்கடம் என்றாலும் என்னிடம் சொல்லுங்கள். நான் தீர்த்து வைக்கிறேன். ஆனால் மாமனார் வீட்டில் இருப்பதா என்று மட்டும் எண்ணி... எண்ணி... என்னை விட்டு"

சுத்தமாக இருந்த இடது கையால் மாமனாரின் இடக் கரத்தைப் பற்றினான் சந்திரன். "இதெல்லாம் என்ன பேச்சு மாமா? வாருங்கள் கை கழுவலாம். உங்களோடு நானும் அலு வலகத்துக்கு வரப்போகிறேன்" என்று எழுந்தான்.

"இன்றேயா மாப்பிள்ளை? கல்யாணக் களைப்புத்தீர இரண்டு நாட்கள் ஓய்வெடுத்தபின்..."

சந்திரன் சிரித்தான். ''என்னைவிடப் பத்து மடங்கு அலைச்சலும் களைப்பும் உங்களுக்கு இருக்கும். நீங்களே கிளம்பி விட்டீர்களே மாமா, நானும் வருகிறேன்'' என்று பேச்சை முடித்துவிட்டு மாடிக்குப் போனான்.

ராமநாதன் வேகமாகத் தன் அறைக்குப் போனார். அங்கே சுமித்ரா தந்தைக்கு வேண்டிய சில பேப்பர்களை எடுத்துச் சிறு கைப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தாள். ''பாப்பா, இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன். நீ மாப்பிள்ளைக்கு வேண்டியதை எடு. அவரும் என்னோடு அலுவலகம் வருகிறாராம்'' என்று அவளை அனுப்பினார்.

தங்கள் பொது அறையில் சுமித்ரா தயக்கத்துடன் நின்றாள். இந்த அருமையான கணவனுக்கு வேண்டியதை என்று அவள் எதைச் செய்வது? சோதனை தான்.

சுமித்ரா தயங்கி நிற்கையிலேயே சந்திரனின் அறைக் கதவு திறந்தது. தூய வெண்ணிறத்தில் முழுக்கை ஷர்ட்டும் பான்ட்டும் அணிந்து கரு நீலத்தில் சிறு சிவப்புக் கோடுகள் இட்ட டை கட்டிக் கொண்டு வெளியே வந்தான் சந்திரன், சுமியின் மனத்தில் அவனது தோற்றம் வெகு கனமாக விழுந்தது.

வெளியே சுமித்ரா நிற்பதைக் கண்டதும் அவன் ''என்ன?'' என்றான்.

''ஒ ஒன்றுமில்லை, உங்களுக்கு உதவி செய்ய...''

''எனக்கு உதவியா?'' என்று அவன் நகைத்தான். ''டை கட்டி ஷூ மாட்டி இதெல்லாமா? இத்தனை நாள் யார் செய்தார்களாம்?''

''எனக்குத் தெரியாது. அப்பாதான் அனுப்பினார்'' என்று எரிச்சலோடு கூறினாள் சுமித்ரா.

''இல்லா விட்டால் வந்திருக்கமாட்டாயா?''

சுமித்ராவின் பொறுமை அடியோடு மறைந்து, ''நம் வரவை விரும்பாத இடத்துக்குச் செல்வது எப்படி?''

''அப்படி நான் சொன்னதில்லையே.''

''வாயால் சொன்னால்தானா?''

''அல்லாமல் கழுத்தைப் பிடித்துத் தள்ளினேனா?''

மோக்கக் குறையும் அனிச்சம் என்றார் வள்ளுவர். முந்தைய நாள் அவனது பெருமூச்சும் நடையும் நினைவு வந்தது. சினத்தை மிஞ்சிக்கொண்டு வேதனை பெருகியது.

இண்டர்காம் ஒலித்தது. பழக்கத்தில் சட்டென்று போனை எடுத்தாள் சுமித்ரா. ராமநாதன் தான்.

''என்னப்பா?''

''மாப்பிள்ளை சற்றுப் பின்னே வந்தால் பரவாயில்லை சுமிம்மா. வெள்ளை ஃபியட்டில் வரச் சொல்லு'' ராமநாதனின் குரலில் நகை கலந்தது.

''எனக்கும் புரியும் கண்ணம்மா. ஒரு தலைமுறை முந்தி யவன்தான் என்றாலும் நானும் ஒரு காலத்தில் புது மாப்பிள்ளை யாக இருந்தவன்தான்.''

மலங்க மலங்க விழித்தபடி ''என்னப்பா...'' என்று சுமித்ரா கேட்கையிலேயே சந்திரன் சுமித்ராவின் கையில் இருந்து ரிசீ வரைப் பற்றித் திருப்பிப் பேசினான். ''நான் தயாராகி விட்டேன் மாமா. சேர்ந்தே போகலாம்'' என்று சொல்லி போனைக் கீழே வைத்தான்.

"நாம் மாலைமில் நம் பேச்சைத் தொடரலாம் சுமித்ரா, அதுவரை விஷயம் நமக்குள் இருந்தால் போதும். புரிகிறது அல்லவா?" என்று வெளியேறினான் சந்திரன்.

கூடவே சென்று இருவரையும் வழியனுப்பிவிட்டு திரும்பினாள் சுமித்ரா. வந்ததும் அவசரம் அவசரமாகக் கட்டிலில் கிடந்த மலர்களை அகற்றினாள். எவ்வளவு பூக்கள்... இது போதாது என்று கட்டிலின் அருகே சிறு வட்ட மேஜையில் ஒரு வெள்ளிக்கூடை நிறைய ரோஜா இதழ்கள் வேறு நெஞ்சுகளக்க அத்தனையையும் குப்பைக் கூடையில் கொட்டினாள்.

"பெருக்க வரட்டுமா அம்மா?" என்று கதவைத் தட்டினாள் வேலைக்காரி ராஜம்.

"வா, வா" என்று அவளுக்கு ஒதுக்கிக் கொடுத்தாள் சுமித்ரா.

பெருக்கித் துடைத்துவிட்டு இரு குளியளறைகளிலும் கிடந்த துணிகளை எடுத்துக்கொண்டு சுமித்ராவும் கீழே இறங்கிச் சென்றாள்.

சாந்தாவை வழியனுப்பி விட்டு விமான நிலையத்திலிருந்து திரும்பியபோது சுமித்ராவுக்கு உலகம் எல்லாம் வெறுமையாகி விட்டாற்போலத் தோன்றிற்று.

சரி போகிறது. போனால் போகட்டும் என்று எத்தனையோ தடவை நினைத்துப் பார்த்தும் மனம் அடங்கவில்லை. நம்பினோமே நல்லவன் என்று எண்ணி ஏமாந்து போனோமே என்ற தவிப்பை அடக்க முடியவில்லை. ஏதோ ஒரு சேலை சற்று கிழிந்து போயிற்று; யாருக்காவது தூக்கிக் கொடுத்துவிட்டு வேறு வாங்கிக் கட்டலாம் என்பதற்கு இல்லையே. இனி மாற்ற முடியாத இமாலயத் தவறு நேர்ந்து விட்டதே. இந்தத்

நவறோடு இனிக்காலம் முழுமையும் கஷ்டப்பட வேண்டுமே மீள வழியே இல்லையே என்ற ஆற்றாமை பொங்கியது. காரை ஓட்ட முடியாமல் கை பதறியது. 'சவுந்தரிய நர்சரி அருகில் காரை நிறுத்திவிட்டுச் சற்று நேரம் அசையாமல் அமர்ந்தாள்.

அதற்குள் அங்கே பணியாற்றும் ஒருவன் அவளை இனம் கண்டு ஓடி வந்தான். ''என்னம்மா வெளியேயே இருக்கிறீர் களே. செடிங்க பார்க்கலை லைலட்டிலே புதுசா ஒரு அல்லி வந்திருக்கிறது...''

''பார்க்கலாமே.'' எப்போதுமே இங்கே வரும்போது சுமித்ராவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இன்று இதமாக வேனும் இராதா? மனதின் பாரமும் சற்றேனும் குறையாதா?

காரைப் பூட்டிவிட்டு நர்சரிக்குள் நுழைந்தாள். உடன் வந்த ஆளை நிறுத்தி ''நானே பார்த்துவிட்டு வருகிறேன் என்று நடந் தாள். குற்றாலத்தின் குளுமையுடன் பன்னிற மலர்களும் செடி கொடிகளுமாய்ப் பொலிந்தது அந்தச் சோலை. நேரம் போவது தெரியாமல் சற்று நேரம் இங்கும் அங்குமாய்ச் சுற்றினாள். மெல்ல மெல்ல மனது சாந்தியடைந்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் நேரமாகிவிட்டது.

இனி வீடு செல்ல வேண்டும். வந்திருக்கும் விருந்தின ரைப் பார்க்க வேண்டும். அலுவலகத்திலிருந்து அப்பா திரும்பி விடக் கூடும். அப்பாவோடு சந்திரனும்...

மீள வழிமின்றி மீண்டும் சந்திரனிடம் வந்து நின்றாள் சுமித்ரா. எப்படி மீள்வது? தினம் கண்ணால் கண்டு கண்டு பேசி சகித்து சமாளித்தாக வேண்டிய பிரச்னை. இதிலிருந்து மீள்வது எப்படி முடியும்?

தலை குனிந்தவாறு வெளியேறுகையில் பணியாள் மீண்டும் ஓடிவந்தான். 'பார்த்தீர்களாம்மா?'

அவன் எதைச் சொல்கிறான் என்று புரியாமல் ஒரு கணம் விழித்தாள் சுமித்ரா. உடனேயே நினைவு வந்தது. ''ஓ. பார்த்தேனே. நாளை தோட்டக்காரனை அனுப்புகிறேன். இரண்டு கொடி நல்ல கிழங்குடன் அனுப்பிவிடு'' என்று சொல்லிவிட்டு காரில் ஏறினாள்.

மாலையிலும் மாமனும் மருமகனும் ஒன்றாகத் திரும்பி வந்தார்கள். வழக்கம் போலத் தந்தையிடம் ப்ரீஃப்கேஸை வாங்கக் கை நீட்டினாள் மகள். ஆனால் அவர் அதை அவளிடம் கொடுக்காமல் ''பழக்க தோஷம்'' என்று சொல்லிச் சிரித்தார். இனி நீ மாப்பிள்ளையிடம் வாங்க வேண்டும் பாப்பா.''

சுமித்ரா சற்றுத் தயங்கி நிற்கையிலேயே சந்திரன் முறுவலித்தான். ''மாமாவுக்கு வேண்டியதைச் செய்து விட்டு மாடிக்கு வா சுமித்ரா'' என்று சென்றான்.

தந்தையிடம் பெட்டியை வாங்கி பீரோவில் வைத்து விட்டு சலவை செய்த லுங்கி, பனியன் எடுத்துக் கொடுத்தாள். அதற்குள் ராமநாதன் அவசரப்பட்டார். ''போம்மா; அங்கே மாப்பிள்ளை காத்திருப்பார். சீக்கிரம் போ'' என்று விரட்டினார்.

தங்கள் பகுதிக்குள் சுமித்ரா சென்றபோது அவன் அலுவலக ஆடைகளைக் களைந்து மாற்றியிருந்தான். முகம் கழுவித் தூய வெண்ணிறத் தேங்காய்ப்பூத் துவாலையால் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். சுமித்ராவைக் கண்டதும் அவன் உதடுகள் சற்று ஏளனமாக வளைந்தன; ''எனக்காக நீ செய்வதற்கு ஏதும் இல்லையே'' என்றான் கேலியாக.

மனவாட்டத்தைக் காட்டாமல், ''பின்னே ஏன் வரச் சொன்னீர்கள்?'' எனப் பதிலுக்குக் கேட்டாள் அவள்.

அவனது முகபாவம் மாறியது. சற்று யோசனையோடு ''ஆமாம் வரச்சொன்னேன். ஏனென்றால்... உட்கார் சுமித்ரா

உன்னிடம் சற்றுப் பேசவேண்டும்...'' என்று ஒரு சோபாவில் அமர்ந்தான்.

சுமித்ரா உட்காரவில்லை. ''நான் மாலைச் சிற்றுண்டி எடுத்து வைக்க வேண்டும்'' என்றாள்.

''செய்யலாம்... செய்யலாம்; அதற்குமுன் நான் சொல்ல வருவதைக் கேட்டு விட்டே போ. நம் இருவருக்கும் பிடிக்கி றதோ இல்லையோ; நாம் இருவரும் தான் கணவன் மனைவி என்றாகிவிட்டது. லேசில் மாற்றக்கூடிய விஷயம் இல்லை இது; ஆகவே எலியும் பூனையுமா நிற்பதை விட்டு விட்டு ஒருவரை ஒருவர் சகித்துக் கொள்ள முயற்சிக்கலாம் என்று நினைக்கி றேன்...'' என்று கூறி நிறத்தினான்.

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு தரையில் பதிந்த பார்வையுடன் சுமித்ரா அசையாமல் நின்றாள்.

உதட்டை பிதுக்கித் தோளை குலுக்கினான். ''நான் எனக் காக இதைச் சொல்லவில்லை மாமாவின் அதாவது உன் அப் பாவின் மனதை வருத்துவது எனக்குப் பிரியமில்லை. ஏனென் றால் அவரை எனக்குப் பிடிக்கிறது என்று முடித்தான்.

''அந்த மாமா பெற்ற மகளைத்தான் பிடிக்காது போயிற் றாக்கும்'' என்ற உள்ளூரக் குமுறினாள் சுமித்ரா. ''எனக்கும் என் அப்பாவிடம் அக்கறை இருக்கிறது'' என்றாள் உரக்க.

''மிகவும் நல்லது. கூடவே இன்னொன்று. ரகளைகள் ரசா பாசங்கள் எனக்குப் பிடிக்காது.''

''எனக்கும் பிடிக்காது'' என்றாள் சுமித்ரா வேகத்துடன்.

''மிக மிக நல்லது. போய்ச் சிற்றுண்டி எடுத்து வை. நான் மாமாவுடன் வந்து சாப்பிடுகிறேன், என்று அமர்த்தலாக அவளை அனுப்பி வைத்தான் சந்திரன்.

''உபதேசம் முடிந்து விட்டதாக்கும்'' என்று புகைந்தபடி பேசாமல் திரும்பிச் சென்றாள் சுமித்ரா.

இரண்டு நாட்கள் சென்ற பின்னர் சந்திரன் வீட்டுக்கு மணமக்கள் மறுவீடு சென்றனர்.

சந்திரனின் குடும்பத்தார் தாம்பரத்தில்தான் வசித்தார்கள். அனால் சொந்த ஊர் மதுரைப் பக்கத்தில் ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்தில்தான் மறுவீடு நடக்க வேண்டும் என்று சந்திரனு டைய தந்தை சொல்லிவிட்டதால் மணமக்கள் அங்கே சென்றார்கள்.

கிளம்புகையில் ராமநாதன் மகளைத் தனியே அழைத்தார். ''சுமி இந்த பணத்தை வைத்துக்கொள். ஒருகால் அங்கே தேவைப்படலாம்'' என்று ஐந்து கத்தை ரூபாய் நோட்டுகளை அவளிடம் கொடுத்தார்.

நோட்டு கட்டுக்களைக் கவனித்துவிட்டு ஐந்தாயிரம் ரூபாய்? இவ்வளவு பணம் எதற்கு அப்பா? அங்கே எனக்கு என்ன செலவு இருக்கப் போகின்றது? என்று வினவினாள் மகள்.

''உனக்கு எந்த செலவும் இராதம்மா. ஆனால் உன் மாமனார் இருக்கிறாரே அவருக்கு வரவு செலவு இரண்டின் தொடர்பு பற்றித் தெரியும் போல எனக்குத் தோன்றவில்லை. கைமீறிச் செலவு செய்துவிட்டு அவர் விழித்தால் கொடு' என்றார். பிறகு அவரே ''இதை மாப்பிள்ளையிடமே கொடுத்திருப்பேன் கண்ணம்மா ஆனால் சம்பந்திக்கு இது அவசிய மற்றுப் போகிறது என்று வைத்துக்கொள். அவருடைய தகப்பனாரைப் பற்றி நான் தப்பாக எண்ணிவிட்டதாக மாப்பிள்ளை மனம் சஞ் சலப்படக்கூடாது பார் நீ வைத்திருந்து சமயமறிந்து அவர்கள் மனம் நோகாமல் கொடு. ஜாக்கிரதை அம்மா என்னிடம் இருக்

கிறது கொடுக்கிறேன், என்பது போல் தோன்றிவிடக் கூடாது'' என்று எச்சரித்தார்.

''கொஞ்சம் தெரிந்தால் என்ன?'' என்று வெறுப்புடன் நினைத்தாள் சுமித்ரா. இந்த அப்பா இவ்வளவு பார்க்கிறாரே. உண்மை தெரிந்தால் எவ்வளவு துடித்துப் போவார்? அதைப் பற்றி அங்கே யாரும் கவலைப்படவில்லையே. ஒரே மகளின் வாழ்வு வேதனையாகி விட்டது என்று ஆனால் அந்தத் தந்தை மின் மனம் எப்படித் தவிக்கும். என்று, அங்கே யாருமே எண்ணிப் பார்க்கவில்லையே. நினைத்துப் பார்த்தால் சந்திரன் விஷயம் பிறந்த வீட்டில் எல்லோரும் அறிந்தது என்றே சுமித்ரா வுக்குத் தோன்றியது.

வணங்கி எழுந்தபோது மாமியார் சற்று பயத்துடன் மகனைப் பார்த்து சிரிக்க முயன்றது நினைவுக்கு வந்தது. அப்புறம் அந்த இரு நாத்தனார்களும் சந்திரனைப் பார்த்ததும் அடுத்து உடனேயே ஒருவரை ஒருவர் பார்த்ததும் படம்போல் நினைவில் ஓடியது. ஒரு முறையல்ல சுமித்ரா கண்டு கொண்ட அளவி லேயே மூன்று தடவைகள். ஆகக் குடும்பத்தில் எல்லோருக் கும் தெரியும். அதாவது எல்லோரும் அறிய சந்திரன் சுமித்ராவை மறுத்திருக்கிறான். பிறகு மற்றவர்களின் வற்புறுத் தல், பணத்தேவை சொந்த ஆதாயம் எல்லாம் கருதி அவளுக் குத் தாலி கட்டிமிருக்கிறான். விரும்பாத கணவனுக்கு வந்த வேண்டாத மனைவி அவள் என்று எல்லோருக்கும் தெரியும்! எவ்வளவு அவமானம்!

''என்ன யோசனை பாப்பா?''

''ஆஸ்... ஓ ஒன்றுமில்லை அப்பா. அங்கே யார் யார் இருப்பார்களோ? சித்தி கூட இல்லை. நீங்களும் வரக்கூடாது என்கிறீர்களே என்று நினைத்தேன்'' என்று சமாளித்தாள் சுமித்ரா.

''அதுதான் முகம் வாடிப் போமிற்றா? அம்மா இல்லை அல்லவா பாப்பா நான் தனியாக வருவது உனக்கு நல்லது இல்லையாம். மேலும் யார் இருந்தால் என்ன கண்ணம்மா? நாம் யாரையும் கெடுப்பது இல்லை. நம்மால் ஆன நல்லதை மட்டுமே செய்கிறோம். அதனால் எல்லோரும் உன்னிடம் பிரிய மாகவே இருப்பார்கள்.'' என்றார் அவர் இதமாக.

''முக்கியமானவரின் பிரியம் விட்டுப் போமிற்றே அப்பா'' என்று சுமியின் மனம் அழுதது. ''நான் பெட்டியில் எல்லாம் வைக்கப் போகிறேன் அப்பா'' என்று திரும்பினாள்.

''உனக்கு மாப்பிள்ளையின் துணை இருக்கையில் பயம் என்ன பாப்பா? என்று தந்தையின் குரல் தொடர்ந்து அவள் நெஞ்சைக் கலக்கியது.

மணமக்கள் மதுரையைத் தாண்டியதுமே மேளச்சத்தம் முழங்கத் தொடங்கியது. ஊர் எல்லையிலிருந்து தெருவெங்கும் தோரணங்களுமாக சந்திரனுடைய தந்தை தடபுடல் பண்ணி யிருந்தார்.

ஊரெல்லாம் திரண்டு வந்து பெரிய இடத்திலிருந்து வந்த மருமகளை வேடிக்கை பார்த்தனர். தனித்து நின்றாள்போல் சுமித்ரா தவித்துப் போனாள். சந்திரனுடைய மூத்த சகோதரி சுமதி சில சமயங்களில் அருகே வந்து அணைவாக இருப்பாள். அப்போது பரவாயில்லாமல் இருக்கும். ஆனால் அவளுக்கு வேலை அதிக மாக இருந்தது. எனவே சுமித்ரா திணறினாள். ''எல்லாப் புதுப் பெண்களுக்கும் இது நேர்வது தானே'' என்று நினைத்துப் பார்த்தாள். ஆனால் எல்லாப் பெண்களுக்கும் அவரவர் கணவன் துணை இருந்திருக்குமே. ''நான் இருக்கிறேன்'' என்று காட்டும் ஒரு பார்வை ஒரு புன்னகை போதுமே. சுமித்ரா வுக்கு அது கிட்ட வில்லையே. சுமித்ராவுக்கு எரிச்சல் வந்தது.

தன்னிரக்கம் கொள்வது சுமிக்கு சற்றும் பிடிக்காது. இப்போது அந்த அளவுக்கு இறங்குவானேன்? பிடிவாதமாகப் புன்னகை புரியலானாள்.

மாலைமில் நாட்டியக் கச்சேரி தொடங்கியதும் சற்று ஆறு தலாக இருந்தது. கை, கால், உடல், முகம், கண், புருவம் என்று எல்லாவற்றையும் வெட்டி வெட்டி அந்தப் பெண் ஆடி யது. சிரிப்புக்கூட வந்தன. அவள் என்ன ஆடினாலும் நடனம் தான் புகழ்பெற்ற சினிமா நட்சத்திரம் ஆமிற்றே!

ஓரளவு பெரிய நடிகைதான். நடனம் ஆடியவள் அவளுக்கு எவ்வளவு ரேட் இருக்கும்? ரசகுண்டுகள் பளிச்சிடும் சித்திரப் பந்தல், பூவலங்காரம், புலவு விருந்து எல்லாம் எவ்வளவு ஆகி யிருக்கும்? அப்பா சொன்னது ஒரு வகையில் சரிதான். பணத்தை எண்ணிப் பார்த்து செலவு செய்வதாகத் தெரிய வில்லைதான். ஆனால் ஏன் கணக்குப் பார்த்துக் கஞ்சத்தனம் செய்ய வேண்டும்? காமதேனுவைக் கறிறு கொண்டு கட்டியா மிற்று. இனி மனம் கொள்ளுமட்டும் கறக்க வேண்டியதுதானே. இதற்கு மட்டும் பணக்காரப் பெண்டாட்டி வேண்டுமோ? இதற்கு மட்டும் என்ன? இதற்காக மட்டும்தானே சந்திரன் அவளை மணந்து கொண்டதே இருக்கட்டும் இருக்கட்டும். பணம் என்று அவளிடம் வாய் திறந்து கேட்கட்டும். தலை தூக்க முடியாதபடி ஒரு வார்த்தை கேட்கிறேன் என்று கறுவி னாள் சுமித்ரா.

ஆனால் அந்தோ என்ன ஏமாற்றம்? அவன் வாய் திறந்து அவளிடம் கேட்கவே இல்லை! அது மட்டுமா? அவளாகவே தந்தை சொன்ன மாதிரி சமயமறிந்து அவர்கள் மனம் நோகாமல் கொடுக்குமாறும் நேர்ந்தது.

5

கச்சேரியின் நடுவிலேயே கொஞ்சம் கொஞ்சம் பேராகச் சென்று உணவருந்தி விட்டு வந்தார்கள்.

மணமக்கள் சாப்பிடச் செல்லுகையில் ''ஒரு நிமிடம் சந்திரா'' என்று மகனை அழைத்தார் சிவசுந்தரம்.

''என்னப்பா?'' என்று நின்றான் மைந்தன்.

''அங்கே நிற்கவும் முடியாமல் உணவருந்தும் இடத்துக்கு தனியே செல்லவும் முடியாமல் சங்கடப்பட்டாள் சுமித்ரா. அதற்குள் தந்தையும் மகனும் அகன்று விடவே தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றாள்.

அறைக்குள் சென்று அவள் ஒண்டவும் ''சும்மா கேளடா'' என்று மாமனாரின் அதட்டல் கேட்டுத் திடுக்கிட்டாள்.

பேசுவதற்கு ஆள் இல்லாத இடம் தேடிச் சென்ற அப்பாவும் பிள்ளையும் அந்த தாழ்வாரத்துக்கே வந்து பேசுவார்கள் என்று சுமி கண்டாளா? இப்போது அவர்கள் கண்ணில் படாமல் போகவும் முடியாது. இருந்தால்தான் என்ன? என்ன? என்று தோன்றியது, அங்கிருந்த கட்டிலில் பேசாமல் உட்கார்ந்து கொண்டாள். என்ன விஷயம் என்று தெரிந்து கொள்ளலாமே.

''முடியாது அப்பா'' என்றான் சந்திரன் அடக்கமாக. ஆனால் தெளிவாக.

சிவசுந்தரம் சினமடைந்தார் போலும். ''என்னடா முடியாது என்ன முடியாது என்கிறாய்? உன்னை என்ன கண்டவளிடம்

பிச்சை எடுக்கவா சொல்கிறேன். கட்டின பெண்டாட்டியிடம் கேட்க அவ்வளவு வெட்கமா? மத்ததுக்கு வெட்கமில்...''

''போதும் அப்பா'' அடக்கினான் சந்திரன்.

''ஏண்டா? இங்கே மட்டும் வரவேற்புக்கே எல்லாமாகப் பத்தாயிரத்து நூறு ஆகிவிட்டது அதுபோக...''

''நீங்கள் ஐம்பதினாயிரம் ரூபாய் வாங்கி இருக்கிறீர்கள் அப்பா'' என்று கடுமையாக நினைவுறுத்தினான் மகன்.

தந்தை தாவிக் குதிக்கலானார். வாங்கி நான் மட்டுமே சாப்பிட்டு விட்டேனே? உன் சின்னத் தங்கையின் கல்யாணக் கடன் இருபத்தைந்து ஆயிரம் இருந்ததே அதைக் கொடுத்தேன். மிச்சத்தில் உன் கல்யாணச் செலவு அடங்கவில்லை...''

''ஏன் அடங்கவில்லை? இந்த நட்சத்திர நாட்டியம், புலவு விருந்து எல்லாம் இல்லை என்று யார் அழுதார்கள்?'' அடக்கமாக இரைவது என்றால் என்ன என்று சுமித்ராவுக்கு அப்போது புரிந்தது. சந்திரனுக்கு இவ்வளவு கோபம் வருமா? அவளுக்குப் பயமாகக் கூட இருந்தது.

''அடேய்... அடேய்... மடையா, இதெல்லாம் இல்லாமல் நம் வீட்டுக் கல்யாணம் எப்படி நடக்கும்? அறிவுக்கெட்டு போய்க் கேட்கிறாயே? என்று அதட்டினார் தந்தை.

''எனோ? நம் வீடு என்றால் எல்லோருக்கும் கொம்பா முளைத்து விட்டது? பானுவின் திருமணத்தோடும் ஒரு பத்தாயிரம் ரூபாயை இப்படித்தான் இறைத்தீர்கள்'' என்றான் சந்திரன் ஆத்திரத்துடன்.

''அதற்காகப் பெரிய இடத்தில் பெண்ணைக் கொடுக்கும் போது கட்டிய துணியோடு அனுப்புவார்களா? வருகிறவர்

களுக்கு ஒரு பொட்டலம் சாம்பார் சாதமும், ஒரு பொட்டலம் தயிர் சாதமும் கையில் அனுப்ப வேண்டுமா?''

''அப்படி இல்லை என்றால் கைக்கு மீறிச் செலவு செய்து தான் ஆக வேண்டுமா?'' என்றான் சந்திரன் விடாமல்.

''மடையா, மடையா உனக்கு மட்டும் திருமணம் ஆகியி ருக்கா விட்டால் நாலு அறை கொடுத்திருப்பேன். அப்படி உன்னை என்னச் செய்யச் சொல்லி விட்டேன்? சுமித்ராவிடம் – உன் சொந்த மனைவியிடம் மூவாயிரம் ரூபாய் – அதுவும் அதிகம் இல்லை. வெறும் மூன்று ஆயிரம் ரூபாய் வாங்கித் தரச் சொல்லுகிறேன். இதற்கு இவ்வளவு தகராறா?'' என்று அசட்டுச் சிரிப்புடன் முடித்தார் சிவசுந்தரம்.

தகராறு இல்லையப்பா, இது முழு மறுப்பு. என்ன ஆனாலும் சரிதான். நான் சுமித்ராவிடம் பணம் கேட்க முடியாது. நீங்கள் யாரும் கேட்கவும் கூடாது'' என்று முடித்து விட்டான் சந்திரன். ''இத்துடன் இந்தப் பேச்சு போதும். வாருங்கள் போக லாம்'' இருவரும் செல்வது தெரிந்தது.

சுமித்ராவுக்கு இனமறியாத திருப்தியும் கண்ணீரும் ஒருங்கே தோன்றின. பணத்துக்காக தன்னை விற்றவன் அவளுடைய கணவன். ஆனால் அடியோடு தன்மானம் அற்றுப் போனவன் இல்லை. ம்ம்... இப்போது சுமி என்ன செய்ய வேண்டும்? அப்பா சொன்னது போலவே இங்கு பணத்தேவை இருக்கிறது. ஆனால் இந்த நிலைமையில் அதை ஈடு செய்வது எப்படி அந்த சுமித்திரையின் அறிவுதான் வழிகாட்ட வேண்டும்.

கணவனும் மாமனாரும் சென்று விட்டார்கள் என்பதை நிச் சயப்படுத்திக் கொண்டு சுமித்ரா மெல்ல வெளியே வந்தாள்.

''நீ சாப்பிட வரவில்லையே'' என்று மாமியார் எதிரே வந்தார்.

நல்லவேளை என்று அவரை நெருங்கி ''ஒரு விஷயம் அத்தை'' என்றாள் சுமி ரகசியமாக.

அவர் இங்கும் அங்கும் கண்ணை உருட்டி ஓட்டினார். ''என்ன? ரகசியமா?'' என்று நாடக மேடை ரகசியம் பேசினார்.

சுமிக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அடக்கிக் கொண்டு 'மாமாவிடம் கொடுக்கும்படி அப்பா கொஞ்சம் பணம் அனுப்பினார் அத்தை. நான் எப்படி அவரை அழைத்து கொடுப்பது? உங்களிடம் தருகிறேன். நீங்கள் மாமாவிடம் கொடுத்து விடுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''பணமா? கொடேன்'' என்றாள் அந்த அம்மாள் அலட்சியமாக.

நாலாயிரம் ரூபாயை எடுத்து நீட்டினாள் சுமித்ரா. மாமனாரின் தேவை மூன்று ஆயிரமே. ஆனால் எதற்கும் கூடவே இருக்கட்டும் என்று நாலாயிரம் ரூபாயாகக் கொடுத்தாள்.

ஆனால் ''எவ்வளவு? நாலாயிரமா? நாலு ஆயிரமா? இவ்வளவையும் அந்த மனிதர் கையில் கொடுத்தால் நிமிடத்தில் செலவு செய்து விடுவாரே. நான் கொடுக்க மாட்டேன்'' என்று பணத்தை மடியோடு கட்டிக் கொண்டார் அந்த அம்மாள்.

சுமித்ரா திணறிப் போனாள். பிறகு மெதுவாக ''கூடுதலாக மூவாயிரம் ரூபாய் செலவாகி விட்டதாம் அத்தை. மாமா உங்கள் பிள்ளையிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். அதனால் கொடுத்து விடுங்கள்'' என்றாள் கெஞ்சுதலாக.

''அய்யோடா, சந்திரனிடம் சொல்லிவிட்டாரா?'' என்று சிறு அச்சத்துடன் முணுமுணுத்தார் மாமியார். ''ச்சு. அப்படியானால்

கொடுத்துவிட வேண்டியதுதான். ஆனால் மூவாயிரம்தானே சொன்னார் என்கிறாய். மூவாயிரத்தைக் கொடுத்துவிட்டு ஆயிரத்தை எனக்கு வைத்துக் கொள்கிறேன். கொஞ்ச நாளைக்கு அப்புறம் எனக்கு ஒரு ஜோடி வளையல் வாங்கு வேணாம்'' என்று சிறு பிள்ளை போலப் பேசிவிட்டு ஆயிரம் ரூபாயை மடிமில் செருகிக் கொண்டு போனார் அவர்.

சுமித்ராவுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே புரியவில்லை. இரு துருவங்கள் போல இந்த இரு குண விசேஷங்களுக்கு இடையே சந்திரன் எப்படி வளர்ந்தான்? மீண்டும் சந்திரனிடம் வந்து நின்றாள் அவள்.

திடீரென்று நினைவு வந்தாற்போல் மீண்டும் திரும்பி வந்த மாமியார், ''நீ சாப்பிடவா'' என்று மருமகளை அழைத்துச் சென்றார். அழைத்துச் சென்றவர் இடம் பார்த்து உட்கார வைக்க வில்லை. அந்த வரிசைக் கடைசியில சந்திரன் இருக்கிறான் பார். பக்கத்து இலையில் உட்கார்ந்து சாப்பிடு என்று கூறி விட்டுப் போய் விட்டார். சுமித்ரா தயக்கத்துடன் நின்றாள்.

''இங்கே என்ன செய்கிறாய் அண்ணி?'' என்று ஒரு குதூகலக் குரல் கேட்டது. சந்திரனுடைய தங்கை பானுமதி, திருமணமாகி ஐந்து மாதங்கள் ஆகின்றன. அவளுக்கும் ஐந்தாம் மாதம் தான்.

அவளைப் பார்த்து வெறுமனே முறுவலித்து விட்டு சுமித்ரா சும்மா நின்றாள்.

''பானு அண்ணியை இங்கே அழைத்துவா'' என்று சந் திரன் குரல் கேட்டது. பானுவுடன் சுமித்ரா சென்றதும் ''உட்கார்ந்து சாப்பிடு'' என்றான் அவளிடம்.

''சும்மா சொன்னால் எப்படி அண்ணா; ஊட்டிவிட வேண்டாமா?'' என்று கண் சிமிட்டினாள் தங்கை.

''இப்போதல்லவா தெரிகிறது நீ ஏன் இப்படி உப்பிப் போனாய் என்று; அவ்விடத்தில் தினமும் மாப்பிள்ளை தான் ஊட்டி விடுகிறாராக்கும்'' என்று கேலியாக நகைத்தான் சந்திரன்.

''ஆங் நான் ஒன்றும் உப்பவில்லை. மெலிந்துதான் இருக்கிறேன்'' என்றாள் பானுமதி ரோஷத்துடன்.

''ஆனால் ஊட்டி விடுகிறது நிஜம்'' என்று சிரித்தான் சந்திரன். ''பானை பானையாக.''

''ம்... ம்... அதெல்லாம் கிடையாது என்றாள். தான் ஒன்றுமே சாப்பிட முடியவில்லை.

''பானை பானையாக இல்லையா? அப்படியானால் சட்டி சட்டியாகத்தான் ஊட்டி விடுகிறாராமா மாப்பிள்ளை?''

''கிடையாது கிடையாது'' என்று பானு மறுத்தும் அவளுடைய கணவன் சாகரன் குறுக்கிட்டான். ''சட்டி சட்டியாகக் கூட இல்லை. சந்திரன் வெறும் கிண்ணம் கிண்ணமாகத்தான் ஊட்டி விடுகிறேன்'' என்று சிரிக்காமல் சொன்னான்.

''என்ன நீங்கள்? அண்ணாவுடன் சேர்ந்து கொண்டீர்களே'' என்றாள் பானு ரோஷமாக.

''வாய்மையே வெல்லுமடா'' என்று பாடி விட்டு வயிறும் பிள்ளையுமாக இருக்கும் போது பொய் சொல்லக் கூடாது பானு. அப்புறம் உன் பாப்பாவும்...'' என்று இழுத்தான் சந்திரன்.

குப்பென்று முகம் சிவக்க ''சே... போ அண்ணா நீ சுத்த மோசம்'' என்று ஓடிவிட்டாள் பானு.

''மெள்ள பானு மெள்ளப்போ. ஓடாதே'' என்று கரிசனத்துடன் சாகரன் கூறவும் சந்திரன் உரக்கச் சிரித்தான்.

இவர் மட்டும் சிரிக்கிறாரே என்று பொறாமைப் பட்டாள் சுமித்ரா.

ஊரார் எல்லாம் கலைந்து சென்றபின் குடும்பத்தினர் மட்டும் சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்தனர். குடும்பத்தினர் என்றால் சந்திரனுடைய தமக்கை, தங்கை, அவரவர் கணவன்மார், சந்திரன், சுமித்ரா முதலியோர் மட்டுமே.

''இரவு முழுவதும் அரட்டையடிக்காமல் சீக்கிரம் படுங்கள்'' என்று உறங்கப் போய்விட்டார். சந்திரனுடைய தாயார்.

சுமித்ராவிடம் சின்னச் சின்னக் கேலிகள், கேள்விகள் சந்திர னிடம் கூடத்தான். ஆனால் இருவருக்கும் சேர்த்து அவனே பதில் சொன்னான். இடைமிடையே முகத்தில் நகையுடன் மனை வியை நோக்குவான் சந்திரன். மெல்ல மெல்லச் சகோதரிகளின் முகம் நன்கு மலரக் கண்டபின்தான் விஷயம் புரிந்த சுமித்ரா வுக்கு. வெட்கம் என்ற போர்வையில் தானும் தலை குனிந்து சமாளித்தாள். எவ்வளவு நேரம் சமாளிப்பது என்று அவள் பொறுமை சிதறும் சமயம் திடீரென்று ஒரு குழந்தையின் அழு குரல் கேட்டது.

''உன் மூன்றாவது வால் அழைக்கிறது அக்கா'' என்றாள் பானுமதி.

''இன்னமும் ஐந்தே மாதங்கள். பிறகு உன் வாலும் இப் படித்தான் அழைக்கும்'' என்று சிரித்தபடியே எழுந்து சென்றாள் சுமதி.

''வரிசையாக பானுவுக்கு எத்தனை வால் முளைக்குமோ தெரியவில்லை. ஆரம்ப வேகத்தைப் பார்த்தால் குறைந்தபட்சம் சுமதியை மிஞ்சி விடுவாய்'' என்று கேலி செய்தான் சந்திரன்.

"பார்த்துக் கொண்டே இரு அண்ணா, அண்ணி ஐந்து பொல்லா படுபொல்லாத வால்களைப் பெற்றுத் தரப் போகிறாள்" என்று பதில் கொடுத்தாள் பானுமதி.

"போச்சுடா ஒன்றைக் குறைத்து விட்டாயே. நான் ஆறு என்று கணக்கிட்டிருந்தேன் என்று பலத்த சிரிப்புக்கிடைமில் முடித்தான் சந்திரன்.

சுமித்ராவின் முகம் ரத்த நிறமே கொண்டு விட்டது.

அதற்குள் குழந்தையுடன் வந்த சுமதி "என்ன என்ன" என்றாள். அவளுடைய கணவர் மீண்டும் வெடித்த நகைப்புக் கிடைமில் விவரிக்கலானார்.

சினமும் சங்கடமும் அதை மறைக்கும் முயற்சியுமாக சுமித்ரா திணறினாள். சுமதியின் குழந்தையுடன் விளையாடும் சாக்கில் திரும்பினாள்.

அப்போது மாமனாரின் குரல் கேட்டது. உடனே அவர் பெற்ற மக்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "நாம் பார்க்கப் போகலாமா!" என்று எழுந்தான் சந்திரன்.

"அவசரமா அண்ணா?" என்று ரகசியமாகக் கேட்டுச் சிரித்தாள் பானு.

பெண்ணாகப் பிறவி எடுத்ததில் ஒரே ஒரு வசதி. எதற்கும் வெட்கம் என்று தலையைக் கவிழ்ந்து கொண்டு விடலாம் என்று நினைத்தாள் சுமித்ரா.

அவள் காதைத் திருகியபடி சாகரனிடம் "நீங்கள் கொடுக் கிற இடம் இவளுக்கு வாய் காதுவரை போலும் நீண்டு விட்டது" என்றான் சந்திரன் புன்னகையுடன்.

"ஆக உன் கணக்கு எல்லாம் முடிந்தது. நாளை வெள்ளிக் கிழமையா அதனால் நாளைஎன்று வந்து பந்தலைப் பிரித்துக் கொண்டுபோ" என்று உள்ளே வந்தார் சிவசுந்தரம்.

சந்திரனின் கண்கள் சட்டென ஒளி பெற்றுக் கூர்மையுடன் சுமித்ராவை ஊடுருவின.

கவனியாதவள் போல சுமித்ரா திரும்பினாள். சுமதியிடம் "அக்கா நான் உடம்புக்கு ஊற்றிக்கொள்ள முடியுமா? இல்லா விட்டால் எனக்குத் தூக்கமே வராதே" என்று மெல்லிய குரலில் வினவியபடி அவளோடு நடந்தாள்.

"தூக்கம் வந்தாலும் என் அண்ணன் உன்னைத் தூங்க விடமாட்டார்" என்றாள் பானு.

"உஷ் பானு எப்போதும் இப்படியே பேசக்கூடாது" என்று தங்கையை அடக்கினாள் சுமதி. "துணிகளை எடுத்துக் கொண்டு என்னோடு வா சுமித்ரா குளிக்கும் இடம் காட்டு கிறேன்" என்று அவளை அழைத்துச் சென்றாள்.

சுமித்ராவின் வீட்டுக் குளியலறை சட்டெனச் சந்திரனுக்கு நினைவு வந்தது. ஆள் நீளத் தொட்டி ஷவர் இரண்டிலுமே வெந்நீர் வசதி... இங்கே ஒரு வாளியில் சொம்பால் மொண்டு ஊற்றிக் கொண்டு குளிக்க வேண்டும்.

இவள் குளிர் நீரில் குளிப்பாளோ என்னவோ? குளிக்கட்டும் குளிக்கட்டும் எந்நாளும் வெல்வெட் குஷனிலேயே உருள முடி யுமா? பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரம் ஏறித்தான் ஆக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே போன, சந்திரன் அதிர்ந் தான். சே... நான் என்ன பேயா? என்ன மடத்தனமான உவமை!

எல்லோரும் சென்றபின் சந்திரன் யோசனையோடு தன் தந்தையிடம் சென்றான். அவர் நமட்டுச் சிரிப்புடன் மகனை எதிர் கொண்டார்.

எதிர்பார்த்தது தான் என்றாலும் தன்னோடு கூடவே படுக்கை அறைக்குள் சந்திரனும் வந்து கதவை தாளிடவும் சுமித்ரா சற்று திடுக்குற்றுத்தான் போனாள். வினாடிக்குள் சுதாரித்துக்கொண்டு கட்டிலில் கிடந்த ஒரு போர்வையை எடுத்துத் தரையில் விரித்தாள். ஒரு தலையணையும் எடுத்துக் கொண்டு படுக்கத் தயாரானாள் சுமித்ரா.

மனமில்லாத போதும் சுமித்ராவின் வீட்டுப்படுக்கை சந்திரனுக்கு நினைவு வந்தது. ஓர் அடி அமுங்கும் நுரை ரப்பர் மெத்தை. அதன் மேல் ஸாட்டின் உறை. தன் வாழ்நாளில் சுமித்ரா இப்படிக் கட்டாந்தரையில் படுத்திருப்பாளா? படுக்கட்டுமே. என்ன திமிராகப் பேசினாள். படுக்கட்டும் படுக்கட்டும் பேய்க்கு வாழ்க்கைப்... சே... மறுபடியும் பேயா?

''சுமித்ரா'' என்று அழைத்தான் சந்திரன்.

''என்ன?''

''மெத்தையைப் போட்டுக் கொள்கிறாயா? இது உனக்குப் பழக்கம் இராதே.''

''பழகிக் கொண்டால் போமிற்று'' என்று போர்வையில் அமர்ந்தாள் அவள்.

அவள் படுக்கப் போவதைக் கண்டதும், ''இன்னும் ஒன்று'' என்று அவளை நிறுத்தினான்.

''என்ன அது?''

''நானும் அப்பாவும் பேசியபோது நீ இங்கேயா இருந்தாய்?'' என்று வினவினான் கணவன்.

''ஆ... ஆமாம்'' என்றாள் அவள் குனிந்த தலை நிமிராமல் ''ஒட்டுக் கேட்டாயா'' வெடிப்பானோ?

நல்ல வேளையாக இல்லை. ''அந்த மூவாயிரம் நீ கொடுத்திருக்க வேண்டியதில்லை'' என்று மட்டுமே சொன்னான்.

நாலாயிரம் என்றால் அவன் என்ன சொல்லுவான்? புன்னகையை மறைத்தபடி ''அப்பா கொடுக்கச் சொன்னார்'' என்று முடித்துவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்து விட்டாள்.

''திமிரைப்பார். திரும்பி எனக்கு முதுகு காட்டிக் கொண்டு படுக்கிறாளே'' என்று எரிச்சலாக நினைத்தான் சந்திரன்.

அதிசயிக்கத்தக்க விதமாக அந்தப் பழக்கமற்ற படுக்கையிலும் சுமித்ரா விரைவிலேயே உறங்கிவிட்டாள்.

ஆனால் சொந்த வீட்டிலும் சந்திரனால் தூங்க முடியவில்லை. இதுவரையில் எப்படியோ, இன்னமும் இந்தப் பெண்ணின் முன் சிறுமைப்படுத்தி விட்டாரே அப்பா என்று நினைத்தான்.

வெளி தாழ்வாரத்தில் யாரோ விளக்கைப் போட்டார்கள். மேல் சன்னல் வழியே வெளிச்சம் நேராக சுமித்ராவின் முகத்தில் படவே தூக்கத்திலேயே அவள் திரும்பிப் படுத்தாள்.

அவளிடம் அசைவைக் கண்டு பார்த்தான் சந்திரன். வெளி விளக்கின் வெளிச்சமும் முழுமையை நெருங்கிவிட்ட நிலவின் ஒளியும் அறையினுள் அந்த மங்கிய வெளிச்சத்தில் சுமித்ராவின் முகம் தெரிந்தது. ஒரு கையைக் கன்னத்தின் கீழ்க் கொடுத்து மீண்டும் நல்ல துயிலில் ஆழ்ந்திருந்தாள் அவள். குழந்தை போலக் கபடமற்ற முகம். கன்னங்களின் மெல்லிய வளைவில் வெண்டைப் பிஞ்சு போன்ற விரல்களில் வாழைத் தண்டு போன்ற மெல்லிய கரங்களில் விவரிக்க முடியாத மென்மை குடிகொண்டிருந்தது. இவளா அன்று அவ்வளவு திமிரோடு பேசினாள்!

விலைக்கு வாங்கியதாகச் சொன்னாளே. வெகு கர்வத்து டன் சிறுமைப்படுத்தினாளே. ஆனால் அவள் நினைத்திருந்தால் இன்று அதைவிடவும் கேவலப் படுத்திமிருக்கலாமே, ஏன் கேட் கவில்லை? ஒரே பொருளுக்கு இரண்டாம் விலையா என்று அவனிடம் பணத்தை விசிறியடித்திருக்கலாம். ஏன் செய்ய வில்லை? அவ்வளவு நாகூக்கா அன்னையிடம் தந்தாளே. ஒரு வேளை இயல்பாகக் கெட்டவள் இல்லையோ? அவனை மணக் கப் பிரியமில்லாமல் தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கழுத்தை நீட்டினாளோ?

சந்திரன் யோசனையோடு மீண்டும் மனைவியைப் பார்த் தான். அழகிய எழில் வளைவுகள் அவன் மனதில் பதியவில்லை. ஆனால் கள்ளமற்ற முகம் சிந்தனையைத் தூண்டிற்று. ஏன் அப்படி நடந்து கொண்டாள் என்று விசாரிக்கலாமா என்று தோன்றியது. உடனேயே வேண்டாம் என்று தீர்மானித்தான்.

''எப்படியோ அவளது போக்கு எனக்கும் வசதியாகிப் போயிற்று. வசந்தியை மனசில் வைத்துக் கொண்டு இவளை அணைக்கும் வேதனை இல்லை'' என்று எண்ணமிட்டபடித் தலைக்குமேல் கைகளைக் கோர்த்துக் கொண்டான்.

மனத்திரையில் வசந்தி பொய்க் கோபத்துடன் பவனி வந்தாள். ''வேண்டாம் வசந்தி வராதே'' என்று மனதோடு கூறியபடியே உறங்கி விட்டான்.

மறுநாள் காலையில் அவன் விழிக்கும்போது சுமித்ரா அங்கே இல்லை. ஆனால் ஓர் இனிய குரல் பூசை அறையிலி ருந்து பூபாள ராகத்தை இசைத்தது. ''எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயோ'' என்று பாடி முடித்தது.

''குடும்ப லட்சுமி இப்படித்தான் காலையில் கடவுளைத் துதி செய்ய வேண்டும். இனி நீ போ அம்மா'' என்று அமர்த்த லாகச் சொல்லிவிட்டு வெளியே சென்றார் சிவசுந்தரம்.

குறும்புடன் அண்ணன் அறைக்குள் எட்டிப் பார்த்தாள் பானுமதி. ''தினமும் அண்ணி இப்படித் திருப்பள்ளி எழுச்சி பாடினால்தான் எழுவாயா அண்ணா? வா வா வா பாட்டு முடிந்து விட்டது'' என்றாள் கேலியாக.

''போக்கிரிப் பெண்'' என்று அவள் தலையில் குட்டி விட்டுக் கையில் பிரஷ்சுடன் பின்புறம் சென்றான் சந்திரன். குளித்துவிட்டு வருகையில் சுமதியின் பிள்ளை அவன் தோளில் ஏறியிருந்தான்.

''கீழே இறங்கடா நந்து. குளித்துவிட்டு இவனைத் தூக்கி அழுக்காக்கிக் கொண்டாயாக்கும்?'' என்றாள் சுமதி தம்பியிடம்.

''அழுக்காகாமல் இருக்கத்தான் அவனையும் குளிப்பாட்டி விட்டேன்'' என்றான் சந்திரன்.

முன்தினம் சாக்லேட் தந்த அத்தை அங்கே வரவே நந்து குஷியுடன் ''அத்தை'' என்று கத்திக் கொண்டு கையை நீட்டினான்.

''அதற்குள் அத்தையிடம் ஒட்டுகிறாயா? பயலே?'' என்றபடி சிறுவனை மனைவியிடம் கொடுத்தான் சந்திரன்.

குளிந்த தலையுடன் பிள்ளையை வாங்கிக் கொண்டு திரும்பினாள் சுமித்ரா. விசாலமான வெற்று மார்புடன் உருண்டு திரண்ட தோள்களுடன் அவனைப் பார்க்கவும் சுமியால் தலை நிமிர முடியவில்லை.

''அவனை இறக்கி விட்டு விட்டு தம்பிக்கு டிபன் எடுத் துக் கொடு போ சுமி'' என்று அவளை அனுப்பினாள் சுமதி.

கையில் கட்டுடன் கணவனைப் பின் தொடர்ந்தாள் சுமித்ரா. அவனது பரந்த முதுகில் பார்வை பதிந்தது. ஆஜானுபாகு. அந்த பந்தயக் குதிரைக்கு ஏற்ற உடல் கட்டு என் ஒல்லி உடம்பு இவருக்கு எந்த வகையில் பொருந்தும்'' என்று வேதனையுடன் நினைத்தாள்.

திடீரென்று பானுமதியின் குரல் கேட்டது. ''அண்ணனும் அண்ணியும் அருகே நின்றால் தேக்கு மரமும் அதில் பின்னிப் பிணைந்த பூங்கொடியும் போல எவ்வளவு பொருத்தமாக அழகாக இருக்கிறது என்னக்கா?'' என்று சுமதிமிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

சுமித்ராவின் வேதனை மறைந்தது. மனதில் ஒருவித திருப்தி தோன்றியது. முகம் ஒளி பெற்றது. தலை நிமிர்ந்தது.

6

இது இப்படித்தான் என்று ஆகிவிட்டால் அதற்கு ஏற்பத் தன்னை வளைத்துக் கொள்வது மனித இயல்பு. சுமித்திரை மின் வாழ்வும் புதிய வார்ப்பில் முரண் இன்றிப் படிந்து போயிற்று.

தான் வழக்கம்போலக் காலை எழுந்து பயிற்சிகளைச் செய்வதிலிருந்து தந்தையுடன் சேர்ந்து காபி அருந்துவதுவரை சுமித்ராவின் பழக்கங்களில் மாற்றம் இல்லை. அதன் பிறகு கணவனுக்குத் தேவையானதை கவனிப்பதாகப் பேர் பண்ணிக் கொண்டு தங்கள் பொது அறையில் வரி விடாமல் பத்திரிகை படிப்பாள்.

சிற்றுண்டி வேலை முடிந்து தந்தையும் கணவனும் அலு வலகம் சென்ற பின் சமையல் திட்டத்தைப் பார்ப்பாள். ஏதா வது ஒரு பதார்த்தம் — அவள் ஹோம் ஸயன்சில் கல்லூரிமில் கற்றுக் கொண்டது ஒன்றை ஆக்குவாள். மதிய உணவு இரு வருக்கும் அலுவலகத்துக்குச் செல்லும். மாலை மூன்று மணி சுமாருக்குத் தன் காரை எடுத்துக்கொண்டு செல்வாள்.

தான் நேராகப் பார்த்து வாங்க வேண்டிய பொருட்களை வாங்குவாள். அவ்வப்போது வீட்டுக்கு வரும் விருந்தினருக் குத் தேவையானவைகளை கவனிப்பாள். பொதுவாக விருந்தி னர் அதிகநாள் தங்குவதை ராமநாதன் ஊக்குவிப்து இல்லை. அவரவர் வந்த காரியத்தைச் சட்டு புட்டென்று நிறைவேற்றி விரைவில் இன்முகத்துடனே அனுப்பி விடுவார். எனவே அங்கே நிரந்தர விருந்தாளித் தொல்லை கிடையாது.

பொதுவாக மாலை ஐந்தரை மணிக்கு மேல் ஆறு மணிக்குள் ராமநாதனும் சந்திரனும் திரும்பி வருவார்கள். மீண்டும் ஏதா வது வெளியே செல்ல வேண்டியிருந்தால் சற்று முன்னதாக வருவார்கள். பேச்சுக்கிடையே சிற்றுண்டி நடக்கும். பிறகு சந்திரன் அலுவலக பைல் பார்க்கப் போவான்.

சுமித்ராவும் அவளுடைய தந்தையும் செஸ், காரம் என்று ஏதாவது ஆடுவார்கள். வேலை ஏதும் கொண்டு வராதபோது சந்திரனும் இதில் கலந்து கொள்வான்.

எட்டு எட்டரைக்குள் உணவை முடித்துக்கொண்டு ஒன்பது மணிக்கு உறங்கச் சென்று விடுவார்கள். வழக்கமாக ராமநாதன் பதினோரு மணிவரை அலுவலக ஃபைலில் ஆழ்ந் திருப்பார். பெருமளவு வேலையை இப்போது சந்திரன் பார்த் துக்கொள்ளவே அவர் நிம்மதியாக விரைவில் உறங்கலானார்.

நாள் முழுவதும் ஏதாவது செய்தபடி இருந்த போதிலும் தன் உள்ளும் புறமும் ஒரு பயங்கர வெறுமை தன்னை பீடிப்பதை சுமித்ரா உணர்ந்தாள். எவ்வளவோ முயன்றும் அந்த உணர்ச்சியை அவளால் உதற முடியவில்லை.

சுமித்ரா அறியாச் சிறுமி அல்ல. அன்னை இருக்கும் போதே பொறுப்புகளில் ஓரளவு பழக்கிவிடப்பட்டிருந்த பெண். அவர் இறந்தபின் அந்தப் பெரிய வீட்டின் பொறுப்பையே ஏற்று நடத்துகிறவள். எத்தனையோ சினிமா, நாடகம் பார்த்தவள். கதைகளைப் படிப்பதில் விருப்பமுள்ளவள். அவள் தன் வாழ்வைப் பற்றியும் பல இனிய கற்பனைகள் செய்து வைத்திருந்தாள். ''என் பெண்ணுக்குப் பெண்ணே'' என்று ஆயாவிடம் கேலி பேசியவள் ஆமிற்றே, எவ்வளவோ கட்டுப்படுத்தியும் மீறிக்கொண்டு தன் வாழ்வு இப்படி இருக்கக்கூடும் என்று எண்ணி எண்ணி மனம் நோகலானாள்.

போகாத ஊருக்கு வழியாமிற்றே என்ற எண்ணம் அந்தக் கற்பனையோ அதன் விளைவான நோவையோ தடுக்கவில்லை, குறைக்கவும் இல்லை. அதிலும் இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி நடிக்க நேர்கையில் தான் அவளால் சகிக்க இயலாது போயிற்று. தனக்குள்ளேயே உருகலானாள். இந்த நிலையில் உமாவின் திருமணம் வந்தது.

சுமித்ராவின் மிகவும் நெருங்கிய தோழி உமா! அதிலும் சுமியிடம் அவளுக்கு ஒருவிதக் காதல் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவுக்கு சுமியிடம் பமித்தியமாமிருப்பாள். திருமணத்துக்குக் கட்டாயமாக இருவரும் வரவேண்டும் என்று வற்புறுத்திச் சுமித்ராவிடம் வாக்குறுதி பெற்றுச் சென்றிருந்தாள். அவளுக்கு நல்லதாக ஒரு பரிசு வாங்க வேண்டும் என்று சென்றாள் சுமித்ரா.

செல்லும் வழியெல்லாம் ஏதேதோ கற்பனைகள். சந்திரனும் சுமித்ராவும் இந்தக் கல்யாணப் பரிசு பற்றிக் கலந்து பேசி முடிவு செய்கிறார்கள். கடைசியாக ''நல்ல பொருத்தமான பரிசைத் தேர்ந்து எடுத்து கண்மணிக்கு என் பரிசு'' என்று ஒரு பரிசு கொடுக்கிறாள்...

எல்லாம் கற்பனை என்று எண்ணும்போது நெஞ்சில் வலித்தது. வழக்கம்போல் வேதனையை விழுங்கிக் கொண்டு காரைக் கடையின் பக்கவாட்டில் கார்களை நிறுத்தும் இடத்தில் நிறுத்தினாள்.

அந்தக் கடை ஒரு தனியார் நிறுவனம். அங்கு இல்லாத பொருளே இல்லை எனலாம். துணிமணிகள் ஒரு பகுதி. அலங்காரச் சாதனங்கள், பாத்திரங்கள், வெள்ளிச் சாமான்கள், மளிகை, பிளாஸ்டிக் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதியில் வெகு நேர்த்தியாக விற்பனை செய்யப்பட்டன. சுமித்ரா அடிக்கடி இங்குதான் சாமான்கள் வாங்குவாள். தரமானவை என்பது ஒரு காரணம். அந்த நிறுவனத்தின் மானேஜரிணி ஒரு காலத்தில் சுமித்ராவின் ஆசிரியையாக இருந்தாள் என்பது மற்றொரு காரணம்.

சும்மாவே சிறு வேதனையுடன் அங்கு வந்த சுமித்ராவுக்கு மற்றொரு அதிர்ச்சி. வசந்தி சுமித்ராவைத் திரும்பிப் பார்த்தபடி ரெடிமேடு உடைப் பகுதிக்குள் சென்று கொண்டிருந்தாள்.

முகம் மாறாமல் நேராக நடந்து ஒரு மாடி ஏறினாள் சுமித்ரா. ''அவங்க உங்க சந்திரனோட மிஸஸ்தானே?'' என்று யாரோ வினவும் குரல் கேட்டது. நின்று திரும்பினாள்.

சந்திரனுடைய நண்பர்களில் ஒருவனும் அவனுடைய மனைவியும். ''தியாகு'' என்று சந்திரன் அறிமுகம் செய்வித்த நினைவு வந்தது சுமித்ராவுக்கு. முறுவலித்தபடி அவர்களை நெருங்கி ''வணக்கம்'' என்றாள்.

அந்தப் பெண் மகிழ்ச்சியுடன் ''எங்களை நினைவிருக்கி றதா உங்களுக்கு?'' என்று வியப்புடன் வினவினாள்.

'பின்னே?' என்று முத்துப்பல் தெரியச் சிரித்தாள் சுமி. அதற்குள், அந்தப் பெண்ணின் கைமில் இருந்த குழந்தைமிடம் சுமித்ராவின் கவனம் தாவியது. தலை நிறைய சுருளான கூந்த லும் கவருவதாக இருந்தது. அதைப் பார்த்துப் புன்னகை புரிந்த படி ''வருவாயா?'' என்று கைகளை நீட்டினாள் சுமித்ரா.

தாயை ஒருமுறை பார்த்துவிட்டு சுமித்ராவிடம் தாவியது குழந்தை.

''அவன் எல்லோரிடமும் வருவான்'' என்று பெருமையு டன் கூறினாள் தாய்.

''இதோ வருகிறேன்'' என்று குழந்தையுடன் சாக்லேட் பிஸ்கட் போன்றவை விற்கப்படும் இடப்புறப் பகுதிக்குள் சென்றாள் சுமித்ரா. கண்ணைக் கவரும் வண்ணங்களில் படங் கள் போட்ட விலை உயர்ந்த சாக்கலேட் பெட்டி ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தாள். மனம் சற்று வாடியது. ஏனெனில் தியாகு தம்பதிகளின் அருகே வசந்தி நின்று கொண்டிருந்தாள் அதே மதமதப்பு.

''என்னை உங்களுக்கு நினைவிருக்காது...'' என்று இழுத் தாள் வசந்தி.

''நினைவில்லாமல் என்ன மிஸ் வசந்தி? வணக்கம்'' என்று அமைதியாகப் பதில் கூறினாள் சுமித்ரா.

''பரவாயில்லையே'' என்று அளவுக்குச் சற்று அதிகமாகவே வியந்தாள் வசந்தி. பணக்காரச் சீமாட்டிகளுக்குக்கூட ஞாபகசக்தி எல்லாம் இருக்கிறதே...

''மிசஸ் சந்திரன் அப்படிப்பட்டவர்கள் இல்லை வசந்தி'' என்று பரிந்து வந்தான் தியாகு.

''பணக்காரர்களுக்கு மற்றவர்களை விட அதிகமாக ஞாபக சக்தி வேண்டும் மிஸ் வசந்தி. இல்லாவிட்டால் பணம் பத்து நாளில் பறந்து போய்விடும்'' என்று அமைதியாகப் பதில் கொடுத்தாள் சுமித்ரா. பிறகு திருமதி தியாகுவிடம் திரும்பிச் சாக்லேட் பெட்டியை நீட்டினாள்.

''அய்யோ இதெல்லாம் எதற்காக?'' என்று வெட்கப்பட் டுக்கொண்டே அதை வாங்கிக் கொண்டாள் அவள்.

''இருக்கட்டும்'' என்று குழந்தைமின் பட்டுக் கன்னத்தை மிகுந்த ஆசையுடன் வருடினாள் சுமித்ரா. எப்போதுமே சுமித்ரா வுக்கு குழந்தைகளிடம் ஆசை உண்டு. திருப்பி கொடுக்க மனமில்லாமல் குழந்தையை அணைத்தாள்.

''அவ்வளவு ஆசை உள்ளவர்கள் விரைவிலேயே ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று காரசாரமாக இடைமில் புகுந்தது வசந்தியின் குரல். ''அல்லது உடல்கட்டு போய்விடும் என்று பயமாக இருக்கிறதோ?'' என்று குத்தலாக கேட்டபடி தன் வாட்டசாட்டமான உடலைச் சற்று நெளிந்து ஒயிலாக நின்றாள்.

சுமித்ரா உதட்டை பற்களால் அழுத்தினாள்.

தியாகு அவசரமாகப் பேசி நிலைமைகளைச் சமாளித்தான். ''பாப்பாவுக்கு பிறந்த நாள் வருகிறது. நல்லதாக ஒரு கவுன் வாங்க வேண்டும் என்று பார்த்தோம். இங்கே நன்றாக இருக் கும்; விலை குறைத்து வாங்கித் தருகிறேன் என்று சொன்னாள் வசந்தி. அவள் இப்போது இங்கே வேலை பார்க்கிறாளே? பார்த்து வாங்கலாம் என்று இங்கே வந்தோம்'' என்றான்.

''ஆமாம் இங்கே எல்லாச் சாமானுமே தரமாக இருக்கும்'' என்று குழந்தையைத் தாயிடம் அளித்தாள் சுமித்ரா. ''வரட்டுமா நான் போக வேண்டும்'' என்று இளம் முறுவலுடன் விடை பெற்றாள் சுமித்ரா.

''சந்திரன் வருகிற நேரமோ? பறக்கிறீர்களே'' என்று மேலும் குத்திப் பேசினாள் வசந்தி.

வெகு இனிமையாக முறுவல் செய்தாள் சுமித்ரா. ''அட கண்டு பிடித்து விட்டீர்களே. கணவர் வரும் நேரம் மனைவி இன்முகத்துடன் எதிர்கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் நேரமாகி விட்டது வரட்டுமா? என்று திரும்பினாள்.

''வந்து மிசஸ் சந்திரன் பாப்பாவின் பிறந்தநாள். பத்து நாளைமில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகிறது. நீங்கள் கட்டாயம் வரவேண்டும்'' என்று அவசரமாக அழைத்தாள் திருமதி தியாகு. நீங்களும் வரவேண்டும் வசந்தி.''

''முயற்சி செய்கிறேன்'' என்றாள் சுமித்ரா.

''என்னை விட்டு விடுங்கள்'' என்றாள் வசந்தி. ''அன்று எனக்கு வேறு வேலை இருக்கிறது. அன்று என்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்'' என்றாள் தலையை நிமிர்த்தி.

அவள் வரவில்லை என்றதும் ''போகலாமே'' என்று தோன்றியது சுமிக்கு.

''அவனுக்கு டெலிபோன் செய்கிறேன் என்று சொல்லுங்கள்'' என்று விடை கொடுத்தான் தியாகு.

அன்று மாலைமில் சந்திரனும் ராமநாதனும் கேரம் ஆடிக் கொண்டு இருந்தனர். சந்திரன் கை ஓங்குவதைச் சற்று அசூயையுடன் பார்த்துக்கொண்டு இருந்தாள் சுமித்ரா.

அவளுக்கு ஒரு சிக்கல். தியாகுவைப் பார்த்தது பற்றிச் சந்திரனிடம் சொல்ல வேண்டும். அப்போது வசந்தியைப் பற்றியும் சொல்லித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் நன்றாமிராது. பின்னே எப்போதேனும் தெரிய நேர்ந்தால் சுமித்ரா வேண்டும் என்றே சொல்லாதது போலத் தோன்றும்.

''இன்று உங்கள் நண்பர் தியாகுவைக் குடும்பத்தினருடன் சந்தித்தேன்'' என்றாள் சட்டென்று.

''ம்ம்...'' என்றான் அவன் ஆட்டத்தில் கவனமாக.

''அவருடைய குழந்தைமின் பிறந்த நாளைக்கு அழைத்தார்கள். உங்களுக்கு டெலிபோன் செய்கிறாராம்.''

''யார் பிறந்தது... மாமா சிவப்புக்காய் அம்பில் இருக்கிறது. நீங்கள் அடிக்க முடியாது ஊகம்.''

''உங்களுடைய நண்பருடைய மகளுக்கு அடுத்த ஞாயிறன்று முதல் பிறந்த நாளாம்'' என்றாள் சுமித்ரா அழுத்தம் திருத்தமாக.

சந்திரன் கவனம் ஒருவாறு அவளிடம் திரும்பியது. ''என்னது!'' அதற்குள்ளாகவா? அவன் திருமணமாகி இன்னும் இரண்டு ஆண்டுகள் முடியவில்லை'' என்று சிரித்தான்.

''போகலாமா'' என்றாள் சுமித்ரா ஆவலுடன். ''அந்தக் குழந்தை வெகு அழகாக இருந்தது.''

''பார்க்கலாம். பார்க்கலாம். அவன் டெலிபோன் செய்வான் என்றாயே...'' என்று சிவப்புக்காய்க்குக் குறி வைத்தான் சந்திரன்.

''ஊரெல்லாம் பிள்ளை...'' என்று ராமநாதன் தொடங்கினார்.

அதற்குள் சுமித்ரா குறுக்கிட்டாள். ''அங்கே உங்கள் வ... உங்கள் அலுவலகத்து மிஸ் வசந்தியையும் பார்த்தேன்'' என்று வேகமாகச் சொல்லி முடித்து விட்டாள்.

அவன் சற்றே திடுக்கிடக் கண்டாள் சுமித்ரா. ''யார் வச... ஓகோ மிஸ் வசந்தியா? பிறந்த நாளைக்கு அவளையும் அழைத் திருப்பார்களே.''

''அழைத்தார்கள். ஆனால் வேறு வேலை இருப்பதால் வர முடியாது என்று மறுத்து விட்டாள். அந்த வேறு வேலை என்ன வென்று சொல்லிவிட சுமித்ராவுக்குத் தோன்றியது. சிரமப்பட்டு நாவை அடக்கிக் கொண்டாள்.

''சரிதான்'' என்றான். அவன் சாவதானமாக ''மாமா நீங்கள் தோற்கப் போகிறீர்கள், நான் சிவப்புடன் காயும் அடித்து விட்டேன்'' என்றான் பெருமையாக, பிறகு வேகமாக அந்த ஆட்டத்தை முடித்து விட்டு ''மாமா எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று எழுந்து தன் அறைக்குச் சென்றான்.

அவன் வசந்திமின் நினைவை அசைபோடப் போகிறான் என்பது சுமித்ராவுக்குப் புரிந்தது. அந்த நினைவு வேதனையை யும் தந்தது. ஆனால் அவனைத் தடுக்கும் சக்தியற்றுச் சும்மா உட்கார்ந்து இருந்தாள் சுமித்ரா அதுமட்டும் அல்ல, கொஞ்ச காலமாகச் சற்று சரளமாக அவளிடமும் பேசத் தொடங்கி இருந்த அவன் அன்றிலிருந்து மீண்டும் ஒதுங்கி நிற்கலானான்.

இரு தினங்களில் உமாவின் திருமணம் வந்தது. முன் தினமே சந்திரனிடம் நினைவுபடுத்தி விட்டுக் காலைமிலேயே அலங்கரித்துக் கொண்டாள் சுமித்ரா. நல்ல ஆரஞ்சு வண்ணத் தில் அகன்ற ஜரிகைக் கரையுடன் உடல் பூராவும் மெல்லிய

ஜரிகைக் கட்டங்களுடன் சேலை பள பளத்தது. பொருத்தமாகப் பவளமும் முத்தும் பதித்த நகைகள், அழகுக்கு அழகு செய்தாற் போல அவள் செம்பாவை எனத் திகழ்ந்தாள். அலங்காரத்தை முடித்துக் கொண்டதும் இதைச் சந்திரன் கவனிப்பானா என்ற ஏக்கத்துடன் நினைத்தாள். கூடவே "இன்னொருத்திமின் காதலில் கட்டுண்ட ஒருவர் என்னை ஏன் கவனிக்க வேண்டும்? ஒன்றும் வேண்டியதில்லை" என்று ஆத்திரத்துடன் நினைத்தாள். ஆனாலும்...

வழக்கம் போலத் தாமின் படத்தை வணங்கித் திருநீறைக் கீற்றாக செஞ்சாந்து திலகத்தின் மேலே பூசிக்கொண்டு கிளம்பினாள்.

கதவைத் திறந்துகொண்டு சுமித்ரா வரவும், 'பட்டு வேஷ்டியும் — புல்ஷர்ட்'டுமாக வரவும் சரியாக இருந்தது. இந்த உடையும் அவளது உயரத்துக்கும் உருவத்திற்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று மனதில் ஏக்கத்துடன் நினைத்து நிமிர்ந்தாள் சுமித்ரா.

அவன், "போகலாமா?" என்ற கேள்வியுடன் மடமடவென்று முன்னே சென்றான். வாடிய மனதுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

திருமண வீட்டில் இவர்களுக்கு பலத்த வரவேற்பு. இயல்பான சரளத்துடன் எல்லோருடனும் பேசினான் சந்திரன்.

"லக்கிமேன் சார் நீங்கள்" என்று ஓர் இளைஞன் சந்திரனின் கையைப் பற்றிக் குலுக்கினான். "எப்படியோ சுமித்ரா நன்றாக இருக்கட்டும்" என்றான் சற்று சோகமாக.

"வருத்தத்துடன் வாழ்த்துகிறீர்களே" என்றான் சந்திரன் சற்று வியப்பும் சிரிப்புமாக.

ஆனால் வந்தவன் சிரிக்கவில்லை. ''நான் உமாவின் பெரியப்பா மகன்'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான். அவன் பார்வை ஏக்கத்துடன் சுமித்ராவிடம் சென்றது.

அவனது பார்வையைத் தொடர்ந்து சந்திரனும் பார்த்தான். நாரகைக் கூட்டத்தின் நடுவே முழு நிலா போல சுமித்ரா புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள். பல் வரிசையில் ஒளிச் சிரிப்புக்கு முன்னே கழுத்தாரத்தின் முத்துக்கள் தோற்பதைச் சற்று வியப்புடன் கண்டான் சந்திரன்.

சந்திரனுக்குப் புரிந்து போயிற்று. ஆனால் புரிந்த விஷயம் தான் மனதிற்கு இதமாக இல்லை. ''சுமித்ராவை நீங்கள் மணப்பதாக இருந்ததாக்கும்'' என்றான் சிறிது எரிச்சலுடன்.

''இல்லை'' என்று வெகு சோகமாகத் தலையசைத்தான் அவன். ''ஒரு பக்க ஆசையில் பயன் என்ன? சுமித்ராதான் அந்தப் பேச்சே கூடாது என்று உமாவிடம் சொல்லி விட்டாளே'' என்று பெருமூச்செறிந்தான்.

சந்திரனுக்குக் கொஞ்சம் நிம்மதி உண்டாயிற்று.

அதற்குள் மணமேடையில் முக்கியச் சடங்குகள் தொடங்கவும் எல்லோர் கவனமும் அங்கே சென்றது.

மணமகனும் மணமகளும் ஏற்கெனவே அறிமுகம் ஆனவர்கள். காதலர்களும்கூட ரகசியப் பார்வைகளும் புன்னகைகளும், லேசான உரசல்களும் எல்லோரிடமும் புன்னகைகளும் வரவழைத்தன. சுமித்ரா கண் சிமிட்டக்கூடவில்லை. உள்ளூர ஏக்கத்துடன் கண்ணில் ஆவலுடன் மேடை நாடகத்தைக் கவனித்தாள். தன்னையும் சந்திரனையும் அதே போலக் கற்பனையில் கண்டு ஏங்கினாளே. விழிகளில் ஏக்கம் உதடுகளில் புன்னகையுமாக நின்றாள்.

தன்னையறியாமல் மீண்டும் மனைவியின் புறமாகப் பார்வையைச் செலுத்திய சந்திரன் மனதில் அந்த முகமும் கண்களில் ஏக்கமும் பதிந்தன.

ஓமத்தை வலம் வந்து பின் மணமக்கள் அமர்ந்ததும் பரிசளிப்போர் குவிந்தனர். கொஞ்சம் கூட்டம் குறைந்தபோது சுமித்ரா கணவனிடம் வந்தாள். நாமும் கொடுத்து விடலாமா?''

''ஓ'' என்றவன் அவளது வெற்றுக் கரங்களைப் பார்த்துப் புருவத்தைச் சுருக்கினான். ஆனால் சுமியின் பார்வை வெளிப்புறம் சென்றது. அங்கே டிரைவர் பார்வையில் படவேலேசான புருவ அசைவில் அவனை ஏவினாள். அவன் பரிசுப் பொருளுடன் ஓடி வந்தான். ''இதற்காகத்தான் டிரைவர் வரட்டும் என்றாள்?'' என்று எண்ணினான் சந்திரன்.

இருவருமாகச் சென்று பரிசு வழங்கினர்.

''திருநீறு பூசிவுடம்மா'' என்றார் உமாவுடைய தகப்பனார்.

''நானா?'' என்று லேசாக வெட்கத்துடன் திரும்பினாள் சுமித்ரா.

''பூசம்மா'' என்றார் அவர் மீண்டும்.

''பூசி விடுடி'' என்றாள் உமா.

வெட்கச் சிரிப்புடன் ஒரு விரலால் விபூதியைத் தொட்டு தோழியின் நெற்றியில் பூசினாள் சுமித்ரா. உணர்ச்சிவசப்பட்ட உமா அப்படியே சுமித்ராவை அணைத்துக் கொண்டாள். சுமியும் தோழியின் தோளைப்பற்றி, ''மகிழ்ச்சியோடு இரு'' என்று நிறைந்த மனதுடன் வாழ்த்தினாள்.

''ஏய் என்னடி? எல்லோரும் சௌபாக்கியத்துடன் இரு என்கிறார்கள். நீயானால் மகிழ்ச்சியாக இரு என்கிறாயே'' என்றாள் உமா சிரிப்புடன்.

''பூவும் பொட்டுமாக வாழ்ந்தாலே சௌபாக்கியம்தான் உமா. ஆனால் அதெல்லாம் இருந்தும் மகிழ்ச்சி இல்லாமல் போய்விடக் கூடாதுபார்'' என்று உமாவின் கணவனைச் சிறு வெட்கத்துடனும் உடன் பிறந்தானைப் பார்க்கும் பாசத்துடனும் பார்த்தான் சுமித்ரா. ''உமாவைச் சந்தோஷமா வைத்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினாள்.

''நிச்சயமாய்'' என்று சிரித்தான் அவன். ''இப்போது சொன்னாலும் தோப்புக் கரணம் போடுகிறேன். எத்தனை வேண்டும் உமா?'' என்று மேலும் நகைத்தான்.

''ஆக மகிழ்ச்சியின் ஊற்றாக இருக்க வேண்டியவர் திருமதி ராகவன்தான் போலும். மிஸ்டர் ராகவனைச் சந்தோஷ மாக வைத்துக் கொள்ளுங்கள், உமாதேவி'' என்று சிரித்தான் சந்திரன்.

திரும்பி வரும்போது, ''குடும்பம் மகிழ்ச்சியாக இருப் பது பெண்ணின் கையில்தான் இருக்கிறது'' என்றான் சுமித்ரா விடம்.

அவன் பேச்சு சுருக்கென்று தைக்க ''இப்படிச் சொல் லியே பொறுப்பைத் தட்டிக் கழித்துப் பெண்ணின் தலையில் கட்டுவது ஆண்களின் வழக்கமாகிவிட்டது'' என்றாள் வெடுக் கென்று.

''இங்கே யார் தட்டிக் கழித்தார்கள்?'' என்றான் சந்திரன் குத்தலாக.

தட்டிக்கழித்தது என்று சொல்லப்போனால் அது சுமித்ரா தானே பிரியமில்லாத போதும் தாலி கட்டிய கடமைக்காக அவளை ஏற்றுக்கொள்ள அவன் தயாராகத்தானே இருந்தான். ஆனால் கடனே என்று வேண்டா வெறுப்பாக அவன் தொடுவதைக்

காட்டிலும் தீயால் சுடுவது சுகம். முன்னிலும் அதிகமாக ஒதுங்கி உட்கார்ந்து வெளியே பார்க்கலானாள் சுமித்ரா.

சந்திரனின் கேலிச்சிரிப்பு காதில் விழுந்தது. மனதில் சினம் பொங்கியது. ''நீங்கள் மட்டும் என்ன ஒழுங்கு'' ஒருத்திக்கு ஆசைகாட்டி விட்டுப் பணத்துக்காக என்னை மணந்தீர்களே'' என்று சூடாகக் கேட்டுவிட நாவு துடித்தது. கேட்பது வினாடி மில் முடிந்துவிடும். ஆனால் விளைவுகள்? தந்தை முன்னி லையிலும் அவன் வித்தியாசமாகப் பழகத் தொடங்கிவிட்டால்? சினத்தையும் நாவையும் உதட்டைக் கடித்து அடக்கினாள் சுமித்ரா.

மறுநாள் அவள் எதிர்பாராத விருந்தாளியாக ஒரு பெண் வந்தாள். அவள் சந்திரனுடைய தங்கை பானுமதி.

சந்திரனும் ராமநாதனும் அலுவலகத்துக்குச் சென்ற பிறகு சமையல் அறையில் புதுவிதமாகக் கத்திரிக்காயை வெட்டிப் பொரித்து எடுத்துக்கொண்டு இருந்தாள் சுமித்ரா. அப்போது வேலைக்காரப் பையன் முருகு ஓடி வந்தான். ''அம்மா, அம்மா, நம்ம சின்னய்யா வீட்டுத் தங்கச்சிமிம்மா வந்திருக்காங்கம்மா'' என்றான்.

சுமித்ராவுக்கு வியப்பாக இருந்தது. திருமணம் ஆகி இந்த இரு மாதங்களில் சந்திரன் வீட்டார் என்று யாரும் இங்கே வந்தது இல்லை. வாரா வாரம் சந்திரன் தாம்பரத்துக் குச் சென்று வருவதை சுமித்ரா அறிவாள். ஒருமுறை சுமித்ரா வைக்கூட அவன் அழைத்துச் சென்றிருந்தான். ஆனால் அங்கி ருந்து ஒருவருமே வந்தது இல்லை. பெற்றோரைச் சந்திரன் அடக்கி வைத்திருக்கிறான் என்று சுமிக்குச் சந்தேகம் உண்டு.

சுமதி விழுப்புரத்துக்காரி. நினைத்தாற் போலக் கிளம்பி வருவது அவளால் இயலாது. பானுமதிமின் கணவன் சாகரனுக்

குத் தாம்பரத்திலேயே மர வியாபாரம். அவனும் வியாபாரத்தைப் போட்டுவிட்டு மனைவியோடு சுற்றுகிறவன் அல்ல. எனவே இப்போது ''அய்யாவின் தங்கச்சியம்மா''வின் வரவு சுமித்ரா வுக்கு ஆச்சரியத்தை தந்தது.

''மீதியை இதேபோல் பொரித்துவிடு நாயர்'' என்று பணித்து விட்டுச் சமையல் அறையைவிட்டு வெளியேறினாள். இழுத்துச் சொருகியிருந்த முந்தானையை எடுத்துவிட்டுக் கைக்குட்டை யால் நெற்றி வியர்வையை ஒற்றியபடி முன் வரவேற்பறைக்கு வந்தாள்.

மெய்யாகவே பானுமதிதான். ஏழு மாதத் தாய்மையில் தள தளத்த உடலுடன் அவளைக் கண்டதும் சுமித்ரா புன்னகை செய்தாள்.

''அண்ணி'' என்று எழுந்தாள் பானுமதி. அவளது கண்களில் கலக்கத்தைக் கண்டதும் அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள் சுமித்ரா.

''அடேயப்பா! உன் அறை சினிமாவில் வருவது போல இருக்கிறதே அண்ணி!'' என்று வியந்தாள் பானுமதி.

லேசாகச் சிரித்துவிட்டு பானுவுக்குப் பழச்சாறு கொண்டு வந்து கொடுத்தாள் சுமித்ரா. பிறகு ''என்ன விஷயம் பானு!'' என்று வினவினாள்.

பானுவின் முகம் மீண்டும் கலங்கியது. ''அண்ணி இந்த வெள்ளிக் கிழமை எனக்கு வளைகாப்பு செய்யப் போகிறார்கள் இல்லையா...'' என்று தொடங்கினாள்.

இது சுமித்ராவுக்கு தெரியாத விஷயம். இன்னமும் மூன்றே தினங்களில் வளைகாப்பு என்ற போதிலும் சந்திரன் அதை இன்னமும் அவளிடம் சொல்லவில்லை. இந்த நிலை

அவளுக்கு வேதனையைத் தந்தது. பானுவிடம் அதைச் சொல்ல மனமில்லாமல் ''மகிழ்ச்சியான விஷயத்தை அழுது வடிந்து கொண்டு பேசுகிறாயே'' என்று கேலியாகப் பேசினாள்.

''உள் சமாசாரத்தை அண்ணன் உன்னிடம் சொல்லவில்லை போல் இருக்கிறது. அப்பா வழக்கம் போல் ஜம்பமாக பச்சைக்கல் வளையல் போடுகிறோம் என்று என் மாமியாரிடம் சொல்லி விட்டார். இப்போது அண்ணாவிடம் கேட்டால் முடியாது என்கிறார். முதலில் சொல்லிவிட்டுப் பிறகு இல்லை என்றால் என் மாமியார் என்னைச் சும்மா விடுவாரா அண்ணி? சொல்லா லேயே கொன்று விடுவாரே'' என்றாள் கண்கலங்க ''அண்ணி நீ கொஞ்சம் அண்ணனிடம் சொல்லுகிறாயா?'' என்றாள் கெஞ் சுதலாக.

''ம்ம்...'' என்று யோசித்தாள் சுமித்ரா. கல் வளையல் வேண்டாம் என்று கணவன் மறுப்பதன் காரணம்.

அவளுக்கும் புரிந்தது. அதற்குத் தேவையான பணம் அவனிடம் இல்லை. ஒன்றை வரிசை என்றாலும் மூவாயிரம் ஆகுமே. அவனிடம் அவ்வளவு பணம் இராது. மாதம் ஆயிரம் ரூபாய் அவனது சம்பளம் என்று ராமநாதன் ஏற்பாடு செய்தி ருந்தார். அது போக டைரக்டர்.

''ஸிட்டிங்'' இம்மாதம் எழுநூறு வரும் இரண்டும் சேர்த் தாலும் இந்த மாதங்களில் மூவாயிரத்து நானூறு ரூபாய்தான் ஆகும். இதில் அந்த எழுநூறை அவன் குடும்பத்துக்கு அனுப் புவதாகச் சுமித்ரா யூகித்திருந்தாள். மிகுதியில் மாமனார் முன்னி லையில் காட்டுவதற்காக சுமித்ராவுக்கு ஒரு சோலை வாங்கி யிருந்தான். அப்புறம் சின்னச் சின்ன சொந்தச் செலவுகள் போக அவனிடம் ஆயிரத்து ஐநூறு ரூபாய், மிஞ்சியிருக்குமா? அதில் தங்க சூல் காப்பு ஒரு பவுன் போய் ஆயிரம் ரூபாய் மற்றச்

செலவுகளுக்குச் சரியாக இருக்கும் என்று கணக்கிட்டிருப்பான். கல்வளையல் வேண்டும் என்றால் பணம் வேண்டுமே. மனைவி மிடம் கேட்க அவனது தன்மானம் இடம் தந்திராது. ஆனால் தங்கைமின் கண்ணீரை விடவும் அவனது சுய கவுரவம் பெரி தாகப் போய் விட்டதா? பணத்துக்காகத் தன்னை விற்ற ஒரு வனுக்கு அவ்வளவு தன்மானம் எங்கிருந்து வந்தது?

சுமித்ராவின் சிந்தனையைத் தவறாக எண்ணி பானு பதறி விட்டாள். ''இந்த மூவாமிரம் ரூபாய் உனக்கு ஒரு பொருட் டில்லையே அண்ணி. நீ நினைத்தால் முடியாதது இல்லையே அண்ணி.''

''முடியாதது என்று இல்லை பானு. ஆனால் உன் அண்ணன் ஒன்று சொல்லி அதை நான் இல்லையென்று ஆக்கக்கூடாது பார்'' என்றாள் சுமித்ரா.

''பின்னே அண்ணி என் மாமியார்...'' என்று முடிக்கையில் கண்ணீர் பொங்கி வழியலாயிற்று.

''சேச்சே'' என்று நாத்தனாரைத் தட்டிக் கொடுத்தாள் சுமித்ரா. அதற்குள் அழுவார்களா பானு? அதுவும் இந்தச் சமயத் தில்! உன் அண்ணாவிடம் நான் சொல்லிப் பார்க்கிறேன்'' என்றாள் ஆறுதலாக.

''நான் உன்னைத்தான் நம்பி இருக்கிறேன் அண்ணி'' என்று சுமிமின் கைகளை நன்றியுடன் பற்றிச் சொன்னாள் பானு. அதன்பின் அவள் முகத்தில் வழக்கமான கலகலப்பு இடம் பெற்றது.

''உன் கத்திரிக்காய் ரொம்ப ருசி'' என்ற ஆசையுடன் உண்டாள். ''உன் சேலை மட்டும் அசையாமல் அழகாக அப் படியே நிற்கிறதே அண்ணி. எனக்கெல்லாம் கலைந்து விடு கிறதே'' என்று சந்தேகம் கேட்டாள்.

''நான் பின் குத்திக் கொள்வேன்'' என்றாள் சுமித்ரா சிரிப்புக்கிடையே.

குழந்தைத் தனமான ஆயிரம் ஆயிரம் கேள்விகள் சுமித்ரா வுக்கும் உற்சாகத்தை ஊட்டின.

''நான் வந்ததை அண்ணனிடம் சொல்லிவிடாதே அண்ணி. பிறகு என்னைத் திட்டுவார்'' என்று எச்சரித்தாள் பானு.

ஆகட்டும் என்று சொல்லி அவளை ரமிலேற்றி அனுப்பி னாள் சுமித்ரா. பிறகு கடைவீதிப் பக்கம் சென்றாள்.

இரவில் கணவரிடம் பேச்செடுத்தாள். சுமித்ரா. ''இது பானுவுக்கு ஏழாம் மாதம் ஆயிற்றே வளைகாப்பு பண்ண வேண்டியிருக்கும் அல்லவா? ஒரு சேலை அதற்காக வாங்கி னேன்'' என்று 'சலபன்' பேப்பரில் இருந்து ஒரு சேலையை எடுத்துக் காட்டினாள்.

''நீ ஒன்றும் வாங்க வேண்டியதில்லை'' என்று எடுத் தெரிந்து பேசுவதற்காக வாயைத் திறந்த சந்திரன் சேலையைப் பார்த்ததும் மூடிக்கொண்டான். நல்ல பச்சை நிறம் பட்டில் சின்னக் கண்ணன் தவழ்ந்து வருவது போல உடல் எல்லாம் சரிகையும் நூலுமாகச் சின்னச் சின்ன வடிவங்கள் அமைந்திருந் தன. முந்தானையில் கண்ணன் சற்றுப் பெரிய உருவமாக விழிகளை மலர்த்திச் சிரித்தான். வளைகாப்பிற்காகப் பொருத்த மாக வாங்கியிருந்த இந்தச் சேலையை எப்படி மறுப்பது? ''உம் உம்'' என்றான் பதிலுக்கு.

ஆனால் தொடர்ந்து அவள் ''ஒரு ஜோடிக் கல் வளையல்...'' என்று தொடங்கியபோது, ''அதெல்லாம் தேவையில்லை'' என்று மறுத்து விட்டான் சந்திரன்.

''பானுவுடைய மாமியாருக்கு ஆசையாயிருக்கும்'' என்று சுமித்ரா மீண்டும் தொடங்கினாள்.

''விரலுக்குத்தக்க வீக்கம் வேண்டும். எங்கள் நிலை மைக்கு இதுவே அதிகம்'' என்று முடித்து விட்டுத் தன் அறைக்குள் சென்று விட்டான் அவன்.

அவன் முகத்தில் கடினத்தைக் கண்ட சுமித்ராவும் அந்தப் பேச்சை அத்துடன் விட்டு விட்டாள்.

வளைக்காப்பன்று எல்லாம் செவ்வனே நடைபெற்றன. வந்ததுமே ஏக்கத்துடன் நோக்கிய நாத்தனாருக்கு நிம்மதி ஊட்டும் வகையில் புன்னகை செய்தாள் சுமித்ரா.

''சுமி இந்த வெற்றிலை பாக்கு பழம் அடுக்குகிறாயா? நலுங்கு சுற்றுகிற பெண்களுக்குக் கொடுப்பதற்குச் சரியாக எடுத்துவை. ஏழு அல்லது ஒன்பது. ஒன்பதே வைத்து விடும்மா'' என்று தம்பி மனைவிக்குக் கொஞ்சம் வேலைகளைத் தந்தாள் சுமதி. அவளோடு கூடச் சேர்ந்து சிரித்த முகத்துடன் வேலை செய்தாள் சுமித்ரா.

வளை அடுக்கி முடியவும் பெரியவர்களை ஆண்களைத் திருநீறு பூச அழைத்தார்கள். சந்திரன் பூச வருகையில் சுமித்ரா அவசரமாக ஓடிவந்தாள். ''நம் பரிசைக் கொடுத்து விடலாமா?'' என்று ஒரு ஜோடிப்பச்சைக்கல் வளையல்களைப் பானுமதியின் கைகளில் அணிவித்தாள்.

ஒருகணம், தயங்கிவிட்டுப் பின் தங்கைக்கு திருநீறு பூசி விட்டுப்போனான் சந்திரன்.

பானு நெஞ்சு நிறைந்த நன்றியை வாய் நிறைந்த புன்ன கையில் காட்டினாள்.

''என்னமாக ஜொலிக்குது?'' என்றாள் சுமியின் மாமியார்.

''நல்லாத்தான் இருக்குது'' என்று ஒத்துக் கொண்டாள் பானுமதியின் மாமியார்.

இவைகளில் எதுவும் சுமியின் கவனத்தில் படவில்லை. சந்திரனது பார்வை—முதலில் சினம் வியப்பு; பிறகு வியப்பும் ஆராய்ச்சியும்; கடைசியாக ஒரு சீரான புன்னகையில் முடிந்த பார்வை மட்டுமே அவள் கவனத்தில் பதிந்தது.

அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்க வழியின்றி அவளையும் இழுத்து மனையில் வைத்தார்கள். ''என்ன,'' என்று திகைத்தாள் சுமித்ரா;

''அடுத்த ஏழாம் மாதம் நீ எடுக்க வேண்டாமா? அதற் காகத்தான்'' என்று சிரித்தாள் சுமதி.

சுமித்ராவின் முகம் சட்டெனச் சிவந்து போயிற்று. அதை மறைக்கத் தலைகுனிந்தாள். ஆனால் இரண்டையும் கண்ட, எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

''சரியானபடி அடுத்த ஐந்தாம் மாதம் அடுக்க வேண்டும். அத்தான் சற்று மெத்தனமாக அதிநிதானமாக இருந்து விட்டார்'' என்றான் பானுவின் கணவன் சாகரன்.

''நிதானமே நன்று'' என்றான் சந்திரன் நிதானமாக. ''அவசரத்தில் வேலை செய்துவிட்டு அவகாசத்தில் அழு என்று பழமொழிகூட உண்டே.''

சாகரன் சிரித்துவிட்டான். ''சரியாகச் சொன்னீர்கள் அத்தான். ஒரு நாள் குதூகலமாக இருக்க முடிவது இல்லை. முதலில் மசக்கை, வாந்தி என்று போயிற்று. இப்போது அசதி யாம், நாளையானால் உங்கள் பிள்ளைக்குக் கஷ்டம் என்பாளாம்.

உங்கள் தங்கை சொல்லுகிறாள். அதனால் லேசில் மாட்டிக் கொள்ளாதீர்கள்'' என்றான் சிரிப்புக்கிடையே.

''அனுபவப்பட்டவர்கள் சொன்னால் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ன சுமித்ரா என்று அவளையும் பேச்சில் இழுத்தான் சந்திரன்.

சுமித்ரா தனக்குள்ளேயே சிந்தனை செய்து கொண்டிருந்தாள்.

பிறகு தனியே கண்டபோது சுமித்ராவிடம் ''நான்தான்?'' கல்வளையல் அவசியம் இல்லை என்றேனே, சுமித்ரான் என்றான் சந்திரன்.

''அவசியம் இல்லை என்றீர்களே தவிர அடியோடு கூடாது என்னவில்லையே என்று'' சற்று அச்சத்துடனேயே பதிலிறுத்தாள் சுமித்ரா.

அவள் எதிர்பாராத விதமாகச் சந்திரன் தலையைப் பின்னே சாய்த்துச் சிரித்தான். ''பரவாயில்லை கெட்டிகாரிதான். என் சொல்லை மீறியதாகவும் இல்லை. என்னளவில் இது 'உன்' பரிசு; நம் வீட்டாரின் அளவில் 'நம்' பரிசு; பானுவுடைய மாமி யாருக்கோ வளைகாப்புச் சீர், எல்லாம் உள்ளடக்கிச் சாதுரிய மான பேச்சுவேறு நீ சமார்த்தியசாலிதான் சுமித்ரா. ஆனால்...

சுமித்ரா மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

''என் தந்தைமின் மகிழ்ச்சி உனக்கு அவ்வளவு முக்கியமா?''

யாரோ ஒரு பானுவுக்காக சுமித்ரா ஏன் கஷ்டப்படப்போகி றாள்? கணவனுடைய தங்கை என்பதால் தான் கரிசனம்; அவன் அவமானப்பட்டுவிடக் கூடாதே என்பதில்தான் அக்கறை! ஆனால் இதை அவனிடம்—அவளை வேண்டாத அவனிடம் சொல்ல முடியும்? ''அத்தை கூப்பிடுகிறார்கள் போல் இருக் கிறது'' என்று உள்ளே விரைந்தாள்.

சந்திரன் அவள் மறையுமட்டும் பார்த்துக் கொண்டே யோசனையுடன் நின்றான்.

அந்த வீட்டில் தனியறையாகப் பயன்படுத்த ஓர் அறை தான் உண்டு. வீட்டின் இளைய மாப்பிள்ளைக்கும் மகளுக்கும் அந்த அறையைக் கொடுத்துவிட்டு ஆண்கள் வாயிற்புறமாகவும் பெண்கள் உள் தாழ்வாரத்திலும் படுத்தனர்.

நல்ல அலைச்சலும் மனதில் ஒரு திருப்தியுமாகச் சுமித்ரா உடனேயே தூங்கிவிட்டாள்.

ஆனால் சந்திரன் அன்றும் உறக்கம் வராமல் புரண்டான். சுமித்ராவின் நடத்தை முன்னுக்குப் பின் முரணாக இருந்தது. ''விலைக்கு வாங்கிய கணவன் தேவை இல்லை'' என்று அவள் எவ்வளவு திமிராகப் பேசியவள் அந்தக் கணவனுடைய சகோதரிக்காக ஏன் செலவு செய்ய வேண்டும்? மூளையைக் கசக்கிக் கொண்டு திட்டமிட்டு சாமார்த்தியஜாலம் எல்லாம் ஏன் செய்ய வேண்டும்? வளையலை ஜம்பமாகக் கூடக் கொடுக்கவில்லையே; ''என் பரிசு; என் பணத்தின் பரிசு'' என்று கூடச் சொல்லவில்லையே ''நம் பரிசு'' என்று அவனையும் இணைத்துக் கொண்டாளே. என்றும் மூவாயிரம் ரூபாயை அம்மாவிடம் கொடுத்து இங்கிதமாக நடந்து கொண்டாளே? இவளது குணம் தான் என்ன?

யோசனையுடன் எழுந்த உள்ளே சென்றான் சந்திரன். சுமதியின் குழந்தைகளுக்காக ஓர் விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. அந்த ஒளிமில் பார்க்கும் போது துயிலும் சுமியின் முகம் ஒரு குழந்தையுடையது போல்வே தோன்றியது. அவள் வீட்டில் கட்டிலாகட்டும் சோபாவாகட்டும்; ஏன் சாப்பிடும் மேசை முன் உள்ள நாற்காலிகள்கூட நுரைமெத்தை இதமாக அமுங்கிக்

கொடுக்கும். அதில் பழகியவள் இங்கே வெறும் பாமில் ஒரு வார்த்தை குறைப்படாமல் படுத்திருக்கிறாள்.

இரண்டாவது தடவையாக மனைவியின் முகத்தை அவன் துயிலுகையில் ஆராய்ந்தான் சந்திரன் தூங்குகையில் ஒருவரது உண்மையான இயல்பு வெளிப்படும் என்கிறார்கள். திரும்பிப் பார்த்தான். அதோ அம்மாவின் முகத்தில் அசட்டையும் அப்பா வித்தனமும் தெரிகிறது. அடுத்து சுமதியின் முகத்தில் பொறுப் பும் அமைதியும் தெரிகிறது. சுமித்ராவின் முகத்தில் சுவடறி யாத குழந்தைத்தனம் தான் தெரிகிறது. இவளா...?

திடீரென்று தோளை ஒரு கை தொடவும் சந்திரன் திடுக் கிட்டுத் திரும்பினான். கண்களில் குறும்பு கூத்தாட பானு நின்றாள். ''என்ன அண்ணா தேவி தரிசனமா? பாவம் பரிதாப மாக பார்த்துக் கொண்டு நிற்கிறாயே. இந்த அண்ணிதான் எழுந்து இரண்டு வார்த்தை பேச வேணும் கூடாதோ? என்று கேட்டுச் சிரித்தாள்.

''உஷ் சத்தம் போடாதே மக்கு. பேசாமல் போய்படு. நம் மனைவி எங்கேயோ போய் விட்டாளே என்று மாப்பிள்ளை அழுகிற சத்தம் கேட்கவில்லை?'' என்று படுக்கை அறைப் பக்கம் அவளைத் திருப்பி விட்டான் சந்திரன்.

''ஊக்கூம் அதெல்லாம் இல்லை'' என்று சிணுங்கிய படியே பானு சென்றாள். அத்தோடு விஷயம் நின்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும், ஆனால் பானு விடவில்லையே.

மறுநாள் காலை உணவு உண்ணும்போது எல்லோர் முன்னிலையிலும் விஷயத்தைத் தொமால் என்று போட்டு உடைத்தாள் பானுமதி. ''உங்களுக்குத் தெரியுமா! நேற்றிரவு அண்ணன் பாவம். இந்தத் தூங்கு மூஞ்சி அண்ணியைப் பார்த் துக் கொண்டே நிற்கிறார் நிற்கிறார் நின்று கொண்டே இருக்

கிறார். அரைமணி நேரம் நின்றதை நானே பார்த்தேன். அதற்கு முன் எவ்வளவு நேரம் நின்றாரோ? அண்ணிக்குக் கொஞ்சமும் இரக்கமே இல்லை. எழுந்து ஒரு பேச்சுப் பேசக் கூடாதோ? தாபம் கொஞ்சம் தணிந்திருக்கும்'' என்று நீட்டி முழக்கிவிட்டுக் கலகலவென்று நகைத்தாள்.

''ஊகூம் இதெல்லாம் பேசித் தணிக்கிற தாகமா? கிளறி விட்ட தீ போல் அதிகமாகிவிடும்'' என்றான் சாகரன்.

''நம்மைவிட ஐந்துமாதம் அதிகப்படி அனுபவசாலிகள் சொல்லுகிறார்கள். கேட்டுக்கொள் சுமித்ரா'' என்றான் சந்திரன் புன்னகையோடு.

சுமித்ராவுக்கு நெஞ்சில் வேதனை மண்டியது. முதல் இர வென்று அவன் வெறுப்புடன் தோளைக் குலுக்கியதும் பெரு மூச்சுடன் எழுந்து வந்ததும் நினைவு வந்தது. இவரா என்னைப் பார்க்கும் ஆசையில் எழுந்து வருவார், வெகுசிரமத்துடன் முகம் மாறாமல் காது கேளாதவன் போல உணர்ச்சியற்ற முகத்துடன் உள்ளே சென்றாள். முன்தினம் போல அவள் முகம் சிவக்கும்; அதைக் காணலாம் என்று ஆவலுடன் காத்திருந்த சந்திரனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவள் தன்னை அவமானப்படுத்தி விட்டாற் போல உணர்ந்தான். ''ஒரு புன்னகைக்கு பஞ்சமா?'' என்று சினத்துடன் நினைத்தான்.

மீண்டும் அன்று சென்னைக்குத் திரும்பிய போது ''இரவில் தண்ணீர் குடிக்க வந்தேன்'' என்றான் அமர்த்தலாக.

சுமித்ராவுக்கும் கோபம் உண்டாறிற்று அல்லாமல் பானு சொன்னது போல என்னைக் காணும் ஆசையில் வந்தீர்கள் என்று எண்ணிவிட மாட்டேன். பயப்படாதீர்கள் நான் அவ்வளவு முட்டாள் அல்ல'' என்று வெடுக்கெப் பதில் சொன்னாள். மேலே பேசப் பிரியம் இல்லாதவள் போல முன்னே ''பீரோவைத்''

திறந்து அங்கிருந்த ஒரு நாவலைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள். அதாவது படிப்பதாகப் பாவனை பண்ணினாள்.

ஆனால் கடைசி வார்த்தையை அவன் விடுவதாக இல்லை. ''ஆகா! அப்படி வந்தாலும் ஆசை மனைவி நீ ஓடி வந்து என்னை அணைத்துக் கொள்ளப் போகிறாயாக்கும்?'' என்றான் ஏளனமாக.

உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டு அவள் தன் கண்களைப் புத்தகத்தில் பதித்தாள். நேற்றையப் பார்வை சிரிப்பு இரண்டு பொய்யாகிப் போனதை வேதனையுடன் உணர்ந்தாள். அவை இரண்டையும் வசந்திக்குச் செய்த துரோகமாக எண்ணி னானோ? இன்று அதற்கு ஈடுகட்டுகிறான் போலும்.

வீட்டுக்குள் செல்லுகையில் சந்திரன் மனைவியை அழைத்து நிறுத்தினான். ''நாளைக் காலை ஏழுமணிக்கு நான் வெளியே போகவேண்டும். அனேகமாக அப்படியே அலுவல கத்துக்குப் போய் விடுவேன்'' என்றான்.

நாளை! சுமித்ரையின் நெஞ்சு குலுங்கியது. நாளைத் தேதி இருபத்தென்று அம்மா!

மறுநாள் காலை ஆறேமுக்காலுக்கு அவன் கழுத்தில் டையைக் கட்டியபடி வெளியே வந்தபோது குளித்து விரிந்த கூந்தலுடன் கையில் வெள்ளிக்கூடை நிறையப் பூவுடன் சுமித்ரா பொது அறைக்குள் வந்து கொண்டிருந்தாள்.

''சிற்றுண்டித் தயாரா?'' என்று அவன் கேட்கவும் அவள் திகைத்து நின்றாள்.

அவள் விழிப்பைக் காணவும் அவனுக்குக் கோபம் வந்தது. ''நேற்றே சொன்னேனே'' என்று எரிந்து விழுந்தான்.

சற்றுத் தயக்கத்துடன் கையில் இருந்த மலர்களைப் பார்த் தாள் சுமித்ரா. பிறகு ''இதோ பார்க்கிறேன்'' என்று தன் அறைப் பக்கம் ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

''அதற்கு வந்த வழியில் திரும்பிச் செல்ல வேண்டும்'' என்றான் அவன் அறைவது போல.

அப்படியே நின்று அவனை வெறித்து பார்த்தாள் சுமித்ரா. இடப்புறம் திரும்பி மேசை மேல் இருந்த டெலிபோனை எடுத் தாள். சமையலறையில் இருந்த நாயருடன் பேசினாள். ''நாயர் உடனே டிபன் என்ன இருக்கிறது, இப்போதுதான் செய்கிறாயா, அது இருக்கட்டும். முதலில் நீ தோசையை ஊற்று. மிளகாய்ப் பொடி எடுத்து வை. முருகையாவது செல்வத்தையாவது அனுப்பி இரண்டு செட்பூரி கிழங்கும் இனிப்புக்கு... ரசகுல் லாவும் வாங்கி வரச்சொல், இப்போது சின்ன அய்யாவருவார். வந்ததும் எல்லாம் வைத்து கொடு', என்று சொல்லி விட்டுத் தலை நிமிராமல் தன் அறைக்குச் சென்று விட்டாள்.

எரித்து விடுபவன் போல அவள் முதுகைப் பார்த்தான் சந்திரன். ''அவ்வளவும் பணத்திமிர். தலையிலிருந்து கால் வரை அவ்வளவும் திமிர்'' சட்டெனத் திரும்பியவன் மடமடவென்று சாப்பிடாமலேயே வெளியே போய்விட்டான்.

அரைமணி நேரம் முக்கால் மணி நேரம் பொறுத்துப் பார்த் தான் நாயர். பிறகு பையன்களை விசாரித்தான், பிறகு டெலி போனில் சுமித்ராவிடம் ''சின்னய்யா சாப்பிடலையே சின்னம்மா? காரிலே வெளியே போய் விட்டதாக முருகு சொல்லுகிறான்'' என்றான்.

''வந்து சாப்பிடுவார்'' என்றாள். சுமித்ரா. டெலிபோனைக் கீழே வைத்ததும் அழுகையில் கண் ஓரங்கள் கரித்துக் கொண்டு

வந்தன. உதட்டைக் கடித்து அழுகையை அடக்கிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள். கொஞ்ச நேரம் ஆனதும் வெளியே பொது அறையில் அரவம் கேட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தாள். எதிர் பார்த்தபடி சந்திரனேதான்.

''சாப்பிடவில்லையா?'' என்று மெல்ல வினவினாள்.

''இல்லை'' என்று சுருக்கமாக பதில் வந்தது.

''பின்னே எடுத்து வைக்கச் சொன்னீர்களே'' என்றாள் சுமித்ரா குரல் கம்ம.

நான் உன்னை எடுத்து வைக்கச் சொன்னேன் என்று அந்த ''உன்னையில் ஓர் அழுத்தம் கொடுத்துப் பேசினான் சந்திரன். பிறகு ஸ்டைலாகத் தோளைக் குலுக்கி விட்டுத் தன் அறைக்குள் சென்று கதவைச் சற்று அழுத்திச் சாத்தினான்.

முகத்தில் அறைந்து சாத்தியது போல சுமித்ராவுக்குத் தோன்றியது. அழுகை வெடித்துக் கொண்டு வந்ததும். மீண்டும் தன் அறைக்குள் சென்றாள். எழுதும் மேசைமேல் இருந்த தாமின் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதைத் தொட்டுத் தொட்டு விம்மி அழலானாள்.

உடைகளை மாற்றிவிட்டு சற்று நேரம் பத்திரிகை பார்த் தான் சந்திரன். சற்று நேரம் ஆனதும் கடிகாரத்தைப் பார்த்து விட்டு எழுந்து மாமனாருடன் டெலிபோனில் பேசினான். ''மாமா அந்த எஸ்.கே. டிரேடர்ஸின் ஜி. ஸ்மைப் பார்த்தேன். கிட்ட தட்ட நம் விலைக்கு ஒத்து போகிறார். இன்று ப்ளேனில் போய் விட்டு, வரும் வியாழனன்னு திரும்பி வருகிறாரம் வந்ததும் கான்ட்ராக்ட் முடித்து விடலாம். ஆனால் மிஸ்டர் ராவைத்தான் பார்க்க முடியாமல் போமிற்று'' என்றான்.

''சரிதான் மாப்பிள்ளை... மாப்பிள்ளை நான் இன்று அலு வலகத்துக்கு வரவில்லை. நீங்களே என் வேலையையும் கவனித் துக் கொள்ளுங்கள்'' என்றார் தழுதழுத்த குரலில்.

அந்தக் குரலில் சந்திரன் திகைத்தான். ''பார்த்துக் கொள் கிறேன் மாமா. ஆனால் ஏன்? உடம்பு ஏதும் சுகமில்லையோ? டாக்டரை...''

''அதெல்லாம் தேவையில்லை மாப்பிள்ளை இன்று... இன்றைக்கு என். சாரு...நம் சுமியின் அம்மா இறந்தநாள். நான்... என்று சொல்லுமுன் அவரது குரல் உடைந்தது.

''ஓ நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன். மாமா வந்து கவலைப்படாதீர்கள் மாமா நீங்கள் எவ்வளவோ தெரிந்தவர்கள்.''

''தெரிந்து என்ன செய்வது மாப்பிள்ளை அவளைக் காப் பாற்ற முடியவில்லையே... நீங்கள் சுமியைக் கவனியுங்கள்'' என்று டெலிபோனை வைத்தார் அவர்.

சந்திரனுக்கு மனம் சுட்டது. அதுதான் அவள்—அவன் மனைவி தயங்கி நின்றிருக்கிறாள். அவள் அறையிலும் தாமின் படம் இருந்திருக்கும். பறித்து வந்த மலர்களைத் தாமின் படத் திற்குச் சூட்டி விட்டு வருமளவு கூட அவன் பொறுக்கைவில் லையே. மலர்களைப் பார்த்துப் பார்த்து நின்றாளே திரும்பப் பேசியபோதும் தலையே நிமிரவில்லையே. கண்ணீரை மறைந் தாளோ? பணத்திமிர் என்று நினைத்துச் சொல்லால் சுட்டேனே சுழிவிரக்கம் நெஞ்சை உறுத்த சந்திரன் சுமித்ராவின் அறைக்குச் சென்றான். அன்று வரையில் அவன் சென்றறியாத இடம்.

சுமித்திரா என்று மெல்ல அழைத்தான். லேசாகக் கதவை தட்டினான். எதற்குமே பதில் இல்லாது போகவே கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அங்கே தாமின் படத்தில்

முகம் புதைத்து பரிதாபகரமாக அழுது கொண்டிருந்தாள். அன்னையின் மிருதுவான மடியில் புதைத்து ஆறுதல் தேடுவ தாக நினைத்தாளோ? ஆனால் புகைப்படத்தின் கண்ணாடியும் சட்டமும் உறுத்தாதோ? அவள் அருகில் சென்று ''சுமித்ரா'' என்று அவளது தோளில் கைவைத்து, அழைத்தான்.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் சுமித்ரா. அவனைக் கண்டதும் மீண்டும் தலைநிமிர்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் சொரியலானாள்.

அவன் அவளருகே அமர்ந்தான்! ஒரு கையை பற்றி மென்மையாக வருடியவாறு ''எனக்கு தெரியாது சுமித்ரா இன்று... இன்று இப்படி என்று தெரியாது.

ஒரு முக்கியமான பார்ட்டி—ப்ளேனுக்கு போவதற்குள் பார்த்து பேசி முடிக்க வேண்டியிருந்தது. அந்த அவசரத்தில் உன்னிடத்தில் கடுமையாக பேசிவிட்டேன் என்னை மன்னித்து விடு என்றான் இதமான குரலில்.

அவன் மன்னிப்புக் கேட்கிறான்! வியப்பு கண்ணில் பிரதி பலிக்க நிமிர்ந்து கண்ணீரின் ஊடே சுமித்ரா அவனைப் பார்த் தாள்.

''மெய்யாவே சுமித்ரா தயவு செய்து என்னை மன்னி'' என்று குனிந்து செந்நிற திலகத்துக்கு மேலாக அவளது நெற் றியில் தன் உதடுகளை மெல்ல ஒற்றி எடுத்தான்.

சுமித்ராவின் நெஞ்சின் வலியில் பாதி குறைந்தது.

8

''அத்தை – உன் அம்மா மிகவும் பாசமாக இருப்பார்களா?'' என்று பேச்சுக் கொடுத்தான் சந்திரன் பேசினால் துயரம் குறைவது இயல்பல்லவா?

''ஆமாம்'' என்று தலையாட்டினாள் சுமித்ரா.

''நீ ஒரே குழந்தை என்பது வேறு. அதுதான் சுமித்ரா?''

''எது தான்,'' என்று விழித்தாள் அவள்.

''நீ ஒரே மகளாக இருந்துவிட்டதுதான். தம்பி தங்கை இல்லையே?''

''அதுவா நான் பிறந்த போது ஏதோ கோளாறு ஆகிவிட்டதாம். சும்மாவே அம்மா சற்று பலவீன மானவர்கள். இரண்டும் சேர்ந்து இனிக்குழந்தை பிறந்தால் அம்மாவுக்கு ஆபத்து என்று டாக்டர்கள் சொன்னார்களாம். உடனே அப்பா போய் ஆபரேஷன் செய்து கொண்டு வந்து விட்டாராம். ஆக நான் ஒருத்தியாகவே நின்று போனேன்.

''படு செல்லமாக வளர்ந்திருப்பாய்.''

''செல்லம்? ஊகூம் அம்மா கனிவிலும் அப்படித்தான். கண்டிப்பிலும் அப்படித்தான்''

''தாயைப் பற்றிய பேச்சில் சுமித்ரா நெகிழ்ந்தாள் ''ஆமாம் அப்படித்தான். எனக்கு ஒரு சின்ன உறுத்தல் ஏற்படக் கூட விடமாட்டார்கள். அதே சமயம் அம்மா கட்டாயமாகக் காலையில் எழுந்தாக வேண்டும். உடற் பயிற்சிகள் செய்தாக வேண்டும்.

''உடற்பயிற்சியா? உனக்கு நாட்டியப் பயிற்சி வேறு உண்டு போல் இருக்கிறதே பரத நாட்டிய போட்டோக்கள் பார்த்தேனே?''

''அதுவா? என்று புன்னகை செய்தாள் சுமித்ரா, அப்பாவின் பகுதியில் வரவேற்பு அறையில் பார்த்திருப்பீர்கள். அப்பாவுக்கு அவைகளை அறையெங்கும் மாட்டி வைப்பதில் ஆசை.''

''எல்லாமே நன்றாக இருக்கின்றன. ஆனால் நாட்டியமே ஓர் உடற்பயிற்சி தானே சுமித்ரா. அதுசரி இன்னமும் பயிற்சியா?''

''ஆமாம். அம்மா பிறந்ததிலிருந்து பலவீனமாகவே வளர்ந்து விட்டார்களாம். நானும் அப்படித்தான் என்று நினைத்து பயந்து விட்டார்கள். என் உடல் வலிமைக்காக உடற்பயிற்சி நடனம், கூடவே டானிக், வைட்டமின் மாத்திரைகள், புரொட்டீனெக்ஸ், த்ரெப்டின் பிஸ்கட்டுகள் இத்தியாதி இத்தியாதி— கடைசியாக டாக்டர் ஒருநாள் அம்மாவிடம் ''சுமித்ரா நல்ல ஆரோக்கியமான பெண். கண்டபடி இதெல்லாம் அளவு மீறித் திணித்துக் கொடுக்காதீர்கள்'' என்று சொன்ன பிறகுதான் விட்டார்கள். ஆனால் எனக்குத்தான் இந்த காலைப் பயிற்சி பிடித்து கொண்டது. ஒருநாள் செய்யாவிட்டால் உடம்பே நன்றாயிராது.

''அங்கே நம் வீட்டில் என்ன செய்தாய்,'' என்று புன்னகையுடன் கேட்டான் சந்திரன்.

''குளிக்கும்போது முதலில் செய்துவிட்டு ஐந்து நிமிடம் பொறுத்துக் குளித்தேன்.''

அவளது மிருதுவான உள்ளங்கையில் கோலமிட்டுக் கொண்டே கேட்டிருந்த சந்திரன் சிரித்துவிட்டான். பிறகு சற்றுப் பார்த்துவிட்டு ''கொஞ்சம் மெல்லியதான உடம்புதான் உனக்கு; ஆனால் ஆரோக்கியக் குறைவு தெரியவில்லை'' என்றான்.

''எங்கள் வீட்டில் எல்லாம் இப்படி இல்லை. ''சாப்பிடு இல்லா விட்டால் தொல்லை பண்ணாமல் ஓடு'' என்பார்கள் எங்கள் அம்மா என்றான் தொடர்ந்து.

''ம்ம், என்று விழிகளை விரித்தாள் சுமித்ரா. ''நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''ஒருபானைப் பழையதை இன்னொரு சட்டித் தயிருடன் சேர்த்துக் கபளீகரம் செய்துவிடுவேன்'' என்று சந்திரன் சிரியாமல் சொன்னான்.

''நிஜமா... வாம்ம்... பொய்'' என்று அவன் முகத்திலேயே மெய்யைக் கண்டு கொண்டாள் அவள்.

அவன் உரக்கச் சிரித்தான். பின் ''என்றைக்கும் மாறாமல் எங்கள் வீட்டில் காலைக்கு இட்டிலிதான். சட்டினி அல்லது மிளகாய்ப் பொடி இருக்கும். எப்படியும் கட்டாயம் மூன்று தின்றாக வேண்டும். சுமதி பேசாமல் தின்று விடுவாள் பானு இரண்டை வைத்துக் கொண்டு விழிப்பாள்.

''நீங்கள்?''

''நான் ஆறுக்குக் குறைவது இல்லை. சட்டினி நன்றாக இருந்தால் எட்டு.''

''எட்டடா! பின்னே இங்கு இரண்டு தானே சாப்பிடு கிறீர்கள்.''

கூடவே கொஞ்சம் அல்வா, இரண்டு வடை, ஒரு கேக், ரொட்டி எல்லாம் சேர்த்து கணக்குப்போடு.''

''ஓகே அப்போது சரிதான்'' என்று சுமித்ரா ஒத்துக் கொள்ள வும் அவளது அறைமிலிருந்த சுவர்க்கடிகாரத்திலிருந்து ஒரு குயில் வெளியே வந்து கூவத் தொடங்கியது. அது பத்துமுறை

கூவவும் சுமித்ரா திடுக்கிட்டாள். ''பத்தாகிவிட்டதே நீங்கள் சாப்பிடவில்லையே. அப்பா வேறு...'' என்று எழுந்தவள் அவன் கரத்தில் தன் கை சிக்குண்டு இருக்கவும் 'ஓ' என்று தயங்கி நின்று முகம் சிவந்தாள்.

அவனும் அதை அப்போது தான் உணர்ந்தவன் போல ஒரு சிறு வெட்கச்சிரிப்புடன் அவள் கையை விடுதலை செய்து விட்டு எழுந்தான். ''எனக்கும் அலுவலகத்துக்கு வெகு தாமத மாகிவிட்டது. மாமா வேறு வரவில்லை என்றார்'' என்றபடி அவளோடு கூட நடந்தான்.

''இன்று வரமாட்டார்'' அம்மா இறந்ததில் இருந்து இந்த மூன்று ஆண்டுகளாக இந்த நாளில் அப்பா வெளியே செல்வது இல்லை. சாப்பிடவும் மாட்டார். அறையோடு அடைக்கப்பட்டுக் கிடப்பார்'' அவனோடு பேசப் பேச நெஞ்சின் பாரம் பெருமளவு குறைந்து விட்டதைச் சுமித்ரா உணர்ந்தாள்.

''மூன்று ஆண்டுகள் ஆகியும் துன்பம் குறையவில்லையா? காலம் மனப்புண்ணை ஆற்றும் சிறந்த மருந்து என்பார்களே.''

''ஆற்றித்தான் இருக்கிறது. அம்மா ஒரு புதன்கிழமை இறந்தார்கள். வெகு நாட்கள் வரைமிலும் புதன்கிழமை வந் தாலே மனதில் வேதனையும் வந்துவிடும். அதுகொஞ்சம் கொஞ் சமாகக் கறைந்தது. ஆனாலும் இந்தத் தேதிமில் தாங்க முடிவது இல்லை'' என்று மாடிப்படிகளில் இறங்கலானாள் சுமித்ரா.

''சுமித்ரா ஒரு யோசனைச் சொல் மாமாவைப் பார்த்துப் பேசவிட்டு வரட்டுமா? அவர் துன்பத்தோடு தனியே அறையி னுள் அடைபட்டுக் கிடப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கி றது'' என்றான் சந்திரன்.

''நிஜமா?'' என்றாள் விழிகளில் கூர்மையுடன்.

பாதிப்படியில் நின்று திரும்பி அவனைப் பார்த்தாள் சுமித்ரா. புருவத்தைச் சுருக்கி ஒரு கணம் யோசித்து விட்டு "செய்யுங்களேன். எனக்கே இப்பொழுது எவ்வளவோ நன்றாக இருக்கிறது" என்றாள்.

அவள் முகம் லேசாகச் சிவந்தது. "நிஜம் என்று சிறு வெட்கத்துடன் கூறி மடமடவென்று இறங்கினாள். கீழே நின்று "சிற்றுண்டி எடுத்து வைக்கட்டுமா?" என்று வினவினாள்.

"செய் நான் மாமாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று மாமனாரின் அறைப்பக்கம் சென்றான் சந்திரன்.

சற்றுப் பொறுத்து ராமநாதனையும் அழைத்துக் கொண்டு அவன் உணவருந்த வந்தபோது சுமித்ராவுக்கு வியப்புடன் வெகு இதமாகவும் இருந்தது. அறைகுறையாக உண்ட போதிலும் மருமகனுடன் அவர் அலுவலகத்துக்கும் கிளம்பவும் சுமித்ரா வுக்கு மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.

அன்று சுமித்ராவின் மனம் வெகு உற்சாகமாக—திருமணத் துக்கு முன்பு இருந்த அளவு உற்சாசமாக இருந்தது.

அன்று மதியத்துக்கு மேல் மவுண்ட் ரோடுவரை சென்று சில சாமான்களை வாங்கினாள். பிறகு ஸ்பென்சருக்குப் போனாள் ஹாய் "சுமீ" என்று உற்சாகக் குரல்கள் பல கேட்கவும் திரும் பிப் பார்த்தாள். கல்லூரித் தோழிகள், பல நாட்களுக்குப் பிறகு பார்த்ததும் சுமித்ராவும் ஆவலுடன் அவர்களோடு சேர்ந்து கொண்டாள்.

ஒருவரை ஒருவர் செய்த கேளிகளும் ஒருவருக்கொருர் பரிமாறிக்கொண்ட கதைகளுமாகி ஒரே கும்மாள மிட்டனர். அரட்டை அடித்தபடியே ஐஸ்கிரீம் பார்லரில் ஆளுக்கு ஒரு பிஸ்தா ஐஸ் கிரீமைச் சுவைக்கலாயினர். பாதியில் தற்செயலாக எதிரே

இருந்த வலது கைக் கடிகாரத்தில் பார்வை விழவும் சுமித்ரா திடுக்கிட்டுப் போனாள். மணி ஐந்தேகால்.

''ஏய் கலா உன் கடிகாரம் சரியாகப் போகிறதாடி? என்று வினவியபடி தன் மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தாள்; ஐந்து இருபது.

''சந்தோஷம் போல ஐந்து பத்து நிமிடம் தாமதமாகப் போகுமடி என் கடிகாரம்'' என்று சுமிமின் வயிற்றில் புளியைக் கரைத்தாள் கலா;

''நான் போக வேண்டுமடி'' என்று ஐஸ்கிரீமை சுவைத்து விட்டு எழுந்தாள் சுமித்ரா.

''அதெல்லாம் முடியாது ஐஸ்கிரீமை முடித்து விட்டுத் தான் போக வேண்டும்'' என்று பிடித்து கொண்டாள் மல்லிகா.

''ஏண்டி அய்யா வரும் நேரமா? ஆள் இல்லாவிட்டால் வருகிற கோபத்தில் பிறகு கடித்துத் தின்று விடுவாரா?'' என்று ஒருத்தி கேட்க ஒரே சிரிப்பு.

''பசி தாங்காதல்லவா; என்று ஒருத்தி சொல்ல ஒரே ஆரவாரம்.

கால்கட்டு விழாத கன்றுகள் அல்லவா; துள்ளின.

அரும்பாடு பட்டு அவர்களிடமிருந்து விடுபட்டு வேக மாகக் காரை ஓட்டிக் கொண்டு சுமித்ரா வீடு வந்து சேர்ந்த போது ''ஷெட்''டில் சந்திரனது காரும் நிற்பதைப் பதைப்புடன் கண்டாள். கடவுளே இன்றுதானே அவன் சற்று இளகிவந்தான்! காரை அப்படியே விட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். அதற்குள் அவன் முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு அவனது அறைவிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான்.

''வந்து விட்டீர்களா?'' என்றாள் மூச்சு வாங்க மன்னிப்பு கோரும் பாவனையில் புன்னகை செய்து விட்டு ''ஷாப்பிங் போனபோது கல்லூரித் தோழிகள் சிலர் வந்தார்கள். அவர்களு டன் பேசிக் கொண்டே ஐஸ்கிரீம் சாப்பிட்டதில் நேரமாகி விட்டது'' என்று சமாதானம் சொன்னபடி போனை எடுத்து சமையலறைப் பட்டனைத் தட்டினாள். ''நாயர், டிபன் எல்லாம் எடுத்துவை. நான் இதோ வருகிறேன்'' என்றாள். கொஞ்சம் உட்காருகிறீர்களா? விரைவில் வந்து விடுகிறேன்'' என்று தன் அறைக்குள் ஓடினாள். வேகமாக முகம் கழுவி, லேசாகப் பவுடரை ஏற்றித் திலகமிட்டாள் அவசரமாகத் சேலையை மாற்றிக் கொண்டு ஓடி வந்தாள்.

முந்தானையைச் சீர் செய்தபடி வந்த அவளைப் பார்த்துச் சந்திரன் முறுவலித்தான். ''மின்னல் வேகம்தான்.''

அவன் மீண்டும் மன்னிப்புக் கோரும் பாவனையுடன் ''நான் எவ்வளவோ முயற்சி செய்தேன். பார்த்து நிரம்ப நாளா யிற்று? எல்லோரும் சேர்ந்து கொண்ட விடவேமாட்டேன் என் றார்கள். கூட அந்த அரட்டை கள்ளிக்கலா வேறு'' என்று பரப்புடன் நடந்தாள்.

''ஒரு நிமிடம் சுமித்ரா'' சந்திரன்.

''என்ன'' என்று திரும்பினாள் அவள்.

சந்திரன் தன் பாக்கெட்டில் இருந்து கைக்குட்டையை எடுத்தான். ''காதோரமாகப் பவுடர் கொஞ்சம் அதிகப்பட்டு விட்டது'' என்று லேசாகத் துடைத்து விட்டான்.

''ஓ...'' என்று சொல்லிவிட்டு அவசரமாக படிமிறங்கினாள். அவள். ஒரு வேலையாள் பல பாக்கெட்டுகளுடன் உள்ளே வந்தான். சுமித்ரா வாங்கி வந்தவைதான். ''எல்லாம் இந்த

மேசை மேல் வை. பிறகு வந்த எடுத்துக் கொள்கிறேன்'' என்று போகிற போக்கில் நில்லாமலேயே சொல்லிவிட்டுச் சாப்பாட்டு அறையை நோக்கி விரைவுடன் நடந்தாள் சுமித்ரா.

''யூ, ஸீ சுமித்ரா, என்றோ ஒருநாள் சற்றுத் தாமதமாகி விட்டதால் என்ன? என்று அவளைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த சந்திரன் புன்னகை செய்தான்.

''ம்?'' என்றவள் சிறு பெருமூச்சுடன் தன்னை அறியாமல் அமைதியடைந்தாள்.

''என்னவெல்லாம் வாங்கினாய்?'' என்று பேச்சை மாற்றினான் அவன்.

''கொஞ்சம் ரிக்கார்டுகள். அப்புறம் உங்கள் டேப ரிக்கார் டருக்கு இரண்டு காஸெட். அப்பாவுக்கு நாலு செமி சில்க் லுங்கிகள். அப்புறம்....'' என்றவள் நாக்கைக் கடித்துக்கொண்டு நின்றாள்.

''அப்புறம்?'' என்று ஓர் ஆவலுடன் ஊக்கினான் சந்திரன்.

அவன் கேட்டது காதில் விழாதது போல நடக்க முயன்றாள் சுமித்ரா. அவளது தயக்கம் அவனுக்கு வேடிக்கையாக இருந் தது. அப்படி எதை மறைக்கிறாள் என்று தெரிந்துக் கொள்ளும் ஆவலும் அவனுள் கிளர்ந்தது. சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தி ''அப்புறம்?'' என்று மீண்டும் கேட்டான்.

''வந்து... டபுள் நிட்டிங்கில் உங்களுக்கு ஒரு சூட்டுக் குத் துணி வாங்கினேன்'' என்றாள் குனிந்த தலை நிமிராமல். ''அது துணி மிகவும் நன்றாக இருந்தது'' என்றாள் சமாதானம் கூறுவது போல.

''எனக்குத்தான் நிறைய இருக்கிறதே''

"துணியும் டிசைனும் கலரும் மிகவும் நன்றாக இருந்தன" என்று முணு முணுத்தாள் சுமித்ரா.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. "சரி சரி தைக்கக் கொடுத்து விட்டாயா?"

அவள் முகம் மலர "உங்களுக்குப் பிடித்த மாடலில் தைக்க வேண்டும்" என்றவள் சாப்பாட்டு மேசையைப் பார்த்ததும் புருவங்களைச் சுருக்கினாள்.

"நீங்கள் உட்காருங்கள்" என்று பால்கோவாவையும் போட்டாவையும் அவன் முன்னே தட்டில் வைத்து போண்டா வுக்கு சட்னியும் வைத்தாள். "நாயர் அப்பாவுக்குத் தட்டு எங்கே?" என்று சமையல்காரனிடம் வினவினாள்.

"அய்யா வேண்டாம்னாங்க சின்னம்மா."

"இரு நாயர். எனக்கு காபி மட்டும் போதும், ஐஸ்கிரீம் சாப்பிட்டது வயிறு "டொம்" என்று இருக்கிறது நீங்கள் சாப் பிடுங்கள்" என்று டெலிபோனை எடுத்தாள். தந்தையின் அறைக்குப் போட்டாள். அவர் எடுத்ததும் என்னப்பா நீங்கள்? ஏன் டிபன் வேண்டாம்? வயிறு ஒன்றும் கெட்டு விடவில் லையே? என்றாள் சற்று கவலையுடன்.

"ஒன்றும் இல்லையம்மா. எனக்கு வயது ஆகிறது அல்லவா? சாப்பாடு குறைய வேண்டாமா?

"பெரிய வயது அப்பா. நாற்பத்து ஏழு வயதும் ஒருவயதா? அப்பா என்ன செய்கிறது என்று சொல்லுங்கள் "ஓ அப்பா ஸாரி அப்பா" தாமின் நினைவு வர மெல்லக் குரல் அடங்கி விட்டது.

"ஸாரி எதற்கு அம்மா? அவசியம் இல்லை. மாப்பிள்ளை யுடன் பேசிய பிறகு மனதில் அம்மா நினைவில் பழைய வேதனை

இல்லை. மதியம் மாப்பிள்ளையோடு பேசிக்கொண்டு இரண்டு பிடி அதிகம் உண்டு விட்டேன் இப்போது பசியே இல்லை.''

வரவர அடிக்கடி இப்படியே சொல்கிறீர்களே அப்பா சாப் பிடாமல் உடம்பு கெட்டுவிடப் போகிறது என்று கண்டிப்புடன் பேசினாள் சுமித்ரா.

அவளது கண்டிப்பையும் கரிசனத்தையும் ரசனையுடன் கவனித்தபடி உண்டு கொண்டிருந்தான் சந்திரன். தாமின் கனிவையும் கண்டிப்பையும் பற்றி அவள் சொன்னது நினைவு வந்தது. இவளும் தாமின் மறுபதிப்பு தானே?

இப்போது தந்தைமின் பேச்சில் சுமித்ரா அதிர்ந்து போனாள்.

''எனக்குப் பசி வரவேணுமானால் ஒரு பேரனைப் பெற்று என்னிடம் கொடு சுமிம்மா'' என்றார் அவர்.

''அப்பா!'' என்றாள் விக்கித்துப் போய்.

''ஆமாம்மா. பேரனோடு இங்கும் அங்குமாக இரண்டு ஓட்டம் ஓடினேனானால் எனக்குப் பசியும் எடுத்துவிடும். இளமை திரும்பிவிடும்.''

சுமித்ரை குரலிலும் தோற்றத்திலும் இருவிதமாக நடிக்க வேண்டி வந்தது. தவிப்புடன் கணவன் பக்கம் லேசாகக் கவனித் தாள். முகம் மாறாமல் காத்தபடி தந்தைக்குச் சரியான பதிலாக ''போங்கப்பா' என்றாள்.

''எங்கே போவதம்மா? நான் மாப்பிள்ளைமிடம்.''

''ஸ்... சும்மா இருங்கள் அப்பா. நான் வைக்கிறேன்.'' என்று போனை வைத்தாள். வேகமாக இரு பெரிய மூச்சுகளை உள்ளிழுத்து வெளிவிட்டாள். அமைதியைக் காட்டிக் கொண்டு வந்து அமர்ந்தாள்.

''என்ன சுமித்ரா?'' என்று அவன் கண்களில் குறுகுறுப்பு டன் கேட்டான்.

''ஓ... ஒன்றுமில்லையே'' என்று தடுமாறினாள் சுமி.

அவளைக் கூர்மையாகப் பார்த்துவிட்டு ''சரிதான் காபியைக் குடி'' என்றான் அவன்.

''என்னென்ன இசைத்தட்டுகள் வாங்கினாய்!'' என்று பேச்சை எடுத்தான் மீண்டும்.

சம்பந்தமற்ற இந்தப் பேச்சு அவளிடம் அமைதியை வர வழைத்தது. ஜிம்ரீங்ஸ் ரிக்கார்டு ஒன்று. அப்புறம் சீர்காழியின் அபிராமி அந்தாதி.''

அவன் சிரித்தான்.

''என்ன?'' என்றாள் அவள் புரியாமல்.

''இந்தப் பக்கம் ஜிம்ரீங்ஸின் மேல்நாட்டு சங்கீதம், கூடவே சீர்காழியின் கர்நாடக இசையை ரசிக்கிறாய். திருப் பள்ளி எழுச்சி பாடுகிறாய். இரு துருவங்களையும் விரும்பு கிறாயே.''

'சிவப்பு அழகாக இருக்கிறது என்றால் பச்சை நன்றாக இராது என்றா அர்த்தம்? இரண்டும் இரண்டு திணுசில் அழகு தான் என்றாள் புன்சிரிப்புடன்.

''மடக்கி விட்டாயே சுமித்ரா. தோல்வியை ஒத்துக் கொள் கிறேன்'' என்றான் சந்திரன் புன்சிரிப்புடன்.

ஆனாலும் சுமியின் முகம் மாறிவிட்டது. ''மடக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மன்னியுங்கள் என்றாள் பணிவுடன்.

இதற்கென்ன மன்னிப்பு? உன் பதிலை நான் ரசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்'' என்றான் சந்திரன். சுமித்ராவின் முகம் மீண்டும் மலர்ந்தது.

கை கழுவிக் கொண்டு வெளியேறுகையில் சந்திரன் சொன்னான் ''இன்று தியாகு வந்திருந்தான் சுமித்ரா. நாளை அவன் மகள் பிறந்த நாளைக்கு நாம் இருவரும் கட்டாயமாக வரவேண்டுமாம். வருவதாகச் சொல்லி விட்டேன்'' போகலாம் இல்லையா.

''கட்டாயம். அந்தக் குழந்தையை மீண்டும் பார்க்க எனக்கு மிகவும் ஆசை. நான் அன்றே பிறந்தநாள் பரிசுக்காக விளையாட்டுச் சாமான்கள் கூட வாங்கி வைத்து விட்டேன்'' என்றாள் சுமித்ரா.

''ஆல்ரைட், நாளை ஆறுமணிக்குக் கிளம்பலாம். இரவு தான் விழாவாம்'' என்று சொன்னான் சந்திரன்.

மறுநாள் சுமித்ரா தூய வெண்ணிறத்தில் பெரிதும் சிறிது முாக நல்ல சிவப்பில் சீன்குவின் ரோஜாக்கள் மின்னலிட்ட ஷிபான் சேலை கட்டி கிளம்பினாள். பொருத்தமான காதணிகள்.

அவளைப் பார்த்ததுமே சந்திரன் 'கழுத்தில் அணிந்திருப்பது இந்த செட் இல்லைபோல் இருக்கிறதே என்றான்.

''ஆமாம். இதில் உள்ளது கொக்கிப் போட வரவில்லை'' என்றாள் சுமித்ரா.

''எங்கே பார்க்கலாம்'' என்று அவளுடன் அவளது அறைக் குள் வந்தான் சந்திரன். கழுத்தணியை வாங்கிப் பார்த்தான். ''ஒரு பின் கொடு சுமித்ரா'' என்று அதைக் கொண்டு என்னவோ செய்தான். ''திரும்பு மாட்டி விடுகிறேன்'' என்றான்.

அவன் அருகில் வந்து திரும்பியதும், ''இது என்ன செண்ட் சுமித்ரா? மனம் இதமான இனிமையுடன் இருக்கிறதே'' என்றான்.

''இது செண்ட் இல்லை. யடிகோலோன். கொஞ்சம் மல்லிகை மணம் மட்டும் சேர்ந்தது'' என்றாள்.

கழுத்தின் ஓரமாக இருந்த கேச சுருளை விலக்கிக்கிக் கழுத்தில் அதை மாட்டிவிட்டான். பின்னர் அவனது விரல்கள் சுமியின் கழுத்தை விட்டு நகர மறுத்து அந்த மிருதுவான சருமத்தில் மெல்ல வருடலாயின.

நெஞ்சு படபடக்க தலைகுனிந்தாள் சுமித்ரா.

''சுமி'' என்று குனிந்து அவளது கழுத்தில் வளையில் உதடுகளப் பதித்தான் சந்திரன். மெல்ல அந்த உதடுகள் மேலேறிக் கன்னத்தில் அழுத்தின. தன்னை மறந்து, மந்திரத் தில் கட்டுண்டவர்கள் போல இருவரும் இருந்த இந்த நிலை எவ்வளவு நேரம் நீடித்ததோ. பின் ஒரு சிறு சிரிப்புடன் அவளை விடுதலை செய்து ''வா சுமி'' என்று கரம் பற்றி அழைத்துச் சென்றான் அவளுடைய கணவன்.

கன்னங்களில் செம்மையுடன் மகளும் கண்களில் கனிவுடன் மருமகனும் செல்வதை விழிநிறையப் பார்த்து மகிழ்ந்தார் ராம நாதன்.

பழைய தோழர்களின் நடுவில் சந்திரனுக்கு பலத்த வரவேற்பு. சுமித்ராவுக்கும் கூடத்தான். குழுமியிருந்த அத்தனை பேரிலும் சுமித்ரா தனிப்பட ஒளிரக் கண்டான் சந்திரன். சுமி இவ்வளவு அழகியா? என்று வியந்தான். பிறந்த நாள் குழந் தையை ஆவலுடன் அவள் அணைத்துத் தூக்கக் கண்டபோது அவன் மனம் வேறு கற்பனையில் ஆழ்ந்தது. அவனுடைய

பிள்ளையைக் சுமித்ரா தூக்கி நிற்க... திடுக்கிட்டுப்போய் நிமிர்ந்தான் அவன். சுமித்ரா இப்போது இன்னொரு அழகுடன் மிளிர்ந்தாள். அவள் உதடுகளில் முறுவல் நெளியலாமிற்று. தற் செயலாக கணவன் பக்கம் திரும்பிய சுமித்ரா அவன் பார்வையை சந்தித்தாள். உடனே நாணி முகம் சிவந்தாள். சந்திரன் புன்னகை மேலும் விரிவடைந்தது.

எல்லோரும் குழந்தையுடன் குடும்பம் குடும்பமாக போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

சுமித்ராவும் சந்திரனும் குழந்தையுடன் போஸ் கொடுத் தார்கள்.

''அடுத்த ஆண்டு சொந்தக் குழந்தையுடன் போட்டோ எடுப்பார்கள்'' என்றான் தியாகு.

''கட்டாயம்'' என்று சந்திரன் சிரிக்க, சுமித்ரா தலை குனிந்தாள்.

திரும்பி வரும்போது இருவருக்குமே பேசத் தோன்றில்லை. ஏதோ ஒரு கனவு மயக்கம் போல் மவுனமே இனிமையாக இருந்தது.

ராமனாதன் வரவேற்பு அறையிலேயேதான் இருந்தார். ''சாப்பிட்டீர்களா அப்பா? பால் குடித்து விட்டீர்களா?'' என்று வினவினாள் சுமித்ரா.

''சாப்பிட்டு விட்டேன் சுமிம்மா. ஆனால் பால்பழம் இரண் டும் இன்னமும் இல்லை'' என்றார் ராமநாதன்.

''இதோ எடுத்து வருகிறேன் அப்பா'' என்று மகள் உள்ளே போனாள்.

மாமனார் மருமகனிடம் பேசலானார். ''மாப்பிள்ளை நீங்கள் ஒன்றும் குடும்பக் கட்டுப்பாடு என்று இருக்க வில்லையே!''

லேசான அதிர்ச்சியைச் சமாளித்துச் சிரித்துக் கொண்டே "என்ன மாமா இப்படிக் கேட்டு விட்டீர்கள்?" என்றான் சந்திரன்.

"இல்லை... சுமிமிடம் பேரன் வேண்டும் என்றால் காதி லேயே போட்டுக் கொள்வது இல்லை. அதுதான் உங்களி டம்..." என்று அவர் குறையுடன் பேசினார்.

சற்றுமுன் கண்ட தோற்றம் சந்திரனின் மனதில் எழுந்தது. நகைத்தபடி, இப்போது என் காதில் போட்டு விட்டீர்கள் இல்லையா, மாமா? இனிமேல் பாருங்கள் அடுத்த ஆண்டு இந்நேரம் உங்கள் பேரன் உங்கள் மடியில் இருப்பான். ஆனால்..." என்று இழுத்தான்.

"என்ன மாப்பிள்ளை" என்று கவலையுடன் வினவினார் ராமநாதன்.

"பேத்தியாக இருந்தாலும் குறை சொல்லக்கூடாது என்றான் குறும்புச் சிரிப்புடன் சந்திரன்.

ராமநாதன் முகம் பளிச்சென்று மலர்ந்தது "பேரனோ பேத்தியோ யாராக இருந்தாலும் சரிதான் மாப்பிள்ளை. ஏன், நான் தாத்தா ஆகப்போகிறேன் என்று ஒரு சொல் நீங்கள் சொன்னால் கூடப்போதும். விலைக்கு வந்ததே அந்த ஊட்டி எஸ்டேட்டை வாங்கி உங்களுக்குப் பரிசாகத் தந்து விடுகி றேன்" என்றார் ஆவலே உருவாக.

"இவருக்கு இதற்குள்ளாக இவ்வளவு ஆசையா?" என்று பிரமித்தான் சந்திரன். பிறகு ஏதோ தோன்றவும் கலகலவென்று

சிரித்தான். ஊக்க போனசா? பெரிய ஆள் மாமா நீங்கள். ஆல் ரைட் எஸ்டேட்டுக்கு எதற்கும் அட்வான்ஸ் கொடுத்து வையுங் கள் என்று மீண்டும் சிரித்த படியே மாடிக்கு போனான்.

சற்றுப் பொறுத்து ஒரு ''ட்ரே''மில் இருசிறு தட்டுகளில் ஆப்பிள் துண்டுகளுடனும் இரு கப்புகளில் பாலுடனும் சுமித்ரா வந்து சேர்ந்தாள்.

''இந்தாருங்கள் அப்பா. ஒன்றும் மீதம் வைக்கக் கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறி அவரிடம் ஒரு பழத்தட்டையும் ஒரு கப் பாலையும் கொடுத்தாள்.

''சரிம்மா'' என்றார் தந்தை பணிவாக. நான் இனி ஏன் மிச்சம் வைக்கப் போறேன். மாப்பிளைதான் ஊட்டி எஸ்டேட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்கச் சொல்லி விட்டாரே.

எஸ்டேட்டா?'' என்று புருவத்தைச் சுருக்கினாள் மகள்.

''ஆமாம்மா. ஊட்டியில் டீ எஸ்டேட், பேரனைப் பெற்று தருவதாகச் சொன்னால் அந்த எஸ்டேட்டை வாங்கிப் பரிசளிப்பதாக அவரிடம் சொன்னேன். உடனே அட்வான்ஸ் கொடுக்கச் சொன்னார்'' என்றார் பெரியவர் குதூகலத்துடன்.

தட்டில் இருந்த பழத்துண்டுகளை மிகுந்த கவனத்துடன் அடுக்கினாள் சுமித்ரா. ''இது... இது எப்போதைய திட்டம் அப்பா?'' என்றாள் மிகவும் சன்னமான குரலில்.

''எதும்மா? எஸ்டேட் விஷயமா? கொஞ்சநாளாகவே இதே திட்டம்தான். கண்ணம்மா இன்றுதான் மாப்பிள்ளை அட்வான்ஸ் கொடுத்து விடுங்கள் என்று தன் வாயால் சொன்னார்'' என்று தன் போக்கில் சொன்னார் தந்தை.

''ஓகோ! ஓகோ!'' ஆக ஊட்டி எஸ்டேட்தான் உந்துகிறதோ? இரண்டுநாள் இனிய பேச்சில் முட்டாளடித்து விட்டானே இந்த

இரண்டு நாட்களாக அவனாக வந்து வந்து பேசிய காரணம் இப்போதல்லவா விளங்குகிறது. இதில் மயங்கிவிட்ட சுமித்ரா தான் எவ்வளவு பெரிய ஏமாளி. வசந்தியை மறந்தாளே. பணத்துக்காக இரு பெண்களின் வாழ்க்கையை அழிக்கத்துணிந்தவன் அவன் என்பதை எப்படி மறந்தாள்? ஊட்டி எஸ்டேட்டா? உதடுகளை அழுத்த மூடிக் கொண்டு மாடிப்படி ஏறினாள் சுமித்ரா.

பொது அறைக்குள் காலடி எடுத்து வைத்ததுமே அந்த அறையின் தென்புறச் சன்னல் ஓரமாகக் கிடந்த கட்டிலில் சந்திரன் உல்லாசமாகச் சாய்ந்திருந்தது அவள் கண்ணில் பட்டது. உள்ளூர வெகுண்டாள். சுண்டு விரலை அசைத்துக்காட்டி விட்டார்; ஓடிப் போய்க் காலடியில் விழ வேண்டுமோ என்று ஆத்திரத்துடன் நினைத்தாள். அவளுக்குத் தன் மீதும் ஆத்திரம் வந்தது. கழுத்தை வருடிக் கன்னத்தில் முத்தமிட்டு விட்டால். அவள் அப்படி மயங்கி விட வேண்டுமா என்று வெறுப்புடன் நினைத்தாள். தன்வெறுப்பையும் ஆத்திரத்தையும் வெளிகாட்டாமல் விழிகளைத் தாழ்த்தி மறைத்தாள்.

கட்டிலின் அருகே இருந்த வட்டமான கண்ணாடி மேசை மேல் ''ட்ரே''யை வைத்தாள் ''சாப்பிடுங்கள்'' என்று தட்டைப் பார்த்துச் சொல்லிவிட்டு மடமடவென்று தன் அறைப்பக்கம் திரும்பி நடந்தாள்.

''சுமி'' என்று ஆவலுடன் எழுந்தான் சந்திரன்.

காது கேளாத பாஷையில் சுமித்ரா மேலே சென்றாள்.

சந்திரன் புருவங்கள் நெரிய ''நில் சுமித்ரா'' என்று அதட்டினான்.

விருட்டென்று திரும்பினாள் சுமித்ரா. ''ஏன்; உங்கள் எஸ்டேட்டுக்கு வாரிசு வேண்டுமா?'' என்று தன் ஆத்திரம் தீரக் கேட்டு விட்டாள்.

இரண்டு எட்டில் அவள் எதிரே வந்து நின்றான். சந்திரன். சினத்தை அடக்கி கொண்டு "என்ன உளறுகிறாய்?" என்று வினவினான்.

"உளறலா? மாமன் சொல்தட்டாத மருமகன் ஆமிற்றே, பிள்ளை பெற்றால் ஊட்டி எஸ்டேட் பரிசாமே குறைந்தாலும் ஆறு ஏழு லட்சம் பெறுமே. அதை விட்டு விடலாமா? பிடிக் காத மனைவி என்றாலும் பிள்ளை பெற..."

மேலே பேசுமுன் பளீரென்று கன்னத்தில் விழுந்து விட்டது. ஒரு கணம் சுமி ஒன்றும் புரியாமல் விழித்தாள். கழுத்துவரை நரம்புகள் இழுத்துப் புடைத்தன. காது அடைத்தது; கண் இருண்டது. ஆனால் அந்தப் புற உணர்வுகளைக் கவனிக்கும் நிலையில் அவள் இல்லை.

அவன் அவளை அடிப்பதா? நினைவு தெரிந்த நாள் முதல் கண்டிப்புடன் வளர்த்த அவளுடைய தாய்கூட சுமித்ராவை அடித்ததில்லை. தந்தையோ கடிந்தொரு சொல்கூடச் சொன்ன வர் இல்லை.

அப்படி வளர்த்த அவளை; நாய்க்கு லைசென்ஸ் தகடு மாட்டுவது போல தாலிகட்டிய ஒரே உரிமையால் இவன் கை நீட்டி அடிப்பதா? கொதிப்புடன் நிமிர்ந்தாள்.

"இவ்வளவுதான் தெரியுமா? அல்லது உங்கள் வலிமை யைப் பறைசாற்ற இன்னமும் எதேனும் உண்டா?" என்றாள் வெகு இகழ்ச்சியாக.

அவனும் முகம் கன்றிமிருந்தான். சே...மனைவியை அடித் தோமே என்ற அவனது கழிவிரக்கத்தைச் சுமித்ராவின் வார்த்தை துடித்தெரிந்தன. "மிச்சம் மீதியை நீயாகவே அறிந்துகொள்ள" என்று சட்டென அவளைப் பற்றினான்.

அவனை உதர முயன்றபடி ''சீ விடுங்கள்'' என்னை விடுங்கள் என்றாள் சுமித்ரா.

''விடுவதா? பின்னே என் கவலைகளை நீ அறிவது எப்படி? அதோடு என் ஊட்டி எஸ்டேட்டுக்கு வாரிசு வேண்டாமா?'' என்று ஏளனம் செய்தபடி அவளை முரட்டுத் தனமாகத் தூக்கிச் சென்று கட்டிலில் தொப்பென்று போட்டான் அவன்.

பல ஆண்டுகாலம் நடனம் பயின்ற லாவகத்துடன் உருண்டுசென்று கட்டிலின் மறுபுறமாக இறங்கினாள் சுமித்ரா.

அவ்வளவு சீக்கிரமாக அவள் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளக்கூடும் என்று எண்ணியிராத அவன் சுதாரித்துக் திரும்பு முன் அவள் மின்னலாய்ப் பாய்ந்து தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். சற்று நேரம் மூச்சு வாங்கியது. ஏன் இப்படி? ஏனிப்படி எஸ்டேட்டுக்காக அந்த பலவந்தம் என்கிற இந்த அளவுக்கும் துணிவானா? அவன் அப்படிப்பட்டவன் அல்ல என்ற முடிவுக்கு வந்திருந்தாளே. ஒருவேளை அவன் வீட்டில் மீண்டும் எதேனும் பெரியதாகப் பணத் தொல்லை ஏற்பட்டுவிட்டதா? கேட்க மனம் இல்லாமல் தன் பெயரில் சொத்தாக இருந்தால் வசதி என்று எண்ணிவிட்டானா, கடவுளே?

மறுநாள் காலையில் அறையைவிட்டு வெளியே வரவே சுமித்ராவுக்கு கால் வரவில்லை. மெல்ல மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு குளிந்த தலைநிமிராமல் நடந்தாள்.

சந்திரன் அதே பெரிய கட்டிலில் படுத்திருப்பது ஓரக் கண்ணில் பட்டது. எப்போதுமே அவன் அந்தக் கட்டிலில் படுப்பது வழக்கம்தான் என்றாலும் அவள் குளித்து முடித்து வரும்வரை அங்கேயே கிடப்பது...

வேகமாக வெளியேற முயன்றபோது, ''சுமித்ரா'' என்று அவன் அழைக்கவும் அப்படியே நின்றாள் ஜாக்கிரதையாகவேதான்.

''நேற்றோடு பகல் முடிந்த இரவு வருவரு நின்றுவிடப் போகிறதாமே. அப்படியா,'' என்று கிண்டலாகக் கேட்டு ஏளன மாகச் சிரித்தான்.

படபட வென்று நெஞ்சு துடிக்க வேகமாக வெளியே சென்றாள் சுமித்ரா. ''இன்று தப்பமாட்டாய்'' என்று எச்சரிக் கிறானாக்கும் ஆனால்...

பூப்பறித்துக் கொண்டு வரும்போது அவள் மனதில் ஒரு திட்டம் தோன்றிவிட்டது. டெலிபோனை எடுத்து எங்கெங்கோ ''டயல்'' செய்து பேசினாள். சிக்கலின் நிரந்தரத் தீர்வு இது இல்லையே என்ற சோர்வு உண்டாமிற்று. ஆனாலும் இப்போ தைக்கு சமாளித்து விட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தோறிவிட்டது.

காலை உணவின்போது சுமித்ரா தன் தந்தையிடம் ''அப்பா லாவண்யாவின் கடிதம் வந்தது. கட்டாயம் என்னை, வரச்சொல்லி எழுதியிருக்கிறாள். புனாவுக்குப் புறப்படலாம் என இருக்கிறேன். உங்கள் மாப்பிள்ளைகூடச் சரி என்று சொல்லி விட்டார்'' என்று கோர்வையாக இயம்பினாள். துணிச்சலாகவும்கூட.

''என்னம்மா திடீரென்று'' வியந்தார் அவர்.

''கொஞ்ச நாளாகவே நினைத்ததுதான் அப்பா. அவள் வேறு என்னிடம் ஏதோ முக்கியமாகப் பேச வேண்டுமாம். எனக் கும் அவர்களை எல்லாம் பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது'' என்றாள் அவள் பிடிவாதமாக.

''போயிவிட்டு வரட்டும் மாமா. சித்தியிம் சீறாட அவளுக்கு மட்டும் ஆசையிராதா? வேண்டாம் என்று தடுத்தால் அதையே

நினைத்து எங்கிக் கொண்டு இருப்பாள். ஆசை தீர இரண்டு நாள் போய்விட்டு வரட்டும்' என்று அவளுக்கு ஆதரவாகப் பேசினான் சந்திரன்.

சுமித்ரா வியப்புடன் கணவனை பார்த்தாள்.

அவன் கேலியாக இடது புருவத்தை மட்டும் ஏற்றி இறக்கினான். உதட்டைக் கடித்துக்கொண்டு குனிந்தாள் சுமித்ரா. கணவனது பார்வை மாறியதை அவள் கவனிக்கவில்லை.

''எப்படி கண்ணம்மா? தனியாக வேறு.''

''விமானத்தில் போகிறேன் அப்பா. இரவுக்குள் அங்கே போய் சேர்ந்து விடுவேன். இதில் தனி என்ன?''

''ஆமாம் தனி என்ன மாமா? சுமித்ரா உனக்கு இரண்டு ஐம்பதுக்கு ப்ளேன். இரண்டு மணிக்குள் அங்கே இருக்க வேண்டும். நான் மதியம் வீட்டுக்கு வந்து உன்னை விமான நிலையத்துக்கு அழைத்து போகிறேன். நீ ஒரு மணிக்குள் தயாராகிவிடு என்றான் சந்திரன்.

அவன் பேசப்பேச சுமித்ரா குழப்பம் அடைந்தாள்.

''சீக்கிரம் வந்து பாப்பா'' என்றார் தந்தை. நானும் மதியம் வீட்டுக்கு வந்துவிடுகிறேன். எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம்.''

தந்தைமின் பாசத்தில் சுமிமின் நெஞ்சு நெகிழ்ந்தது ஆனால் இந்த வீட்டில் அப்பா மட்டுமா இருக்கிறார்?

விமான நிலையத்தில் விமானம் ஏறுவதற்காக சுமித்ரா கிளம்பிய போது சந்திரன் திடீரென்று நகைத்தான். ''நீ புத்தி சாலி என்று நினைத்தேன் சுமித்ரா? வடிகட்டின அசடு போல் நடந்து கொள்கிறாயே,'' என்றான் சொல்லமாகக் கடிவது போல.

விமானம் செல்லச் செல்ல சுமித்ராவுக்கு அதே சிந்தனை. அவன் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும். நீ நிரந்தரமாகச் சித்தி வீட்டில் தங்கிவிட முடியுமா? இங்கே திரும்ப வந்து தானே தீரவேண்டும். என்று இதே நிலைதானே என்றானோ? அது மெய்தானே. இன்று ஓடி ஒளிவதால் எல்லாம் சரியாகி விடுமா? இந்த அர்த்தத்தில்தான் அவன் பேசியிருக்க வேண்டும் என்று சுமித்ரா முடிவு செய்தாள். பார்க்கலாம்; முதலில் இன்றையப் பிரச்சினை. பிறகு... அதைப் பிறகு பார்க் கலாம். நேற்று காலையில் மாலையில் நடந்தது எல்லாம் நினைவு வந்தது. அதிலெல்லாம் நடிப்பு என்றே தோன்ற வில்லையே அழகாக நடித்தானோ? அப்பா முன் மெய்போல நடிக்கவில்லையே! அப்பா பெற்ற மகளும் அவனது நடிப்பில் சற்று ஏமாந்து விட்டாள் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பார்கள். அது ஒருவரது மனம்தான். அந்தப் பொல்லாத மனதிடமிருந்து தப்பிக்க வழி தேடினாள். சென்னை விமான நிலையத்தில் அவன் வாங்கித் தந்த புத்தகத்தைப் பிரித்து அதில் கவனத்தைக் கட்டாயமாகச் செலுத்தினாள். பம்பாயில் பூனா நிலையத்துக்காகக் காத்திருந்த நேரத்தில் அந்தப் பெரிய புத்தகத்தை முடித்தே விட்டாள்.

சுமி போனா கிராம் (டெலிபோன் மூலம் தந்தி) கொடுத் திருந்த படியால் சித்தி சாந்தாவின் வீட்டார் எல்லோரும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். எல்லோரும் ஆரவாரத்துடன் சுமித்ராவை சூழ்ந்து கொண்டனர். அந்தப் பிரியத்தில் சுமிமின் மனம் சாந்தி பெற்றது.

''ஏய் சுமி கல்யாணமானதற்கு உன்னிடம் வித்யாசமே இல் லையே'' என்றாள் சுமித்ராவின் வயதை ஒட்டிய லாவண்யா.

''போடி மக்கு அப்படி என்ன வித்யாசம் வந்து விடுமாம்?'' என்றாள் சுமித்ரா.

''இங்கே உப்பும்'' என்று சுமித்ரா வயிற்றில் தட்டினாள் சாந்தா.

''சீ போங்க சித்தி'' என்று தம்பிமாரிடம் திரும்பினாள் சுமித்ரா. ''என்னடா உங்கள் கிரிக்கெட் எல்லாம் எப்படி இருக்கிறது? என்று விசாரித்தாள்.

''அதை ஏன் கேட்கிறாய்? இன்று வீட்டுக்குள்ளேயே கவாஸ்கர் மாதிரி அடிக்கிறேன் என்று சர விக்கை உடைத்து விட்டான்கள். பிறகு அப்பாவிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்'' என்று சிரித்தாள் லாவண்யா.

''காட்டிக்கொடுத்த எட்டப்பி'' இந்த குரங்குதான் சுமிக்கா'' என்று தன் தமக்கையை காட்டிக் குமுறினான் சின்னவன் சுரேஷ். லாவண்யாவுக்கு வலிச்சம் காட்டினான் மூத்தவன் ரமேஷ். இருவரும் கிட்டத்தட்ட இரட்டையர்கள் போல. ஒரே வயதுதான் வித்தியாசம்.

''எந்தக் குரங்கு? உங்கள் அக்காவா?'' என்று ''அக்காவில்'' அழுத்தம் கொடுத்து கேட்டாள் சுமி.

ஒரு கணம் திகைத்துவிட்டு ''ஆமாம் சுமி அக்கா'' என்று தாங்களும் அக்காவில் அழுத்தம் கொடுத்து கோரஸ் பாடினார் இருவரும்.

சிரித்துவிட்டு ''வாலுப் பசங்கள்'' என்று செல்லமாக வைதாள் சுமித்ரா.

போர்ட்டருக்குப் பணம் கொடுத்துவிட்டு சுமியிடம் திரும்பினார் சித்தப்பா லிங்கம் ''மாப்பிள்ளை வரவில்லையே சுமி. நான் அவரை பார்க்க ஆவலாக இருந்தேன்.

''அவருக்கு ரொம்ப வேலை சித்தப்பா. அப்பா வேலையை பெருமளவு அவர்தான் பார்க்கிறார்'' என்றாள் சுமித்ரா.

''பெரிய வேலை! நாளையே ஓடிவருவார் பாருங்கள். முன்னெல்லாம் இப்படித்தான் அக்கா லேசில் அம்மா வீட வரமாட்டாள் பெரியத்தானுக்கு வசதிபடாது என்று விடுவாள். ''நீ மட்டுமாவது வா'' என்று பிடித்து இழுத்துக் கொண்டு வந்தால் மறுநாளே பெரியத்தான் பின்னோடு வந்துவிடுவார். ஒருநாள் இருப்பதுபோல் இருந்து கையோடு அவளை அழைத்துப்போய் விடுவார். நீ வேறு லேட்டாகத் தானே பிறந்தாய் சுமி. நீ பிறக்கும் வரையில் அந்த ஆறு ஆண்டுகாலத்தில் அக்கா ஓர் ஆறு நாட்கள் கூட அம்மா வீட்டில் தங்கியது இல்லை. பெரிய அத்தான் தங்க விட்டதும் இல்லை. உன் கணவரைப் பார்த்தாலும் கொஞ்சம் பெரியத்தான் குணம்தான் தெரிந்தது. எப்படியானாலும் தன் எண்ணத்தை சாதித்து விடுகிற திறுகு.''

சுமித்ராவுக்கு திக்கென்றது. ''நான் அம்மா மாதிரி இல்லையே சித்தி நானாகவே வந்து விட்டேனே'' என்று விளையாட்டாகப் பேசினாள்.

''ஆமாம் வந்தாய். இரண்டு மாதங்களாக வாவா என்று லாவண்யாவும் கெஞ்சோ கெஞ்சு என்று கெஞ்சிய பிறகு வந்திருக்கிறாய். பத்து நாளைக்கு முன் திரும்பிப் போவதாகப் பேச்சே வரக்கூடாது. நினைவு இருக்கட்டும்'' என்றாள் சித்திக்காரி.

''மறுநாள் முழுவதும் அவிழ்த்து விட்ட கன்றுகளாகச் சுற்றினார்கள். எல்லோருக்கும் லீவு வேறு ஏதோ ஒரு போராட்டத்திற்காகப் பதினைந்து நாள் விடுமுறை கொடுத்திருந்தார்கள்.

''அங்கே சென்னையில் வரிந்து கட்டிக்கொண்டு பெரிய அம்மா மாதிரி வீட்டில் எல்லாம் பார்க்கிறாள். இந்தப் பையன் கூட ஒடுகிறாள். பாருங்கள்'' என்று தன் கணவனிடம் சுமியைப் பற்றிப் பேசிச் சிரித்தாள் சாந்தா.

''பார்ப்பவர்கள் நமக்கு நாலு பிள்ளைகள் என்றுதான் நினைப்பார்கள். சுமியை விட லாவண்யா கொஞ்சம் பெரிய மனுஷி போல் நிற்கிறாள் பார்த்தாயா? என்றார் லிங்கம்.

''அவள் டாக்டரைப் பற்றி நினைத்துக் கொண்டு நிற்பாள்'' என்று புன்னகைத்து விட்டு எழுந்தாள் மனைவி. ''நாளை உங்களுக்கு ஓய்வுதானே திடீர் என்று வேலை எதுவும் வந்து விடாதே'' என்று விசாரித்தாள்.

''என்ன? என்ன விஷயம்? பீடிகை பலமாக இருக்கிறதே'' என்று பயந்தவர் போலக் கேட்டார் லிங்கம்.

''அப்பப்பா நிரம்பவும் பயந்தவர்தான். விஷயம் ஒன்றும் இல்லை. பிள்ளைகள் தோட்டத்துக்குப் போகலாமா என்று கேட்டார்கள். உங்களைக் கேட்டுச் சொல்வதாகச் சொன்னேன்'' என்றாள் மனைவி.

பூனாவில் நகரத்தை அடுத்து லிங்கத்துக்கு ஒரு முந்திரித் தொழிற்சாலை உண்டு. அதை அடுத்து ஒரு பெரிய தோட்டமும் உண்டு. அங்கே பிள்ளைகள் ஓடியாட இடமும் பெரியவர்கள் கண்டு உலாவி ரசிக்கப் பெரிய சோலை வளமும் உண்டு. அங்கே பிக்னிக் செல்வது என்று இளையவர்கள் ஏகோபித்த முடிவு இப்போது பெரியவர்களும் தலை யாட்டினார்.

இரவில் ஒன்பதுமணி வரையும் நால்வரும் 'ட்ரேட்' விளையாடினார்கள். பத்து தடவை உணவு அருந்த அழைத்து இனி வரவில்லை என்றால் நாளை 'பிக்னிக் கிடையாது, என்று மிரட்டினாள் சாந்தா.

''நான்தான் ஜெயித்தேன்'' என்று அறிவித்தாள் சுரேஷ்.

''ஆமாடா எண்ணிப் பார்க்காமலே சொல்லு'' என்று தம்பியின் சிகையைப் பிடித்து விளையாட்டாய் உலுக்கினாள் சுமித்ரா.

''அதற்குள் எல்லாவற்றையும் கலைத்து விட்டு ''இப் போது எப்படி என்னுவாயாம்? ஆக நான்'' சொல்லுவதை ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்'' என்றான் அவன் தீர்மானமாக.

''இவன் மிகவும் பெரிய மனிதனாக வரப்போகிறான் சித்தி. நல்ல அடாவடி அடிக்கிறானே'' என்று கை கழுவிக் கொண்டு சாப்பிட அமர்ந்தாள் சுமித்ரா.

''சொல்லு சொல்லு உன் கடிதத்தைப் படித்ததில் இருந்தே எனக்கு ஒரே ஆவல்'' என்று கட்டிலில் அமர்ந்து அவளையும் அருகே அமர்த்திக் கொண்டாள் சுமித்ரா.

''பிக்னிக்''குக்குத் தேவையான சித்ரான்னங்களை எல்லாம் செய்து எடுத்துட்டு சாந்தா வந்தபோது மணி பத்தரை. அப் போது சுமியின் அறையில் விளக்கு எரிந்தது. பேச்சுக் குரல் கேட்டது.

அங்கே தலையை நீட்டி ''பேசாமல் படுக்கப் போ லாவண்யா; சுமி இன்னும் பத்து நாள் இருப்பாள். எப்போது வேண்டுமானாலும் பேசலாம். காலையில் எட்டு மணிக்குள் இங்கிருந்து கிளம்பியாக வேண்டும் சீக்கிரம் போய்ப்படு'' என்று மகளை அதட்டினாள்.

''என்ன அம்மா'' என்று சிணுங்கிவிட்டு எழுந்தாள் லாவண்யா, ''சரி சுமி நான் படுக்கப் போகிறேன். கனவில் உன் அத்தான் வந்து உன்னைத் தூங்கவிடாமல் தொல்லை செய்வாராக'' என்று ஆசீர்வதித்தாள்.

''உன் கனவில் உன் டாக்டர் வந்து தொல்லை கொடுப் பாராக'' என்றாள் சுமித்ரா பதிலுக்கு.

சிரித்துவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போனாள் லாவண்யா.

வழக்கம்போல் இரவில் பல் துலக்குமுன் தூக்கம் கண்ணைச் சுழட்டியது சுமித்ராவுக்கு. வெகுநாட்களாக இவ் வளவு தூரம் ஓடி ஆடி விளையாடியது இல்லை. எனவே ஒரே அலுப்பாக இருந்தது. பழக்க தோஷத்தில் உடம்பு கழுவி விட்டு வந்து படுக்கையில் விழுந்ததுதான் தெரியும், அயர்ந்து தூங்கிவிட்டாள்.

தன் தெழிற்சாலை சம்பந்தமான சில பேப்பர்களைப் பார்த்து முடித்துவிட்டு எழுந்தார் லிங்கம். பிறகு அவரும் அவருடைய மனைவி சாந்தாவுமாக தங்கள் மகளின் வரப் போகும் திருமணம் அவர் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை மாப் பிள்ளை வீட்டார் என்று பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது ஒரு டாக்சி கேட்டின் முன் வந்து நிற்கவே பால்கனியிலிருந்து இருவரும் எட்டிப் பார்த்தனர். டாக்சியிலிருந்து இறங்கிய ஆளைப் பார்க்கவும் சாந்தா வாயைப் பிளந்தாள்.

''சுமி மாப்பிள்ளை!'' என்றவன் வேலையாளை அழைத் துக் கதவைத் திறக்கச் சொன்னாள், மடமடவென்று இறங்கி வாயிலுக்கு வந்தாள். ''பிரின்ஸ் சும்மா இரு'' என்று நாயை அதட்டிவிட்டு ''வாருங்கள் மாப்பிள்ளை'' என்று சந்திரனை வரவேற்றாள்.

தன் பின்னோடு வந்த கணவரைப் பார்த்து ''என்னங்கள் இவர்தான் நம் சுமியின் கணவர். மாப்பிள்ளை இவர்தான்...'' ''என் சுமியின் சித்தப்பா'' என்று சிரித்துக் கொண்டே முடித் தான் சந்திரன். லிங்கம் நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கி விட்டு ''சவுக்கியமா சின்ன மாமா? என்று குசலம் விசாரித்தான்.

அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சிரித்தார் லிங்கம். ''ராமநாதனுடைய தேர்வு பிரமாதம்'' என்று பாராட்டினார். ''உங்கள்

திருமணத்துக்கு வர இயலாது போயிற்று மாப்பிள்ளை. இங்கே தொழிற்சாலையை விரிவுபடுத்திக் கொண்டு இருந்தோம். பிறகும் வரமுடியவில்லை.''

அதனால் என்ன மாமா? இப்போது தான் நானே இங்கேயே வந்து விட்டேனே. அதோடு நீங்கள் பெரியவர்கள். நான் சின்ன வன் வந்து உங்களைப் பார்த்தது தான் முறையாகும்'' என்றான் சந்திரன் தன் அழகிய பல்வரிசையை லேசாகக் காட்டி புன்னகை செய்தபடி.

சாந்தா உள்ளே செல்லப் போனாள்.

''ஊகூம் அத்தை எங்கே போகிறீர்கள்?'' என்று தடுத்தான் சந்திரன்.

''உங்களுக்குச் சாப்பாடு ஏதாவது...?''

''ஒன்றும் வேண்டாம் பிளேனிலேயே எல்லாம் ஆகி விட்டது'' என்றான் சந்திரன்.

''இப்போதா பிளேன்?''

ஆமாம். சில நூறு நிமிடங்கள் மட்டுமே தாமதம் அவ் வளவுதான் என்று அவன் சிரிக்காமல் சொல்ல எதிரில் இருந்த இருவரும் நகைத்தார்கள்.

''சுமியை எழுப்புகிறேன்'' என்று மீண்டும் உள்ளே திரும்பினாள் சாந்தா.

''தயவு செய்து வேண்டாம் அத்தை. அவளை நானே எழுப் பிக் கொள்கிறேன்...ம்...அப்பா'' என்று கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தான். கைமறைவில் ஒரு சிறு கொட்டாவியை வெளியேற்றினான்.

குறும்புடன் குபீரென்று சிரித்தாள் சாந்தா. ''அசல் பெரிய அத்தான் மாதிரியேதான். தன்னைப் போலவே எப்படித்தான்

பிடித்தாரோ'' என்று சொல்லி விட்டு ''வாருங்கள் மாப்பிள்ளை, உங்களுக்குத்தான் தூக்கம் வந்து விட்டதே'' என்று மீண்டும் சிரித்தாள். லிங்கமும் இணைந்து நகைக்க சந்திரன் உதட்டைக் கடித்துக் கொண்டு எழுந்தான்.

சுமிமின் அறையைக் காட்டினாள் சாந்தா. ஒரு கையில் கைப் பெட்டி இருக்க மறுகையால் கதவின் கைப்பிடியைத் திருகினான் சந்திரன் கதவை லேசாகத் திறந்து, ''அப்போது...'' என்று சின்ன மாமியாரின் முகத்தைப் பார்த்தான். சாந்தாவின் கண்களைச் சந்தித்ததும் சிரித்து விட்டாள். ''நீங்கள் நிரம்பவும் பொல்லாதவர்கள் அத்தை குட்நைட்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று கதவை தாளிட்டான்.

அறைவாமிலில் பேச்சுக்குரல் கேட்கவும் சுமித்ராவின் இனிய தூக்கம் சற்றே கலைந்தது. மெல்ல புரண்டு படுத்தவள் அறைக் கதவு திறந்து தாளிடும் சத்தம் கேட்கவும் மிகுந்த சிர மத்துடன் கண்களை திறந்து பார்த்தாள். விடிவிளக்கின் ஒளிமில் சந்திரன் உருவம் அரை குறையாகத் தெரிந்தது. கனவு கண்டு கொண்டு இருந்ததால் அவன் நிற்பது போலத் தெரிகிறதோ என்று கண்ணைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தாள். கனவல்ல நிஜமான சந்திரனேதான்... எப்படி?

கைப்பெட்டியை ஒரு புறமாக வீசிவிட்டு டையைக் கழற்றி வீசிவிட்டு ஷர்ட்டையும் கழற்றி வீசிவிட்டு உறுதியான காலடிகளுடன் அவள் அருகே வந்தான் சந்திரன். அவன் பார்வை அவள் முகத்தை விட்டு வினாடிகூட அசையவில்லை. அவளும் தன் பார்வையை விலக்கிக் கொள்ள முடியாமல் பிரம்மையுடன் பார்த்துக்கொண்டே இருந்தாள். கட்டிலில் அவளுக்கு இருபுற மும் கைகளை ஊன்றி அவன் குனிந்த போது அவனது பரந்த தோளும் கரங்களும் ஒரு பெரிய பறவையின் சிறகுகள் போல நீண்டு பரந்து அவள் பார்வையை மறைத்தன.

10

காலையில் கண்விழித்தபோது சுமித்ராவுக்குச் சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை, ஆனால் தன்மேல் கனமாகத் கிடந்த ஆண்கரத்தைப் பார்த்தும் எல்லாமே போட்டி போட்டு கொண்டு புரியவந்தன. ஆக அவன் சொன்னது போல அவள் அசடாகத் தான் நடந்து கொண்டாள். தற்சமயம் தலைமறைவாக இருந்து விட்டால் அவனது இந்த வேகம் மாறிவிடும் என்று நினைத் தாளே அவன் ''நினைத்ததை நின்று சாதிக்கும் ரகம்'' என்று சித்தியல்லவா சொல்லித் தரவேண்டியிருந்தது? ஆனால் என்ன இருந்தாலும் எதிர்ப்பே இல்லாமல் அவள் எப்படி அவனுக்குப் பணித்தாள்? அவள்... சுமித்திரைக்கு அதற்கு மேல் சிந்திக்கக் கூட பயமாக இருந்தது. வெட்கமாகவும் கூடத்தான். மெல்ல அவன் கரத்தை விலக்விட்டு எழுந்து சென்றாள்.

அவள் குளித்துவிட்டு வரும்போது அவள் விழித் திருக்க வில்லை. சற்று நேரம் பார்த்துக்கொண்டே நின்றாள். ஏதோ கனவில் அவன் இதழ்கள் மலர்ந்தன. பிறகு அவன் லேசாக அசையவும் சுமித்ரா அவசரமாக வெளியே ஓடி விட்டாள்.

''மாப்பிள்ளைக்குக் காபி சுமி?'' என்றாள் சாந்தா,

''அவர் சிற்றுண்டியோடு சாப்பிடுவார்'' என்று நழுவினாள் சுமித்ரா.

''அதற்குள் முந்தானையைப் பிடித்துக்கொண்டு ஓடி வந்து விட்டாரோ'' என்று கேலி செய்தாள் லாவண்யா.

''அத்தானைப் பார்க்க வேண்டும்'' என்றார்கள் பையன்கள்.

''விழித்திருப்பார் உள்ளே போய்ப் பாருங்கள்'' என்று தம்பிகளை உள்ளே ஓட்டிவிட்டாள் சுமித்ரா.

சற்றுநேரம் அந்த அறையில் சளசளவென்று பேச்சு கேட்டது. சந்திரன் சிரிப்பதும் கேட்டது. ''விடுவதில்லை அத்தான். இன்று தோட்டத்திற்கு பிக்னிக்'' போகும் போது ''உங்களோடு டென்னிஸ் ஆடிவிட வேண்டியதுதான்'' என்று அவனை இழுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள் ரமேஷும், சுரேஷும்.

''தோட்ட பிக்னிக்'' என்று சுமியிடம் புருவங்களை உயர்த்தினான் சந்திரன்.

''இங்கே ஊருக்கு வெளியே சித்தப்பாவுக்கு ஒரு தோட்டம் இருக்கிறது. அங்கே இன்று பிக்னிக் போகலாம் என்று திட்டம்...?'' என்று குனிந்த தலை நிமிராமல் முணு முணுத்தாள் சுமித்ரா.

''ஆகா என்ன வெக்கமடியம்மா, அத்தான் எங்கள் தோட் டம் மிகவும் நன்றாக இருக்கும். அதனால் இன்றைய 'பிக் னிக்'கில் நீங்களும் கலந்து கொள்ளவேண்டும் ம்ம்... அப்பு றம் உங்கள் மக்குவுக்குத்தான் ஒன்றும் தெரிய வில்லையே. என் பெயர் லாவண்யா. உங்கள் சின்ன மாமாவின்...''

மூத்த மகள். இந்த இரு வால் பையன்களுடைய அக்கா'' என்று முடித்தான் சந்திரன்.

''கரெக்ட்'' என்றாள் லாவண்யா.

''ஆக என் மக்கு முழுமக்காக இருக்கவில்லை'' என்று இயம்பினான் சந்திரன்.

''ஓகோ'' என்று எல்லோரும் ஆரவாரம் செய்தனர். ''சுமிக்கு இவ்வளவு பரிந்து கொண்டு வருகிறீர்களே!''

சந்திரன் சிரித்தான். "அப்புறம் இன்னொன்று நான் பிக்னிக் வருகிறேன். ஆனால் ஐந்தரைக்குள் திரும்பி விட வேண்டும் ஏனெனில் ஆறு இருபத்தைந்துக்கு ரமில் இருக்கிறது."

"ரமிலா?" என்று பல குரல்கள் கோரஸ் பாடின.

"ஊகூம் அதெல்லாம் கிடையாது."

"இன்னும் இரண்டு நாளாவது இங்கே இருக்க வேண்டும்."

"சுமியை விடமாட்டோம்."

சந்திரன் புன்னகையுடன் பேசாது நின்றான்.

"கட்டாயம் போக வேண்டுமா மாப்பிள்ளை?" என்று லிங்கம் வினவினார்.

"அங்கே மாமா தனியே எல்லா வேலைகளையும் பார்த்துக் கொண்டு கஷ்டப்படுவார் இல்லையா சின்ன மாமா?"

"சுமியையாவது விட்டுப் போகக் கூடாதா? ஒரு நாலு நாள் இருக்கட்டுமே" என்றாள் சாரதா கொஞ்சுவது போல.

"அவளை விட்டுப் போக வசதிப் படாதே அத்தை மாமா அவளைக் காணாமல் தவித்தும் போவார்." என்றான் சந்திரன் தீர்மானமாக.

"மாமா மட்டும்தான் தவித்துப போவாராக்கும்."

"என் வாயால் சொல்ல வேண்டுமா அத்தை? அவரை விடவும் நான்தான் தவித்துப் போவேன் போதுமா" என்று நகைத்தான் சந்திரன்.

'ஓ' என்று எல்லோரும் சிரித்து விட்டனர். சுமித்ராவால் சிரிக்க முடியவில்லை. உதட்டைக் கடித்துக்கொண்டு அசையா

மல் நின்றாள். சந்திரனின் பார்வை அந்த உதட்டில் பதிவதை சாந்தா கண்டாள்.

''நான்தான் முன்பே சொன்னேனே. பெரியத்தான் மாதிரி தான் மாப்பிள்ளையும், அனுப்புகிறமாதிரி அனுப்பி விட்டுப் பின்னோலேயே அக்காவை வந்து அழைத்துப் போய்விடுவார் அவர். நீங்களும் அதே மாதிரிதான் செய்கிறீர்கள் சரிதான் சுமி. நீ மாப்பிள்ளைமின் துணிமணிகளை எடுத்து வைத்து விடு, போம்மா. லாவண்யா துவைத்ததில் சுமிமின் துணிகள் இருக் கும் பார்த்துப் பிரித்து எடு. பிறகு கிளம்புகிற நேரம் தேடிக் கொண்டு இருக்கக் கூடாது.

சுமித்ரா பேச்சின்றி அறைக்குள் சென்று சந்திரனின் துணி களை எடுத்து வைத்தாள். பின்னோடு உள்ளே வந்தான் சந் திரன். குனிந்த தலை நிமிராமல், துணிகளைப் பெட்டிமினுள் வைத்துக்கொண்டிருந்த சுமித்ராவைத் தொட்டுத் தன்புறமாய் திருப்பினான். மீண்டும் அவன் அவளை விடுவித்தபோது சுமிக்கு மூச்சு வாங்கியது.

''வரலாமா?'' என்று யாரோ கதவைத் தட்டினார்கள். ரமேஷ் தான். அத்தானை கையோடு இழுத்துச் சென்றான் அவன்.

காரில் செல்லுகையில் சாந்தா குறைப்பட்டுக் கொண்டே வந்தாள். ''சுமி ஒரு பத்து நாளாவது இருப்பாள் என்று பார்த் தேன். இப்படிப் பண்ணுகிறீர்களே'' என்றாள் ஆதங்கத்தோடு.

''லாவண்யாவின் திருமணத்தின்போது நானும் அவளுமாக இங்கே இரண்டு வாரம் டேரோ போட்டு விடுகிறோம். திருப்தி தானே அத்தை'' என்றான் சந்திரன் தேறுதலாக.

''அடேயப்பா! இரண்டு நாள் தங்கவிடவில்லை. இரண்டு வாரம் தங்குகிறார்களாம். மழை பொழிந்து ஊரெல்லாம் வெள்ள மாகிவிடாதா?'' என்றாள் சாந்தா கேலியாக.

சந்திரன் சிரித்துக் கொண்டான்.

''சிரிக்கிறீர்களே தவிரக் கொஞ்சங்கூட விட்டுத்தர மாட்டேன் என்கிறீர்களே. அதோடு லாவண்யாவின் திருமணத்துக்கு இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன தெரியுமா?''

அவ்வளவு நாட்களுக்குள் இந்த வார்த்தைகளை நாம் மறந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில்தான் சொல்லியிருப்பார்'' என்றாள் லாவண்யா.

''அட சரியாகச் சொல்லிவிட்டாயே. மக்கு இல்லாத மைத்துனிதான்'' என்று கூறிவிட்டு மேலும் நகைத்தான் சந்திரன்.

தோட்டத்தில் சந்திரனை நன்றாக ஆடவைத்தனர் ரமேஷும், சுரேஷும் அவர்கள் இருவருக்குமாக அவன் ஒருவனே ஈடு கொடுத்து விளையாடுவதை லேசாக கவனித்து விட்டு அகன்றாள் சுமித்ரா. நீர் ஊற்றின் அருகே சென்று அமர்ந்தாள். அவளுக்குத் தனியே சற்று நேரம் இருந்தாக வேண்டியிருந்தது. ஓர் இரவுக்குள் தலைகீழாக மாறிவிட்ட இந்த உலகத்தைப் பற்றிச் சற்று சிந்தித்தாக வேண்டியிருந்தது. ஆனால் எதிர்காலத்தைப் பற்றி சிந்தியாமல் மனம் முன் தினத்திலேயே உழன்றது.

'சுமி' என்ற அழைப்புடன் ஒரு கரம் தோள் மீது விழவும் சுமித்ரா திடுக்கிட்டாள். அவசரமாக எழ முயன்றாள். ஆனால் அவளது தோளை அழுத்தி உட்கார வைத்துத் தானும் வெகு அருகே அமர்ந்து கொண்டான் சந்திரன். அவனது அருகாமையில் சுமித்ரா முகம் சிவந்து மனம் குழம்பிப் போனாள்.

''ஏன் சுமிக்குக் கோபமா? அல்லது வெட்கமா? முகம் ரத்தமாகச் சிவந்து போயிற்றே'' என்றான் அவன் கொஞ்சலாக.

சுமித்ரா முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள்.

சந்திரன் குரல் மாறியது. ''சுமி'' என்று தயங்கிவிட்டு மீண்டும் தொடர்ந்தான். ''சுமி உனக்கு என் மேல் கோபம் இல்லையே'' என்று அவள் வியக்கத்தக்க விதத்தில் பணிவாகவே கேட்டான்.

சற்று நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள் சுமித்ரா.

அவன் முகம் முலர்ந்தது. ''என் சுமி'' என்று புன்முறுவலு டன் அவளது கன்னத்தை வருடினான்.

சுமித்ரா தடுமாறிப் போனாள். ''நான்... அங்கே யாராவது பார்த்'' என்று திணறினாள்.

சந்திரன் உல்லாசமாகச் சிரித்தான்.

சுமி என்ற செல்லப் பெயர் அவள் வாயில் வெகுசுலப மாக ஒரு தனி அர்த்தத்தில் ஒலிக்கக் கேட்டாள் சுமித்ரா இன்ன மும் அதிகமாக இனிய குழப்பத்தில் ஆழ்த்தினான்.

இந்த இனிய தவிப்புதான் திருமணமா!

ஐந்து மணிக்கே எல்லோரையும் கிளப்பிக் கொண்டுவந்து விட்டான் சந்திரன்.

''நான் சுமியோடு நிறையப் பேச வேண்டும் என்றிருந் தேன்'' என்றாள் லாவண்யா குறையோடு.

''சென்னைக்கு வந்து வேண்டுமட்டும் பேசுவதுதானே'' என்று பதில் கொடுத்தான் சந்திரன். ''அல்லது ஒருவேளை டாக்டர் அனுமதிக்க மாட்டாரோ'' என்றான் கேலியாக. லிங்கம் மகளைப் பற்றி அவனிடம் சொல்லியிருந்தார்.

தந்தையும் தாயும் சிரிப்பதைக் கண்டதும் ''அப்பா சொல்லி விட்டாராக்கும்'' என்று தந்தைமிடம் பாய்ந்தாள் லாவண்யா.

''ஏன்? சுமித்ரா சொல்லமாட்டாளாக்கும்?'' என்று மனைவியை மாட்டிவிட்டான் சந்திரன்.

''சுமி, நீ கூடவா? ஒருவரிடம் சொல்லக் கூடாது என் றேனே'' என்று அவளிடம் பாய்ந்தாள் லாவண்யா.

''கணவனும் மனைவியும் உள்ளத்தால் ஒருவரே என்பது தெரியாதா லாவண்யா?'' என்றான் சந்திரன்.

''நான் சொல்லவில்லை லாவண்யா'' என்றாள் சுமி மெல் லிய குரலில். சந்திரன் சிரிப்பில் அவள் மெய் சொல்வது போலவே தெரியவில்லை.

''அப்பாவிடமும் சொல்லிவிடு சுமிம்மா'' என்றார் லிங்கம்.

வீட்டில் பெட்டிகளை எடுத்துக்கொண்டு எல்லோரும் ரயில் நிலையத்திற்கு வந்தார்கள்.

அங்கே யாரோ ஒருவர் சந்திரனிடம் புன்னகை செய்தார். ''டிக்கட் கிடைத்ததா சார்?'' என்று வினவினார். பிறகு ''பெரிய ஆள் சார் நீங்கள், நேற்று இரவு எட்டுமணிக்கு வந்து இன்றைக்கு டிக்கட் எடுத்து விட்டீர்களே என்று வியந்து பாராட்டினார்.

''எட்டுமணியா? பிளேன் லேட் என்கிறீர்களே,'' என்று குழப்பத்துடன் கேட்டாள் சாந்தா.

ஜாடையாகச் சிறுவர்களைப் பார்த்துவிட்டு ''இதெல்லாம் கண்டு கொள்வார்களா அத்தை?

தூக்கக் கலக்கத்தில் சுமி மிகவும் அழகாக இருப்பாள் என்று சிரித்தான் சந்திரன்.

சித்தி புரிந்து கொண்டு நகைத்தது ஒன்று சுமித்ரா அறிந்து, கொண்டது வேறுவிதம். தப்புவது பற்றி சிந்திக்கும் அவகாசம்கூட அவளுக்கு கிட்டாதபடி செய்திருக்கிறான். ஏழே காலுக்கு பூனாவுக்கு வந்தவன் பதினொரு மணிக்கு மேல் வீட்டுக்கு வந்திருக்கிறான்? இவனை சுமித்ரா வெல்ல இயலுமா என்ன, இயலவில்லையே ஆனாலும் இந்தத் தோல்வி வேதனை தரவில்லையே தோல்வியும் வெற்றி ஆகுமா? ஆகக் கூடுமோ?

ரமில் கிளம்பியது. ''கதவை உள்ளே பூட்டி விடலாம் சுமி. நாலு சீட்டும் நம்மதுதான்'' என்றதும் அவள் திகைத்தாள். இது ஏன்? ஒன்று தோற்றாலும் அடுத்தது நிச்சய வெற்றியா, உதட்டைக் கடித்துக் கொண்டு யோசித்தாள். யோசனையைப் பாதியில் தடுத்தது சந்திரனின் வேகமான அணைப்பு.

இந்த அணைப்புக்குள் அடங்குவதைக் காட்டிலும் தீயை இன்பமாக அணைக்கலாம் என்று நினைத்தாளே. ஆனால் அது வேண்டா வெறுப்பான அணைப்பு அல்லவா? இப்போது அவள் விரும்பித்தானே... அல்லது... வேண்டாம் வேண்டாம், மனமே சிந்தியாதே வேண்டாம்.

சென்னை நெருங்க நெருங்க சுமித்ராவின் மனம் குழம்பமாயிற்று. அங்கே சந்திரன் எப்படி நடந்து கொள்வான்? பூனாவில் சந்திரனுக்கு சுமித்ரா முழுக்க முழுக்க தேவைப்பட்டாள். ஆனால் இங்கே?

சந்திரனின் விரல்கள் சுமியின் சுளித்த புருவங்களை மெல்ல நீவின. ''எதையாவது எண்ணி மனதைக் குழப்பி கொள்ளக்கூடாது சுமி.

வரவர லேசாக மழை பெய்து கொண்டே வந்தது. சென்னையை அடையும்போது மாலை ஐந்தேகாலுக்கே இருட்டி இர

வின் குளிர் பரவத் தொடங்கி விட்டது. போர்ட்டரிடம் சாமான் களை இறக்கச் சொல்லிவிட்டு சுமி வைத்திருந்த சிறு சால் வையை போர்த்திவிட்டான் சந்திரன். இதைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன இரு விழிகள்.

வீட்டை அடைந்தபின் ராமநாதனிடம் சற்று நேரம் மகளும் மருமகனும் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

''சுமியைக் கொண்டு வந்துவிட்டேன் பாருங்கள் மாமா'' என்று பெருமையடித்தான் சந்திரன்.

''ஆச்சரியம்தான் மாப்பிள்ளை, அங்கே போனால் அவளை விடவே மாட்டார்கள். இவளுக்கும் உள் நேசம் உள்ளவர்களாக உடன் ஒத்த பிள்ளைகள் அங்கே இருப்பதால் வருவதற்கு மனம் வராது'' என்றார் ராமநாதன்.

''இப்போது வந்து விட்டாளே'' என்று மீண்டும் பெருமை அடித்தான் சந்திரன்.

சுமித்ரா எழுந்துவிட்டாள். சர்வாதிகாரி போல அங்கே அவன் நடந்து கொண்டதென்ன? இங்கே அவளாகவே வந்தது போலச் சொல்வதென்ன? ''நான் இரவு உணவைப் பார்க்கப் போகிறேன்'' என்று சென்று விட்டாள்.

அவள் மாடிக்குச் சென்றபோது சந்திரனும் கூடவே வந்தான். அவன் தன் அறைப்பக்கமாக திரும்புகையில் அவளை தடுத்து நிறுத்தினான். தன்புறமாக அவளைத் திருப்பி அவள் முகத்தை ஏந்தி இதழ்களில் அழுந்த முத்த மிட்டான். பிறகு வெற்றிச் சிரிப்புடன் அவளை அனுப்பி விட்டுத் தன் அறை யைத் திறந்தான்.

அவன் சிரிக்கவும் சுமிக்கு ஒரே வெட்கமாகிவிட்டது. அவன் விரும்புகிறபடி எல்லாம் இப்படி வளைகிறோமே என்று நாணத்துடன் பிளைத்தாள்.

முகம் கழுவிவிட்டுக் கண்ணாடி முன்னே நின்று தன்னையே பார்த்துக் கொண்டாள் சுமித்ரா. கொஞ்சுதலாக வருடி அவன் இதழ் பதித்த கன்னங்கள்? மெல்லக் கன்னங் களை வருடிப் பார்த்தாள். அவன் வருடிய நினைவில் முகம் சிவந்தாள். விரலால் இதழ்களைத் தொட்டுப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் முகத்தை மூடிக்கொண்டாள்.

எப்படியோ ஒருவிதமாக அலங்காரத்தை முடித்துக்கொண்டு வெட்கத்துடன் தயங்கித் தயங்கி கதவைத் திறந்து தலையை நீட்டிப் பார்த்தாள். அவன் இன்னமும் வரவில்லை. அவனது அறையிலிருந்து கதவோரமாக ஒளிக்கீற்று மட்டும் தெரிந்தது.

ஓசையின்றி சுமித்ரா நடந்து வருகையில் சந்திரனின் குரலும் கேட்டது. வெளியே வரக் கதவைத் திறக்கும்போது போன் வந்ததோ? புன்னகையுடன் அவன் குரலைக் கேட்டுக் கொண்டே மேலே நடந்தாள் சுமி "நாளைக் காலையில் சந்திக்க லாம் வசந்தி."

வசந்தி! வசந்தியா? சுமித்ராவுக்கு நெற்றிப் பொட்டிலேயே அறை விழுந்ததோ? ஒரு கணம் உயிர் இழந்தவள் போல நின்றாள்.

'எங்கேயோ? காலை ஒன்பது மணிக்கு வழக்கமான இடத் நிற்கு வருகிறேன் ஓகே?" என்று அவன் டெலிபோனை வைக் கும் சத்தம் கேட்டது.

இப்போது வெளியே வருவானே. உயிருக்கு பயந்து ஓடு கிறவள் போல சுமித்ரா வேகமாக வெளியே ஓடினாள். அவன் அழைத்தாற் போலத் தோன்றியது ஆனால் அவள் நிற்கவில்லை.

கீழே வரவேற்பு அறையை ஒட்டி ஒரு குளியலறை உண்டு. அங்கே சென்று கதவைச் சாத்திக் கொண்டு சற்று நின்றாள்.

முட்டாளின் சொர்க்கம்! இரு தினங்களாக சுமித்ரா அங்கே அல்லவா இருந்து விட்டாள்! இந்த வசந்தியை அடியோடு மறந்து போனாளே. ஆனால் அவன் மறக்கவே இல்லையே என்று வேதனையுடன் நினைத்தாள்.

வழக்கமான இடத்தில் என்றானே. அப்படியானால் தினம் தினம் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்களா? எப்படி முடியும்? ஏன் முடியாது? தனி கார் கையில் இருக்கிறது. தொழில் தொடர்பாக வெளி ஆட்களைச் சந்திப்பதாகச் சொல்லி விட்டுப் போக வேண்டியதுதானே. வழக்கமான இடமா?'' அப் படியானால் அவன் காட்டிய ஆர்வம் ஆசை எல்லாம் பொய். வெறும் வேடம் நடிப்பு அய்யோ அம்மா, அடிவயிற்றிலிருந்து திரண்டு வந்த வேதனையைப் பல்லைக் கடித்து அடக்கினாள் அதற்கு நேரம் அப்புறம் இருக்கிறது. எத்தனையோ இரவுகளில் அவளது தலையணை கண்ணீரால் ஈரமாகவில்லையா? இன்றைய இரவும் அவைகளில் ஒன்றாக இருந்துவிட்டுப் போகட்டும் இப்போது.

கலங்கிப் போன மனதைச் சீர் செய்ய முடியாமல் போனா லும் முகத்தோற்றத்தில் கலக்கம் தெரியாமல் மறைத்தாள். சாப் பிடும் அறையை நாடிச் சென்றாள்.

உணவின்போது கலகலப்பாகப் பேச முயன்றாள். தந்தை யிடமே பேசினாள். சந்திரனும் குறுக்கிடவில்லை எதையோ யோசிப்பவன் போல அமைதியாக உண்டான்.

''லாவண்யாவுக்குக் கல்யாணம் அப்பா.''

''வெரிகுட், பையன் யாராம்?'' என்று விசாரித்தார் தகப்பனார்.

''லாவண்யா பெரிய கள்ளி அப்பா. பையன் அவளது தேர்வுதான். டாக்டாராம். அவருக்கே சொத்து நிறைய இருக்கிறதாம். பணத்துக்காக வருகிறார்களோ என்ற பயம் இல்லை என்கிறார் சித்தப்பா.''

''எப்படியோ, பெண்ணும் பிள்ளையுமாக நன்றாக இருக்கட்டும்'' என்று ஆசி கூறினார். ராமாநாதன்.

''அவள் நன்றாக இருப்பாள் அப்பா. மிகவும் நல்ல பெண் ஆமிற்றே.''

''என்னைப் போலவேதானே. உன் மாதிரியே அவளும் நன்றாக இருப்பாள்.''

சுமித்ராவுக்கு சப்பாத்தி தொண்டையில் விக்கியது உடல் குலுங்கினாள்.

''என்ன பாப்பா?'' என்றார் தந்தை யோசனையாக.

''என்னளவு இருக்க முடியுமா அப்பா? கொஞ்சம் மட்டாகத்தான் இருக்க முடியும்'' என்று பல்லைக் காட்டினாள் மகள்.

''கரெக்ட்'' என்று எழுந்தான் சந்திரன் ''வா சுமி.''

''உங்களுக்கும் சுமியாகி விட்டாளே'' என்று விரித்தார் ராமநாதன்.

''ஆமாம், எல்லோரும்தான் இவளுக்குச் செல்வம் கொடுக்கிறார்கள். நானாவது கொஞ்சம் ''இது''வாக இருக்கலாம் என்று பார்த்தேன். அவள் என்னையும் வளைத்து விட்டாள்'' என்றாள் சந்திரன்.

அவனோடு சேர்த்து பாதிப்படி ஏறியதும் ''நான் அப்பா விடம்...'' என்று இறங்கி ஓடிவந்தாள். அப்பா உங்களிடம் சித்தி ஒன்று சொல்லச் சொன்னார்கள். அம்மாவுடைய ரூபியும் வைரமும் பதித்த நகை செட் மாதிரிக்கு வேண்டுமாம்...''

சற்றுத் தயங்கிவிட்டுச் சந்திரன் மாடிக்குச் சென்றான்.

அவன் சென்றபின் சுமித்ரா தந்தைமின் அருகே அமர்ந் தாள். பேச்சு நின்றுவிட்டது. தன்னை அடக்க முடியாமல் மெல் லத் தந்தைமின் மடிமில் முகம் பதித்து ஓசைமின்றிக் கண்ணீர் விடலானாள்.

மகளின் கூந்தலை மெல்ல வருடினார் ராமநாதன். 'ஏன் கண்ணே? இரண்டு நாட்கள் அப்பா தவித்திருப்பேனே என்று தோன்றிவிட்டதோ? இரண்டு நாட்கள்தானே. அதற்குப் போய் அழுவார்களா? எழுந்திரம்மா கண்ணைத்துடை. மாப்பிள்ளைக்கு இரண்டு நாளாக அலைச்சல் களைத்துப் போமிருப்பார். அவரைப் போய்ப் பாரம்மா அனுப்பினார்.

ஒரு பேச்சுச் சொல்லி அழுதுவிட்டால் மனதின் பாரம் குறையலாம். ஆனால் யாரிடம் சொல்வது? தந்தைமிடம் ஆறுதல் கிட்டாமல் வேதனையுடன் எழுந்து சென்றாள்.

படுக்கை அருகே மேசைமில் இருந்த பூக்கிண்ணத்தில் இருந்து ஒரு ரோஜாவை எடுத்து முகர்ந்து பார்த்தபடி ''சுமி'' என்று அழைத்தான் சந்திரன்.

கூப்பிட்ட குரலைத் தொடர்ந்து காலை சந்திப்பின் ஏற்பாடு சுமிமின் 'நெஞ்சில் கேட்டது. இன்று சுமித்ராவுடன் சல்லாபம். நாளை வசந்தியுடன் சரசமா? ஆத்திரத்துடன் நிமிர்ந் தாள், வெட்டும் பார்வையுடன் ''விடுமுறை உல்லாசம் பூனாவு டன் நிற்கட்டும்'' என்றாள்.

பொறுமை இழந்தவன்போல ''சுமித்ரா'' என்ற அதட்டலுடன் அவன் எழுந்தான்.

ஆனால் அதற்குள் சுமித்ரா தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். ''மரியாதைக் குறைவாக அறைகுறைப் பேச்சில் கதவை மூடுவது பழக்கமாகி விட்டது'' என்று வெறுப்புடன் நினைத்தாள். வேறு என்னதான் செய்வது?

தன் அறையின் ஒடுங்கிய கட்டிலில் அமர்ந்ததும் சுமித்ராவுக்கு நெஞ்சை முட்டிக் கொண்டு வந்தது. சற்று முன் போலவே கன்னங்களையும் உதட்டையும் தன்னையறியாமல் வருடிப் பார்த்தாள். விம்மி வெடித்துக் கொண்டு அழுகை வந்ததது. அவனது நடிப்பு வேடம் எல்லாவற்றுக்கும் மேலாக முட்டாளின் சொர்க்கத்துக்காக ஏங்கிய தன்னை நொந்தே அழுதாள்.

மறுநாள் விசித்திரமான வகையில் சுமிக்குத் தான் தான் தப்பு செய்துவிட்டாற்போலக் குற்ற உணர்வு உண்டாயிற்று— எப்படித் தப்பாகும்? இங்கே இவளுடனும் கொஞ்சல் அங்கே அவளுடனும் குலாவலா? இதென்ன வள்ளி தெய்வானை யுகமா? அந்த மாதிரிப் பங்கு போடல்கள் எல்லாம் எனக்குத் தேவையில்லை என்று ஆத்திரமாக நினைத்தபோது நேரில் பேசும் போது வரும் நிமர்வு வரவில்லை. உள்ளூர பயந்து கொண்டே மெல்லக் கதவை திறந்து தலையை நீட்டிப்பார்த்தாள்.

''குட்மார்னிங்'' என்றான் சந்திரன் கேலிக் குரலில்.

''...'' அவள் பேந்த விழித்தாள்.

''பதிலுக்கு குட்மார்னிங் சொல்லக்கூட உனக்குத் தெரியாதா?'' என்றான் சந்திரன் ஏளனமாக.

''குட்... குட் மார்னிங்'' என்று உளறியடித்துவிட்டு வேகமாக வெளியேறினாள் சுமித்ரா.

அன்று இரவு உணவுக்குச் சந்திரன் வருவதற்கு வெகுவாகத் தாமத் ஆயிற்று. அவனை அழைத்து வருவதற்காக மாடிக்கு வந்தாள் சுமித்ரா. அங்கே அவள் அவளது அறையிலிருந்து வெளியே வருவதைக் கண்டதும் அதிர்ச்சியுற்று நின்றாள்.

அவன் கைகளில் ஸ்க்ருடிரைவர், ஸ்பானர் போன்ற பொருட்களுடன் சுமித்ராவின் அறைக் கதவின் தாழ்ப்பாள்களும் இருந்தன.

பிரமை பிடித்தவள் போலப் பேந்த விழித்துக் கொண்டு நின்ற மனைவியின் முன் நிதானமாக வந்து நின்றான் சந்திரன். கையில் இருந்த தாள்பாளைத் தூக்கிக் காட்டி விட்டு டெலி போன் மேசை மேல் வீசினான். ''அடிக்கடி அனாவசியமான தொல்லை தருகின்றன. அதனால் அகற்றி விட்டேன்'' என்றான்.

நெஞ்சு தடதடக்க செயலற்றுப்போய் மலைப்புடன் அவனை பார்த்துக் கொண்டு நின்றாள் அவனுடைய அருமை மனைவி!

11

சுமித்ரா, அதிர்ச்சியிலிருந்து விடுபடுபவளாகவே தெரிய வில்லை.

சந்திரன் தன் அறைக்குள் சென்று கை கழுவிவிட்டு வந்தான். அப்போதும் அவள் அப்படியேதான் நின்றாள். சொல், செயல், மூளை எல்லாம் வேலை நிறுத்தம் செய்து விட்டாற்

போல. கடைசியாக அவன் தோளைத் தொட்டு ''வா போகலாம்'' என்று அழைத்துச் செல்ல வேண்டியது ஆயிற்று.'' அதன் பிறகுதான் சுயஉணர்வு வந்து ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவனோடு சென்றாள் சுமித்ரா.

இரவு உணவு முடிந்த பின் சில சமயங்களில் சந்திரன் அதிக வேலை என்று சென்றுவிடும் சமயங்களில் — செஸ் விளையாடுவது உண்டு. இன்று சுமித்ரா தானாகவே ''செஸ் ஆடலாமா அப்பா?'' என்று கேட்டாள்.

அவள் செஸ்ஸில் உட்கார்ந்து விட்டால் இப்போதைக்கு அவன் சற்று அகன்று சென்றுவிட மாட்டானா? இந்த நெஞ்சுப் படபடப்பு சற்றுக் குறையாதா என்று நினைத்தாள் சுமித்ரா. ஆனால் அந்தக் கல்லுளிமங்கன் அங்கேயே உட்கார்ந்து விளை யாட்டைக் கவனிக்கத் தொடங்கி விட்டான். சுமித்ராவுக்குச் சிந்தனை செயல்பட மறுத்தது. சிந்தனை இல்லாமல் செஸ் விளையாடுவது எப்படி?

''என்னம்மா விழித்துக் கொண்டு இருக்கிறாய்? காயை வை'' என்று ஊக்கினார் தந்தை.

திடீரென்று பிடிக்கவில்லை அப்பா. போதும் விளை யாட்டு'' என்று எழப் போனாள் சுமித்ரா.

''எங்கே ஓட்டம்? வா நானும் உன் பக்கம் ஆடுகிறேன்'' என்று அவளது கையைப் பற்றி இருத்தினான் சந்திரன். தானும் அவளோடு அதே சோபாவில் உட்கார்ந்து கொண்டு விளை யாட்டைத் தொடர்ந்தான்.

விளையாட்டில் யார் வெற்றி பெற்றார்கள் என்பது கூட சுமித்ராவுக்குத் தெரியாது. தந்தை அறியா வண்ணம் மெல்லக் கையை விடுவித்துக் கொள்ள முயன்று பார்த்துத் தோற்றாள்.

அவனது பிடி தளரவே இல்லை "எல்லாம் பண்ணிவிட்டு நிச் சிந்தையாக விளையாடுகிறாரே" என்று அவளுக்கு ஆத்திரங் கூட வந்தது.

ஆக அப்பா வாயிற்றே என்று சுமி உங்களுக்குச் சும்மா சும்மா விட்டுக் கொடுத்திருப்பாள் போல் தெரிகிறது என்று மாமானாரை கேலி செய்தபடி எழுந்தான் சந்திரன். "வா சுமி தோட்டத்தில் சற்று உலாவிட்டு வரலாம்" என்று அவளை எழுப்பினான்.

"செய்யுங்கள் விட்டுக்குள் ஒரே இறுக்கமாக இருக்கிறது அல்லவா? பின்னிரவில் மழை வரும்போலத் தோன்றுகிறது" என்று ராமநாதனும் எழுந்தார். "குட்நைட் மாப்பிள்ளை குட் நைட் சுமிம்மா."

தோட்டத்தில் அவன் கைப்பிடிமில் இயற்திரம்போல் நடந் தாள் சுமித்ரா.

"காலையில் அவளைச் சந்திப்பார். அதன் பிறகும் என்னி டம் இப்படி நடந்துகொள்ள அவரால் எப்படி முடிகிறது" இது சுமிக்கு விளங்கவில்லை. மனதில் ஒருபாதிக்கு இந்த விவ காரங்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. அதே சமயத்தில் அடுத்த பாதி அவனது அருகாமையை மிகவும் விரும்பியது. இருவகை உணர்ச்சிகளுக்கும் இடையே சிக்கித் திணறினாள் சுமித்ரா.

"ஒரே கொத்தில் மூன்று குண்டு மல்லிகை பூத்து இருக் கிறதுபார்" என்று கவனமாக வளைத்து மேலே படரவிட்டிருந்து கொடிமிலிருந்து அந்தக் கொத்தைப் பறித்தான் சந்திரன். அதை முகர்ந்துவிட்டு "இதை எப்படி உன்தலையில் சூடுவது? எப் படியோ செருகுவார்களே" என்று அவளது கூந்தலின் அருகே கையைக் கொண்டு சென்றான் சந்திரன்.

''அது நிற்காது ஹோர்பின் குத்தவேண்டும்'' என்று மெல்லச் சொன்னாள் சுமித்ரா.

''பின்னே சினிமாவில் எல்லாம் எப்படி நிற்கிறது.''

''அது கற்பனை 'ட்ரிக்' கில் நிஜம் போல உருவகப் படுத்திக் காட்டுகிறார்கள்'' சுமித்ரா.

''ஆமாம் நிஜம்போலத் தோன்றும் பல கற்பனைகள் உண்மையை அநியாயமாகக் கெடுக்கின்றன'' என்றான் சந்திரன். சுமியின் உடல் அதிர்வதை உணர்ந்து அவளைத் திருப்பி, இதோ பார் சுமி நீ முட்டாள் அல்ல வருவதை அதது வரும் போது வருகிற மாதிரியில் எதிர் கொள்ள வேண்டும். சும்மா இல்லாததையும் பொல்லாததையும் எண்ணி மனதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று கூறினான்.

பொல்லாததுதான். ஆனால் வசந்தியின் தொடர்பு இல்லாதது அல்லவே. சுமியின் வேதனையை இருள் மறைத்தது.

இரவில் வழக்கம் போல சுமித்ரா குளித்துவிட்டு வரும் போது அவளது அறைக்கதவு தட்டப்பட்டது.

கதவின் தாளை அகற்றிவிட்டு வருவதற்கு அநுமதி கேட்கிறானே என்று நினைத்தபடி 'வரலாம்'' என்றாள் சுமித்ரா.

கதவு திறந்து வெற்று மார்பின் குறுக்காகக் கையைக் கட்டிக் கொண்டு அங்கேயே நின்றான் சந்திரன்.

சுமியின் இதயத் துடிப்பு பந்தயக் குதிரை போல் ஓடலாயிற்று. பேசாமல் தாமின் படத்தருகே சென்று திருநீறு பூசினாள். கண்ணாடியின் முன் அமர்ந்து கைநடுங்க திலகமிட்டாள். பிறகு ஒன்றும் ஓடாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

சந்திரன் அவளை நோக்கி வருவதை விரிந்த விழிகளு டன் கண்ணாடியில் பார்த்தாள். அருகில் வந்து குனிந்து மனைவியைத் தூக்கினான் கணவன்.

''...ளீஸ்'' என்றாள் சுமி பிரயாசையுடன்.

''இனிமேல் என் அன்பான மனைவியே நீதான் என்னை ''ப்ளீஸ் பண்ணவேண்டும்'' என்று நகைத்து விட்டு அவளைக் கையில் ஏந்திச் சென்றான் சந்திரன்.

இதுவே தினசரி வழக்கமும் ஆயிற்று.

சந்திரன் ஒரு நல்ல ஆசைக் கணவனாக நடந்து கொண் டான். வசந்தியைப் பற்றி மட்டும் மறந்து விட முடியுமானால் சுமித்ரா குறைபட எதுவுமே இல்லை. மறந்துவிட முயற்சியும் செய்தாள். ஆனால் குரங்கை நினையாமல் மருந்து குடிக்க முயன்றவன் கதை தெரியுமல்லவா? அவனைப் போலவே சுமித்ராவும் வசந்தியை மறக்க முடியாமல் திண்டாடினாள்.

சந்திரன் அருகில் இருக்கையில் புதுமணப் பெண்களுக்கே உரித்தான இனிமை நிறைந்த நாணமும் வெட்கமுமாக முகம் சிவந்தாள். ஆயினும் அவனது அன்பில் லயித்து அவனோடு மனம் ஒன்றும் உரிமை தோன்றவில்லை. அந்த மனம் இன் னொருத்திக்குச் சொந்தம் என்ற உணர்வு அவளது அடிமன தில் உறுத்திக் கொண்டே இருந்ததே. சந்திரன் பக்கத்தில் இருந்தால் பெட்டியினுள் பாம்பு போல அடங்கியிருக்கும் அந்த உறுத்தல் அவன் அகன்றால் விசுவரூபம் எடுத்து அவளை வருத்தியது.

ஆனால் அந்த உறுத்தலும் மெல்ல மெல்ல அடங்கலா யிற்று. தன்னால் இயன்ற அளவு நேரத்தைச் சந்திரன் சுமியு டன் கழித்தான்.

மனதுக்குப் பிடித்தமான இசைத் தட்டை ரேடியோ கிராமில் வைத்துவிட்டு தோள் வளையில் அவளை அணைத்தவாறு மணிக்கணக்காக அமர்ந்திருப்பான். அவன் விஷயம் எப்படியோ அவளுக்கு உலகமே மறந்து போகும்.

''என்ன மிருதுவாக இருக்கிறாய் சுமி, பூவிதழ்கூட தோற்றுவிடும்'' என்று பட்டுக்கன்னங்களை வருடுவான். அவள் மெய்சிலிர்த்து அவள் மார்பில் ஒடுங்குவாள்.

ஒருநாள் காலையில் இருள் பிரிந்து ஒளி பெருகி வரும் நேரத்தில் வழக்கம் போலப் பூப்பறித்துக் கொண்டு இருந் தாள் சுமித்ரா. மனதிலோ சந்திரன். லேசான விசில் சத்தம் கேட்கவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சந்திரன்தான். ''இங்கே வா சுமி.'' லேசாகத் தயங்க விழிகளில் மீண்டும் அழைத்தான் அவன். தன்னையும் அறியாமல் ஈர்ப்புண்டு அருகில் சென்றபோது அவளது முகத்தை ஏந்தி நெற்றியில் முத்தமிட்டான் கணவன்.

அன்று சந்திரன் அவளை வற்புறுத்தி தன்னை 'அத்தான்' என்று அழைக்கச் செய்தான். அவனது வற்புறுத்தலில் அழைத்து விட்டு வெட்கம் தாளாமல் தடுமாறினாள் சுமி. தடுமாறுகை மில் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்துவது அவளது வழக்கம். அப்படி அழுத்தும் போது வடிவுற அமைந்த மேல் வரிசைப் பற்கள் சதைப் பற்றுடன் கூடிய ரோஜா இதழ்களின் மேல் அழகுற மின்னும் சந்திரன் கண்டு விட்டால் கணவன் பார்வை யுடன் நெருங்குவான். இன்றும் அப்படி உதட்டை அழுத்தி விட்டு அவனது முத்திரையை வாங்கிக்கொண்டு ஓடினாள். சந் திரனுடைய நகையொலி அவளைத் தொடர்ந்து பன்னீரைத் தூவிற்று.

இப்படிப் பல நூறு சம்பவங்கள். இனிய நிகழ்ச்சிகள் சுமித்ரா வசந்தியை மெல்ல மெல்ல மறக்கலானாள். அவளை நினைக்க நேரமில்லாமல் வேறு ஒன்றும் அவளது கவனத்தைத் தன் வசம் செய்து கொண்டது.

சந்திரனோடு சினிமாவுக்குப் போனபோது சுமித்ரா வழக்க மாகப் பொருட்கள் வாங்கும் ''ஆத்மா டிப்பார்ட் மெண்டல் ஸ்டோர்ஸிஸ்'' மனோஜரிணியைத் தியேட்டரில் சந்திக்க நேர்ந்தது.

''இப்போதெல்லாம் அங்கே வருவதே இல்லையே'' என்று பிலிபிலுவென்று பிடித்து கொண்டார் அவர்.

அவர் கூறியது மெய்தான் – வசந்தி அங்கே வேலை செய்கிறாள் என்பதால் சுமித்ரா அங்கே செல்வதே இல்லை. ஆனால் அந்தக் காரணத்தை அவரிடம் எப்படி சொல்வது? ''நேரமே இல்லை'' என்று. சமாளிக்கப் பார்த்தாள்.

''புதுமாதிரி டெரீன் சேலைகள் வந்திருக்கின்றன உனக் காகக் கொஞ்சம் எடுத்து வைத்து இரண்டு வாரம் ஆகிறது'' என்று குறைப்பட்டார்.

''நாளை மாலை நான் வேண்டுமானால் கூட வரட்டுமா?'' என்றான் சந்திரன் புன்சிரிப்புடன்.

''வேண்டாம் வேண்டாம்'' என்று அவசரமாக மறுத்தாள் சுமித்ரா. ''நானே போய்விட்டு வந்து விடுகிறேன் நாளை நான் கட்டாயம் வருகிறேன் மேடம்'' என்று முடித்தாள்.

மானேஜரம்மாள் சென்றபின் ''இப்போதெல்லாம் உனக்கு நேரமே இல்லை அல்லவா?'' என்று குறும்புச் சிரிப்புடன் அவள் காதில் ரகசியம் பேசினான் சந்திரன்.

மறுநாள் அந்த கடைமில் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பாராமல் நேராக மாடிக்குப் போனாள் போனாள் சுமித்ரா அங்கே அவர் எடுத்து வைத்திருந்த சேலைகளில் இரண்டை வாங்கிக் கொண்டாள். அவரோடு ஒரு கொகோகோலா குடித்து விட் டுக் கிளம்பினாள். வந்தது போலவே சென்றுவிட வேண்டும் என்று நினைத்தவளுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. படி இறங் கும் போதே சுமித்ரா வசந்தியைப் பார்த்துவிட்டாள். ஒரு பெண் ணுடன் எதையோ தீவிரமாகப் பேசிக் கொண்டு வந்தாள் அவள். முகத்துக்கு நேராக அவளை எதிர்பாட விரும்பாமல் மாடிப்படி மின் பக்கவாட்டில் உள்ள முகம் கழுவும் அறைக்குள் புகுந்து கொண்டாள் சுமித்ரா.

ஆனால் வசந்தியும் அவளுடைய தோழியும் அந்த மாடிப் படிமில் பிரிய வேண்டியவர்கள் போலும். இருவருமாக அங்கேயே நின்று பேசத் தொடங்கவும் சுமிக்குச் சங்கடமாகிப் போயிற்று. அதுவும் பேச்சில் சந்திரன் பெயர் அடிபடவும் சங் கடம் வேதனையாகி விட்டது.

''வசந்தி அந்தச் சந்திரனை நீ அடியோடு மறக்க வேண்டும் என்று தான் நான் உனக்கு இங்கே வேலைக்கு ஏற்பாடு செய்ததே. பழைய சூழ்நிலைகள் மாறினால் உன் மனமும் மாறும் என்று பார்த்தேன். ஆனால் நீ இப்படி அவரை அடிக்கடி சந்திப்பதும் டெலிபோனில் பேசுவதும் எனக்கு பிடிக்கவே இல்லை'' என்றாள் அந்தத் தோழி சற்றுக் கடுமை யாகவே.

''பின்னே பதினைந்து ஆயிரம் ரூபாய்க்கு என்னடி வழி அவரிடம்தான் பெற வேண்டும்'' என்றாள் வசந்தி.

''பதினைந்து ஆயிரம்! அவ்வளவு பணம் அவர் தருவா ராடி! என்று வினவினாள் மற்றொருத்தி.

''ஏன் தரமாட்டார்? நான் கேட்டால் முடியாது என்று அவரால் மறுக்க முடியுமா? நிச்சயம் தருவார்'' என்றாள் வசந்தி அழுத்தத்துடன்.

''ஆனால் வசந்தி அந்தப் பணத்தைக் கொண்டு நீ கல்யாணம் செய்து கொண்டால் பிறகு சந்திரன்?''

''அவரைப் பற்றிக் கட்டினவள் கவலை படட்டும் நமக் கென்ன,'' என்றாள் வசந்தி அலட்சியமாக.

''என்னமோடி எனக்குச் சந்தேகம்தான் வசந்தி.''

பார்த்துக்கொண்டே இரு. இன்று மாலையே அவரிடம் அடி அடி அந்த ஆடிமேய்ச்சி சூப்பர்வைசர் வருகிறாள். ஓடு ஓடு இல்லாவிட்டால் பேயாய் அலறுவாள்'' என்றாள் வசந்தி.

ஒருத்தி அவசரமாக மாடி ஏறும் சத்தமும் மற்றவள் இன்னொரு திசையில் செல்லும் ஒலியும் கேட்டது.

உள்ளே சுமித்ரா மெய்யாகவே முகம் கழுவினாள். கண்ணீர் நின்றாலும் கண்ணின் சிவப்பு மறையவில்லை. ஆறிவந்த புண்ணில் அடிபட்டு விட்டாற்போல மனமெல்லாம் வலித்தது.

அன்று மாலை சுமித்ராவைப் பார்த்ததுமே ''என்ன சுமி'' என்றான் சந்திரன்.

''ஒன்றும் இல்லை. சிற்றுண்டி உன்னை வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் சுமித்ரா.

சாப்பாடு மேஜை முன் அமர்ந்தும் ராமநாதன், அவளைக் கவனித்துவிட்டு ''உடம்பு சரியில்லையா கண்ணம்மா? ஒரு மாதிரி இக்கிறாயே?'' என்றார்.

''அதுதான் நானும் கேட்கிறேன்'' என்றான் சந்திரன்.

''தலைவலி'' என்று முணுமுணுத்தாள் சுமித்ரா.

''ஏன்'' என்று ஏழுந்து வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தான் சந்திரன். ''சூடு ஒன்றும் இல்லை ஏதாவது மாத்திரை போட்டாயா? அல்லது டாக்டரிடம் பார்த்து விடலாமா?''

ஆகா என்ன கரிசனம் பல்லைக் கடித்துக் கொண்டு ''இப்போது குறைந்து விட்டது'' என்றாள் சுமித்ரா.

''சின்னய்யாவுக்கு டெலிபோன் இங்கே தொடர்பு கொடுத்தேன்'' என்று வந்தான் பையன்.

எடுத்துப் பேசிய சந்திரனுக்கு முகம் மாறியது. ''எஸ்... எஸ்... சந்திரன்தான் பேசுகிறேன் வா வசந்த்...''

வசந்தி வசந்தியா? சுமித்ரா எழுந்து விட்டாள்.. ''அப்பா நான் சற்று நேரம் தோட்டத்தில் காற்றில் உட்கார்ந்துவிட்டு வருகிறேன்.''

''நாளை பார்க்கலாமே. ஆமாம் காலை ஒன்பது மணிக்கு'' என்று சந்திரன் குரல் தொடர்ந்து கேட்டது.

மல்லிகைப் பந்தலின் கீழ் அயர்வுடன் அமர்ந்தாள் சுமித்ரா. சற்று நேரத்தில் சந்திரனின் அழுத்தமான காலடி ஓசை கேட்டது. உதட்டைக் கடித்தவள் பழைய நினைவில் சட்டென விட்டாள். இப்போது அவன் அணைத்தால் சகித்துக் கொள்ள முடியாது.

அருகில் வந்து அமர்ந்து அவளது கைகளைப்பற்றி வருடினான் சந்திரன். ''ஏன் சுமிம்மா ஏன் தலைவலி வந்தது. சளி பிடித்திருக்கிறதா? குரல்கூடச் சரியாக இல்லையே'' என்றான் அக்கறை உள்ளவன் போல.

இது நடிப்பு என்றால் நம்பக் கூட முடியவில்லையே என ஏங்கினாள் சுமித்ரா. ''இன்று பகலில் மழையில் நனைந்து விட்டேன்'' என்று வெளியே முனகிறாள்.

"என்ன முட்டாள்தனம்? நீ என்ன சிறுபிள்ளையா!", என்று அதட்டினான் சந்திரன். உடனே இதமாக "சரி சரிபோகிறது. இரவில் ஒரு ஆஸ்பிரின் போட்டு கொள். நாளைக் காலையும் அப்படியே இருந்தால் டாக்டரையும் பார்த்துவிட வேண்டும் வா வந்து படுத்துக்கொள்" என்று அழைத்தான்.

"வேண்டாம்", சற்று நேரம் இந்தக் காற்றில் இருந்தாலே சரியாகிவிடும்" என்றாள் சுமித்ரா எங்கோ பார்த்தபடி.

"சரிதான்" என்று சொல்லிவிட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தான் சந்திரன்.

வசந்தியைப் பற்றிய சிந்தனையோ என்று சிந்தை நொந்தாள் சுமித்ரா. இவரால் எப்படி அவளையும் சந்தித்துக் கொண்டு என்னிடமும் சரிசனம் காட்ட முடிகிறது? இரண்டு தாரம் கொண்டவன் இருவரிடமும் பிரியமாக இருப்பானாமே அது இப்படித் தானோ? தாரமா? வசந்தியா? சுமியின் உடல் குலுங்கியது.

"நான் நெத்தியை வருடுகிறேன் நீ தூங்கு" என்று மிருதுவாக அவன் வருடியபோது அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

"ஆனால் மறுநாள் காலையில் "நான் சற்று சீக்கிரம் போக வேண்டும். ஒரு நண்பனைப் பார்க்க வேண்டி இருக்கிறது" என்று அவன் கிளம்பியபோது அவளுக்கு நெஞ்சு கொதித்தது.

திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. ஒருவேளை யாராவது நண்பனாகவே இருக்கக் கூடுமோ? இருக்காதா என்று நப்பாசை உண்டாயிற்று. அவ்வளை அனுப்பி விட்டுத் தந்தையிடம் "நானும் அவசரமாக வெளியேபோக வேண்டும் அப்பா. ஒரு

தோழியை அவசரமாகப் பார்க்க வேண்டி இருக்கிறது'' என்று கிளம்பினாள்.

''தோழியா விரோதியா சுமி? முகத்தை அப்படிக் கோபமாக வைத்திருக்கிறாயே?'' என்றார் ராமநாதன் வேடிக்கையாக.

''இவள்... இவள்... கொஞ்சம் பொல்லாத தோழி அப்பா'' என்று தன் காரை எடுத்தாள் சுமித்ரா.

வெகு விரைவிலேயே சந்திரனின் காரையும் கண்டு விட்டாள். அவள் கண்டு கொள்ள முடியாத அளவு தூரத்தி லேயே அவனைப் பின்தொடர்ந்தாள்.

நேரு பூங்கா அருகே அவன் காரை நிறுத்தினான். காரில் முன்புறமாக வசந்தி ஏறுவதைக் கண்ணால் நேராக கண்டாள் சுமித்ரா. நப்பாசையாய்ப் போகவும் கண்கள் பனித்தன. உடனடி யாக வீட்டுக்கு வர மனம் இல்லாமல் இங்கும் அங்குமாகக் காரிலேயே சுற்றினாள்.

''பதினையாயிரம் தருவார்'' என்று கர்வத்துடன் வசந்தி மின் குரல் கேட்டது. எவ்வளவு நிச்சயமாகச் சொன்னாள்? அவள் அன்பில் அவ்வளவு உறுதி இருக்கிறது சொல்லுகிறாள்; அது கிட்டாத சுமித்ரா பதறி என்ன? கதறி என்ன? கைகுட் டையால் கண்ணைத் துடைத்தாள். இன்னொன்று தோன்றியது. திருமணம் செய்து கொள்ளத்தான் பணம் கேட்கிறாள். போலத் தெரிகிறது. பிறகு சந்திரன் அவளை அவரைக் கட்டியவள்பாடு'' என்று அவள் சொன்னதும் நினைவு வந்தது. பணத்தைக் கொடுத்து விட்டால் பிறகு அவள் தொல்லை இராது அல்லவா? கொஞ்ச நாள் அவளது பிரிவில் சந்திரன் வாடினாலும் பிறகு எல்லாம் சரியாகிவிடாதா? தானா இப்படி எல்லாம் நினைக்கி றோம் என்று சுமித்ராவுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது.

ரோஷம் எங்கோ? பிடிவாதம் எங்கே? எல்லாம் எங்கே போயின? மிச்சம் வைத்த கஞ்சியானாலும் போதும் என்ற பணிவு எப்படி வந்தது? சரிசரி, எப்படியோ வந்துவிட்டது. இப்போது வசந்தி அகன்றால் சந்திரனின் முழு அன்பும் அவளுக்குக் கிட்டக்கூடும். அதுதான் முக்கியம். ஆக வசந்திக்கு அந்தப் பணத்தைச் சந்திரன் கொடுத்து விட்டால் நல்லது.

சந்திரனிடம் அவ்வளவு பணம் கிடையாது என்பது திடீரென்று நினைவு வந்தது அவசர அவசரமாகக் காரைத் திருப்பிக் கொண்டே வீட்டிற்குப் போனாள், தந்தைமிடம் ஓடினாள்.

''அப்பா.''

கைமில் இருந்த ஃபலைக் கைப்பெட்டியுள் வைத்து விட்டு ராமநாதன் நிமிர்ந்தார். ''என்னம்மா?''

''அப்பா அவர் பெயரில் கொஞ்சம் பணம் போடுங்களேன் செலவுக்கு பயன்படும்'' என்றாள் யோசியாமல்?''

''என்னம்மா செலவு? மாதம் ஆயிரத்து ஏழுநூறு மாப்பிள்ளைக்கு வருமே.''

''அது பெரிய பணமா அப்பா? திடீர் என்று பெரிய செலவாக வந்தால் என்ன செய்வார்?'' என்றாள் சுமி சற்று கோபத்துடன்.

''என்னிடம் சொன்னால் வேண்டிய அளவு தந்துவிட்டுப் போகிறேன்.''

''இந்தச் செலவை உங்களிடம் எப்படிச் சொல்லுவார்,'' சுமிக்கு அழுகையும் ஆத்திரமும் பொங்கின. ''என்னப்பா நீங்கள்? எனக்கு ஏதாவது நகை பரிசு கொடுப்பதானாலும் அவர் உங்களிடம் கேட்க வேண்டுமா? ஒரு பதினைந்...

இல்லை இருபதாயிரம் அவர்போரில் போடுங்கள் என்றால் பிகு பண்ணுகிறீர்களே'' என்று படபடத்தாள்.

''அடேயப்பா என் சுமிக்குட்டிக்கடைக் கோபம் வருகிறதே. மன்னித்துக் கொள் கண்ணம்மா, நான் இதை நினைக்கவே இல்லை. இன்றைக்கே மாப்பிள்ளை பெயரில் பணம் போட்டு விடுகிறேன் சரிதானா?'' என்று மகளது கன்னத்தைத் தட்டி விட்டு பெட்டிய மூடினார்.

உடனே சுமிக்கு ஒருமாதிரி ஆகிவிட்டது. ''தப்பாகப் பேசி விட்டேனா அப்பா, என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள் விழிகளில் நீர்மல்க.

''சேச்சே அசட்டுப் பாப்பா'' என்று மகளைத் தட்டிக் கொடுத்து விட்டுக் கிளம்பினார் தந்தை.

சுமித்ரா அமைதியற்றுத் தவித்தாள். இந்தப் பணத்தில் வசந்தி மெய்யாகவே திருமணம் செய்வாளா? இல்லை யென்றால் என்ன செய்வது? சந்திரன் அருகே அமர்ந்து அவள் சென்ற காட்சி மீண்டும் மனதில் தோன்றியது. தாங்கொணா வேதனை யுடன் தவித்தாள்.

இவ்வளவு வேதனைக்கும் காரணமானவளான வசந்திக்கு இன்னொரு காட்சி மனதில் தோன்றி அவளை கொதிக்க வைத் தது. சுமார் ஒரு மாதத்திற்கு முன் சென்டிரல் ரமில் நிலையத் தில் கண்ட காட்சி அது. ஒன்றுவிட்ட சகோதரி ஒருத்தியை வரவேற்க வேண்டா வெறுப்பாகச் சென்றிருந்தாள். சென்றதற்கு நல்ல பலனும் கிடைத்தது. முதல்வகுப்புப் பெட்டி ஒன்றின் எதிரே சுமித்ரா நின்று கொண்டு இருக்கச் சந்திரன் ஓர் அழ கிய சால்வையை அவள் தோளில் போர்த்திவிட்டுக் கொண்டி ருந்தான் அவன் கண்களில் தான் எத்தனை கனிவு! இருக்

காதா பின்னே? பணக்கார மனைவி ஆயிற்றே. இனிப் பழ செல்லாம் மறந்துவிடும். மறந்துவிடுமா என்ன, ஆத்திரத்துடன் அவன் வீடு செல்லும் அளவுக்கு அவகாசம் கொடுத்து அவனுக்கு டெலிபோன் செய்தாள்.

12

இரண்டு நாட்களாகவே சுமித்ராவுக்கு உடம்பும் மனமும் சரியாக இல்லை. சரியில்லாத மனம்தான் உடம்பையும் பாதித் ததோ? கூடவே... அம்மா இல்லையே என்று சுமித்ராவுக்கு இப்போதும் அழுகை வந்தது. சும்மா சும்மா கண்ணில் நீர் கொட்டியது. இது என்ன அழு மூச்சித்தனம் என்று, நினைத் தும் கூட சமாளிக்க முடியவில்லை.

அன்று காலை உணவில் பாசந்தியைப் பார்த்ததுமே சுமித்ராவுக்கு வயிற்றைப் புரட்டியது. ஒருவரும் அறியாதபடி உள்ளே நகர்த்திவிட்டு உணவை அளைந்து கொண்டு இருந் தாள். நல்லவேளையாக மாமாவும் மருமகனும் இவளைக் கவனி யாமல் தொழிற்சாலை விஷயமாக ஏதோ பேசிக் கொண்டு இருந்தனர்.

கடைசியாக ''சின்னம்மா பாசந்தி சாப்பிடல்லே,'' என்று நாயர் கரண்டியை முன்னே நீட்டவும் ''இல்லை'' என்று எழுந்து விட்டாள் ஓடோடி வந்து ''வாஷ்பேசினை, அடையவும் ஓரேடி யாக குமட்டியது குடலும் சேர்ந்து வந்து விழுந்து விடுமோ என்பதுபோல சுருட்டி சுருட்டி வாந்தி எடுத்தாள்.

''என்ன சுமி?'' என்று பதறிக்கொண்டு ஓடி வந்தான் சந்திரன்.

''சில நாட்களாகவே அவள் சரியாமில்லை... கண்ணம்மா என்னடா செய்கிறது?'' என்று எழுந்து வந்தார் தந்தை.

அதற்குள் குமட்டல் கொஞ்சம் நிற்க சுவரில் சாய்ந்து கன்னனை மூடிக்கொண்டு நின்றாள் சுமித்ரா. அவளை இழுத்துத் தன்மேல் சாற்றிக் கொண்டான். ''சுமி என்ன பண்ணுகிறது! டாக்டருக்கு போன் பண்ணட்டுமா?'' என்று கேட்டான்.

''டாக்டர் என்னத்துக்கு? இனிப்பு உண்ணட்டே.'' என்று நாயர் மகிழ்ச்சியுடன் கூவவும் தான் தந்தைக்கும் தாலி கட்டிய வனுக்கும் விஷயம் புரிந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்தனர். பிறகு உரக்கச் சிரித்தனர்.

''என்ன மாப்பிள்ளை ஊட்டி எஸ்டேட் இன்னமும் மார்க் கெட்டில்தான் இருக்கிறது. அட்வான்ஸ் கொடுத்து விடவா? என்றார் ராமநாதன் மகிழ்ச்சியோடு.

மனைவியின் முகத்தைப் பார்த்தான் சந்திரன் ''கொடுங்கள் மாமா ஆனால் சுமி பெயரில் வாங்குங்கள்.

சுமித்ராவுக்குப் புரிந்தது. அன்று தப்பாகப் பேசி விட்டேன் என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. முடியாமல் கண் களில் நீர் திரண்டது. கன்னனைத் திறந்தால் கண்ணீர் சொட்டு சிந்திவிடும் என்று அப்படியே நின்றாள்.

அதற்குள் ராமநாதன் வேறு ஒரு நினைவில் சிரிக்கலானார். ''இப்போதுதான் புரிகிறது மாப்பிள்ளை. அன்றைக்கு சுமி என்னிடம் சாடினாள் பாருங்கள். ''எனக்கு பரிசு வாங்கவும் பணத்துக்கு உங்களிடம் கேட்க வேண்டுமா?'' என்று கேட்டாள். இதற்குத்தானா பரிசு?'' சரிதான் மாப்பிள்ளை என் மகள் உங்களுக்குப் பரிசு தந்து விட்டாள். இனி நீங்கள் பரிசு வாங்க

வேண்டியதுதான் பாக்கி'' என்று மகிழ்ந்து போய்ப் பேசவும் அவளுக்குக் கேட்க சகிக்கவில்லை. அவள் கேட்ட காரணம் எவ்வளவு எதிர்மாறானது நினைக்கவும் வேதனை தாங்க முடிய வில்லை.

மெல்லக் கணவனிடமிருந்து விலகினாள். பேசாமல் மாடியை நோக்கி நடக்கலானாள். ஆனால் கால்கள் பலவீனமா கத் தள்ளாடின. சட்டென அவளை இரு கரங்களிலும் சாத்திக் கொண்டான் சந்திரன்.

''நாயர் எனக்கு இன்னொரு கரண்டி பாசந்தி போடு'' என்று ராமநாதனின் குரல் உற்சாகமாக ஒலித்தது.

அதைக் கேட்டு ரசித்தபடி மனைவியை மாடிக்குத் தூக்கிச் சென்றான் சந்திரன்.

அங்கே கட்டிலில் அவளை மென்மையாகக் கிடத்துவிட்டு அருகே அமர்ந்தான். ''என்னிடம் சொல்லவே இல்லையே சுமிக் கண்ணு'' என்றான் கொஞ்சலாக.

ஆனால் அவள் கட்டிலில் மறுபுறமாகக் கவிழ்ந்தாள். குமுறி குமறி அழத்தொடங்கினாள்.

சந்திரன் திடுக்கிட்டான். ''இங்கே பார் ஏன்? ஏன் அழு கிறாய்... என்ன விஷயம்? எதுவானாலும் என்னிடம் சொல் சுமிம்மா'' என்று எவ்வளவோ சமாதானமாகப் பேசியும் அணைத்து ஆறுதல்படுத்த முயற்சித்தும் பலனின்றி போகவே திகைத்தான். ஒன்று தோன்றவும் சில வினாடி அசைவற்று அமைதியானான். பிறகு ''ஏன் சுமி என் பிள்ளையைத் தாங்க உனக்கு அவ்வளவு தூரம் வெறுப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டான் வேதனையை உள்ளடக்கிய நினைதானத்துடன்.

''இல்லை இல்லை'' என்று அவன் வாயைக் கையால் பொத்தினாள் சுமித்ரா. சொல்ல முடியாத வேதனையுடன் அவளது கண்கள் அவனை நோக்கின.

ஒன்றும் புரியாமல் ''என்னமா சொல்'' என்று உருகிப் போனான் அவன்.

பார்வையைத் தாழ்த்திக் கொண்டு ''வசந்திக்குப் பதினைந்து ஆயிரம் ரூபாய் கொடுத்து விட்டீர்களா? அதற்குத்தான் உங்கள் பெயரில் பணம் போடச் சொன்னேன்'' என்று விம்மினாள் சுமித்ரா.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு ''உனக்கு யார் சொன்னது?'' என்று இரைந்தான் சந்திரன்.

''நீங்கள் அவளைச் சந்திப்பது எனக்குத்... தெரியும்''

''மேலே சொல்லு'' என்றான் அவன் அவளையே பார்த்தபடி.

''வேண்டுமானால் அவளையும்...'' என்று மேலே பேச முடியாமல் விம்மினாள் அவள்.

''சுமித்ரா.'' என்று அவள் தோளைப் பற்றிக் குலுக்கினான் சந்திரன். ''உனக்கு ஒன்றும் சரியாகப் புரியவில்லை. புரிந்ததும் தலைகீழாக, இன்றைய மன நிலையில் ''வசந்தி'' என்ற பெயரையே நான் அடியோடு வெறுக்கிறேன்'' என்றான் எரிச்சலுடன்.

சுமித்ரா வியப்புடன் விழித்தாள்.

''ஆம் சுமி. முன் அவளை நான் விரும்பியது மெய்தான்.

ஆனால் திருமணத்துக்குப் பின் நான் அவளைச் சந்திக்க முயன்றதே இல்லை. பூனாவிலிருந்து திரும்பி வந்தோமே அன்று

அவளாகவே எனக்கு டெலிபோன் செய்தால் வரச்சொன்னாள். திடீரென்று ''பதினையாமிரம் ரூபாய் கொடு. அல்லது உங்கள் சுமித்ராவிடம் நம் கதை எல்லாம் சொல்லுவேன் என்று மிரட்டத் தொடங்கி விட்டாள். பழைய கதை எல்லாம் பேசி உன் மனதை வருத்த எனக்கு மனம் இல்லை. அதோடு அப்போதுதான் நம் உறவு கொஞ்சம் சீர்படவும் தொடங்கி இருந்தது. அதைக் கெடுக்கவும் எனக்குப் பிரியம் இல்லை. ஆனால் ஒரு ''பிளாக் மெமி''லுக்குப் பணிவதும் என்னால் இயலாத காரியம். அவளைச் சந்தித்ததெல்லாம் அவளது மிரட்டல் தவறு, அதில் காரியம் நடக்காது என்று எடுத்துச் சொல்லத்தான். அவளா னால் வரதட்சிணைக்காக அந்தப் பணம் வேண்டும் என்று ஒரே காலில் நின்றாள். நீயானால் என்மேல் சந்தேகப்பட்டாயாக்கும் முட்டாள். சுமி உன்னைவிட்டு ஒரு கணமும் பிரிய முடியாமல் தவித்தேனே. அது கூடவா உனக்குப் புரியாது போயிற்று'' என்றான் சற்றுக் கோபமாகவே.

''நான் இதை'' என்று முகம் சிவக்கத் தடுமாறினாள் சுமி.

''சொல்லு சுமி. சொல்லி முடி. நீ முட்டாள் அல்ல என்பது எனக்குத் தெரியும். பின் நீ ஏன் என்னை அறிந்து கொள்ள வில்லை?''

பதில் சொல்லாமல் அவன் விடமாட்டான் என்பதைக் கண்டு கொண்டு தலைநிமிராமல் ''நான் அதை வயதின் பசி என்று நினைத்தேன். அவளை நினைத்து என்னை – என்று முனு முனுத்தாள்.

அவன் பிரமித்துப் போனான். 'எப்படி? எப்படி? அவளை நினைத்து உன்னை...யா? அதெப்படி முடியும் முட்டாள். முழு முட்டாள். வெறும் உடல் பசி என்றால் அதை அடக்கிக் கொள்ளச் சக்தி அற்றவனா நான்? அதோடு உன் மனம் என்னி

டம் படர்ந்துவிட்டது என்பதை புரிந்துக் கொண்டிராவிட்டால் உன்னைத் தொட்டிருப்பேனா? நம் வாழ்க்கைத் தரத்தின் வித்தியாசத்தில் குழம்பிக் கொண்டு இருக்கிறாய் என்று நான் நினைத்துக் கொண்டு இருக்க நீயானால்... சே, அசட்டுப் பெண். எல்லாம் இந்தக் கண்ட கண்ட கதைகளைப் படிப்பதால் வந்த வினை. முதலில் அவைகளைக் கொளுத்த வேண்டும்'' என்றான் கோபமாக.

மெல்ல மறுபுறம் திரும்பி, ''அது மட்டும் இல்லை. முன்பே வசந்தியைப் பற்றிப் தெரியும்'' என்று தயக்கத்துடன் கூறினாள் சுமித்ரா.

அவளைத் தன் பக்கம் திருப்பி ''எப்போது? எப்படி? என்ன தெரியும் உனக்கு!'' என்று விசாரணை செய்தான் அவன்.

''... ... ...''

''சொல்லு சுமித்ரா. இனி இந்தக் குழப்பம் எல்லாம் இருக்கக் கூடாது. மனதில் இருப்பத்தை எல்லாம் சொல்லி விடவேண்டும்'' என்றான் சந்திரன் இதமாக. ஆனால் கண்டிப் பான குரலில்.

''நம் திருமணத்தன்று தெரியும். வரவேற்புக்கு முன்னால் ஆயாவுக்கு இப்போது மருத்துவமனையில் இருக்கிறாளே அந்த ஆயாவுக்கு – அலங்காரத்தை காட்டிவிட்டு வந்தேன். நீங்கள் வசந்தியோடு பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன்...'' பழைய நினைவில் அவள் முகம் வாடியது.

அவன் யோசனையோடு, ஓகோ! அதனால் தான் அன்று இரவு அப்படி நடந்து கொண்டாயோ? பணத் திமிர் என்று நான் நினைத்தேன் சுமி. பிறகும் அந்தஸ்து வேற்றுமை என்று குழம்புகிறாய் என்று நினைத்தேன். பாவம் எவ்வளவு வேதனைப்

பட்டாயோ'' என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான். ''சுமி என்னைப்பார் முன்னே எப்படியோ? உன்னை நான் வருத்தப்பட வைப்பேனா? உன் மகிழ்ச்சிக்காக நான் எதையும் செய்வேன் என்று புரியவில்லை? உனக்கு என்ன வருத்தம் என்றாலும் என்னிடம் சொல்ல வேண்டாமா?'' என்று அவள் முகத்தை நிமிர்த்தினான்.

''இப்போது தெரிகிறது'' என்று அவன் கையைப் பற்றித் தன் கன்னத்துடன் இணைத்துக் கொண்டாள் சுமி.

அவன் குனிந்து அவள் நெற்றிமில் முத்தமிட்டான். பிறகு கையை விடுவித்துக் கொண்டு எழுந்தான். ''இதோ வருகிறேன் சுமி'' என்று எழுந்து சென்றான். டெலிபோனை எடுத்துப் பேசினான். ''மாமாவா?'' மாமா, அடிக்கடி ஒன்று சொல்வீர்களே. நினைவிருக்கிறதா? ''நானும் மாப்பிள்ளையாக இருந்தவன் தான் எனக்கும் புரியும்'' என்பீர்களே இப்போது புரிந்து கொள்ளுங்கள்; நான் அலுவலகத்துக்கு இப்போது வரவில்லை. மதியத்துக்கு மேல் வருகிறேன். ம்? என்ன மாமா,... ஓகோ. சரி சரி, என்று சிரித்துக் கொண்டே டெலிபோனை வைத்தான்.

மீண்டும் அவன் அவள் அருகே வந்து அமரவும் சுமித்ராவின் முகம் சிவந்தது ''அப்பா என்ன நினைப்பார்?'' என்றாள் வெட்கத்துடன்.

முகவாயைத் தடவிக் கொண்டு அவன் வெகு தீவிரமாக யோசித்தான். ''என்ன நினைப்பார்?... கொஞ்சம் கஷ்டமான கேள்விதான். இன்னொருத்தர் நினைப்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? ம்? அவர் என்னதான் நினைத்திருப்பார்? ஆ கண்டு பிடித்து விட்டேன். சொல்லட்டுமா, சுமி? ''அப்பா ஆகப்போகிறோம் என்று இந்த மாப்பிள்ளைப் பயலுக்குத் தலை கால்

தெரியவில்லை பெண்டாட்டியை விட்டு நகர மாட்டேன் என்கிறானே! என்று நினைப்பார் சரிதானா?'' என்று அவள் காதோரம் குனிந்து அவன் சொன்னபோது அவள் முகம் இன்ன மும் அதிகமாகச் சிவந்து போயிற்று.

சற்றுப் பொறுத்து அவனது திண்ணென்ற தோளைத் தடவியபடி சுமி மெல்லக் கேட்டாள். ''ஒன்று சொல்லட்டுமா?''

''ஒன்றென்ன? ஓர் ஆயிரம் சொல் கண்ணே. கேட்கி றேன்.'' என்று வசனம் பேசினான்.

வந்து... வசந்திக்கு அவள் கேட்ட பணம் கொடுத்து விட்டால் என்ன?'' எனவும் அவன் முகம் மாறியது.

''நோ'' என்றான் ஒன்றைச் சொல்லாக. பிறகு ''என்னை என்னவென்று'' என்று கோபமாகத் தொடங்கினான்.

அவன் வாயை விரலால் பொத்தி அவள் சொன்னாள் ''பாருங்கள். நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம். ''பார்க்கப்போனால் இது அவளது பாக்கியம். நான்தான் தட்டிப் பறித்துவிட்டேன். அவள் இன்னொரு பாதை காணவேனும் இது உதவுமே. அவளும் திருமணம் செய்து கொள்ளத்தானே கேட்கிறாள்.

''நான் பயந்து பணிவதாக நினைப்பாள்'' என்றான் அவன் கோபமாகவே.

''நீங்கள் கொடுக்க வேண்டாம் நானே கொடுக்கிறேன். ''இதை வைத்து மகிழ்ச்சியாக இரு'' என்று சொல்லி விட்டுக் கொடுக்கிறேன். தயவு செய்து எனக்காகச் சரி என்று சொல் லுங்கள்'' என்றாள் செஞ்சுதலாக.

ஒரு கணம் மனைவியை கூர்ந்து பார்த்த அவன் முகம் மலர்ந்தது. ''ஒரு நிபந்தனைக்கு நீ ஒத்துக் கொண்டால் சம் மதம் தருவேன்'' என்றான் பிகுவோடு.

''என்ன?'' என்று ஆவலோடு கேட்டாள் சுமித்ரா.

'நீயாக இங்கே தரவேண்டும்.'' என்று தன் உதடுகளைத் தொட்டுக் காட்டி குறும்பாக நகைத்தான் சந்திரன்.

அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

முற்றும்

வளை ஓசை



ரமணிசந்திரன்